VINAYAGAR
ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

இ. கி. ச. இந்துக் கல்லூரி

சஞ்சிகை

# "உள்ளக் கமலம்"

# "Ullak Kamalam"

TA-8

R. K. M. HINDU COLLEGE, TRINCOMALEE.

*Magazine*

1982

## திருக்கோணமலை இந்துக்கல்லூரி

# கல்லூரி கீதம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே எங்கள்
கோணேநகர் இந்துக்கல்லூரி வாழ்கவே

ஆதி அந்தம் இல்லாத ஆண்டவன் தெய்வம்
அன்னையும் பிதாவும் எங்கள் முன்னெறி தெய்வம்
எண்ணோடு எழுத்ததனை ஈபவர் தெய்வம் இனி
என்றுமவரையே பணிந்து இனிது வாழுவோம் (வாழ்க)

நல்ல உள்ளம் வளர்ப்போம் உடல் உறுதி வளர்ப்போம்
கலைக்கல்வி வளர்ப்போம் தூய செல்வம் வளர்ப்போம்
நல்லவரை நாடிநிதம் நல்வழி நிற்போம் இந்த
நாட்டினிற்கே சேவை செய்து நாமும் வாழுவோம் (வாழ்க)

முத்தமிழும் கற்றுவேலை வித்தையும் கற்போம் உயர்
சத்தியமும் ஐக்கியமும் வாழ்விலமைப்போம்
வித்தை தரும் கோணேநகர் இந்துக்கல்லூரியின்
உத்தமராய் ஆசிரியர் தமைப் பணிவோம். (வாழ்க)

TA-8

# இ. கி. ச. இந்துக் கல்லூரி
திருக்கோணமலை.

★

SHANTHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# "உள்ளக் கமலம்"

★

# R. K. M. HINDU COLLEGE,
TRINCOMALEE.

★

1982

SHANTHY PRINTERS
575. K. K. S. ROAD.
JAFFNA.

தொகுப்பாசிரியர்கள்:

திரு. சு. செல்வரத்தினம்

திரு. சி. வைகுந்தசாமி

திரு. து. குலவீரசிங்கம்

ஜனுப் ரா. மரைக்கார்

TA-8

# பொருளடக்கம்

ஆசிச்செய்திகள்:

பக்கம்

சுவாமி பிரேமாத்மானந்தா .... .... .... 1
கௌரவ ரணில் விக்கிரமசிங்க .... .... .... 2
திரு. இ. சம்பந்தன் (பா. உ.) .... .... .... 3
திரு. அ. தங்கத்துரை .... .... .... 5
திரு. ஜயதிஸ்ஸ அமரசிங்க .... .... .... 6
திரு. எஸ். அம்பலவாணர் 7
திரு. எஸ். இளையதம்பி .... .... .... 9
திரு. V. சிவானந்தன் ஜே. பி. .... .... .... 10
*Mr. P. Ramachandra M. A. (Hons.)*
by Dr. S. Sivanandan

ஆசிரியர் முன்னுரை

*The Ramakrishna Mission Hindu College, Trincomalee.*

பரிசளிப்பு விழா .... .... .... .... 11
சுவாமி விபுலானந்த அடிகளார் .... .... .... 20
சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேலு
இந்துக்கல்லூரியின் தாயகம் .... .... .... 22
வே. இராமகிருஷ்ணன்
கல்லூரியின் முன்னேற்றம் .... .... .... 25
மு. கோ. சங்கரதாஸ்
விஞ்ஞானமும் மனிதவாழ்வும் .... .... .... 26
திருச்செல்வம் இராஜ்குமார்
திருமதி இ. கந்தையா .... .... .... .... 28
திருமதி ம. பாலசுப்பிரமணியம்
''தந்தை தாய் பேண்'' .... .... .... .... 29
ப. கோணேசரஞ்சன்
அன்பே சிவம் .... .... .... .... 30
ந. சக்தீதரன்
நான் விரும்பும் விஞ்ஞானம் .... .... .... 31
வி. பிரவீன்குமார்
உலக சமாதானத்திற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பங்களிப்பு 33
சு. ரவீந்திரன்
விஞ்ஞானத்தின் பயன்கள் .... .... .... 36
சி. சிவவரதன்
எனது பொழுதுபோக்கு .... .... .... .... 39
தி. பிரிதிவிராஜ்
சூழல் மாசடைதல் .... .... .... .... 41
க. இரமணீதரன்

பக்கம்


அலைகள் ஓய்வதில்லை .... .... .... .... 43

பி. மகேந்திரபாலா

*English in our Schools* .... .... .... .... 46

S. Ratnadeepan

*An Evening by the Seaside* .... .... .... 47

R. Ramanan

விதியா? வினையா? .... .... .... .... 48

கே. ஶ்ரீதரன்

மலரட்டும் புதிய யுகம் .... .... .... .... 51

என். எம். நிஜாம்

விலைவாசி நாளும் விஷம்போல ஏறும் .... .... 52

த. சச்சிதானந்தன்

நெஞ்சு பொறுக்குதில்லையே .... .... 55

மா. பிரபாகரன்

இலங்கையின் ஜனநாயகம் .... .... 57

க. ஜெயக்குமார்

இ. கி. ச. மத்திய மகாவித்தியாலய சைவசமய ஐந்தாண்டறிக்கை 59

கிறீஸ்தவ மாணவர் மன்றம், இந்துக்கல்லூரி .... .... 61

தி/இ. கி. மி. இந்துக்கல்லூரி இஸ்லாமிய மஜ்லிஸ் .... 62

இந்துக்கல்லூரி உள்ளக விளையாட்டுக் கழகம் .... .... 64

சிவானந்த இல்லம் .... .... .... .... 65

இராமகிருஷ்ண இல்லம் .... .... .... .... 66

விவேகானந்தா இல்லம் .... .... .... .... 67

விபுலானந்த இல்லம் .... .... .... .... 70

*Report of the School Band* .... .... .... 71

*Tutorial Staff as on 1st March, 1982* .... .... 73

விளையாட்டுத்துறை .... .... .... 74

கல்லூரி நூலகம் – அறிக்கை .... .... .... 77

இந்துக் கல்லூரி இலக்கிய மன்றம் .... .... .... 78

இந்துக் கல்லூரி சாரணர் இயக்கம் .... .... .... 79

மாணவர் தலைவர்குழு அறிக்கை .... .... .... 80

சிறப்புப் பாசறை .... .... .... .... 81

ஆசிரிய கழகம் – 1981 .... .... .... .... 82

*List of Old Boys of T/R. K. M. Hindu College* .... .... 84

*Our Students Successful in University Entrance Exams.* .... 90

*School Development Society Office Bearers – 1979/80* .... 92

*School Development Society Office Bearers – 1981/82* .... 93

இந்துக்கல்லூரி அபிவிருத்திச்சபை ஆண்டறிக்கை .... 94

து. தவசிலிங்கம்


'நன்றி மறவேல்' எனும் நற்பண்பில் நாம் .... 95

## SWAMI VIPULANANDA



OUR FOUNDER

# OUR NEW BLOCKS




SARIALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# OUR PRINCIPAL




## PROPOSED ADMINISTRATION, ASSEMBLY HALL, AND LIBRARY FOR R K M HINDU COLLEGE TRINCOMALEE.





எங்கள் கனவு நனவாகுமா?

# OUR VICE - PRINCIPAL






BOARD OF PREFECTS




HINDU ASSOCIATION

Phone { Ashrama: 88253
Cultural Centre: 84629

RAMAKRISHNA MISSION
(Sri Lanka Branch)
40, Ramakrishna Road,
COLOMBO - 6.

# ஆசிச் செய்தி

நிலத்தை உழுது பண்படுத்தி, எரு இட்டு, விதை தூவி, நீர்ப்பாய்ச்சி, களை நீக்கி, வளர்த்து நல்ல விளைச்சலைப் பெறுமாறு போல, சிறு உள்ளங்களாகிய நன்னிலத்தைப் பண்படுத்தி, நற்கருத்துக்களாகிய விதைகளை இட்டு, கெட்ட வாசனைகளாகிய களை அகற்றி, அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்களாகிய நீரைப்பாய்ச்சி, அறிவூட்டி வளர்த்து, உலகம் பாராட்ட உயர் நெறி நின்று வாழும் உத்தமர்களை ஆக்கித்தருகின்ற கல்விக் கூடங்கள் நாட்டின் உயிர்நாடிகள். இப்படியான ஒரு கல்வி நிலையமாக திரிகோணமலை இராமகிருஷ்ணமிஷன் இந்துக்கல்லூரி விளங்குவதாக. சுவாமி விவேகானந்தர் காட்டிய கல்விக்கொள்கையை அறிந்துணர்ந்து அதன்வழி ஒழுகினல் நிச்சயம் நாம் கொண்ட குறிக்கோள் நிறைவுபெற வழிபிறக்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் சுவாமி விவேகானந்தர் ஆகிய திரிமூர்த்திகளின் வாழ்வை, போதனையை மாணவ சமுதாயம் கற்றுணர்ந்தொழுகி நற்பேறு பெற இக் கல்லூரி வழிகாட்டுவதாக. அதிபரும் ஆசிரியர்களும் சிறுவர் உள்ளங்களில் நற்பண்புகளை உருவாக்கும் சிற்பிகளாக அமைவார்களாக. மாணவ சமுதாயம் கடமை உணர்ந்தொழுகி உலகம் உவப்ப வாழும் உத்தமர்களாக உருப்பெறுவார்களாக.

இக்கல்லூரி, உலகத்துக்கே ஒளிபரப்பும் உயர் கல்விக்கூடமாக அமைவதாக என இறையருளை வேண்டி எனது ஆசிகளையும் தந்து நிறைக்கிறேன்.

**சுவாமி பிரேமாத்மானந்தா**
தலைவர் (ஸ்ரீ லங்கா கிளை)

கொழும்பு.

*Message from*

# Hon. Ranil Wickremasinghe

Minister of Education, Youth Affairs and Employment.

Ramakrishna Mission Hindu College is one of the leading Educational Institutions in Trincomalee and I am aware that it caters to the needs of students from all over the District. Established in early 1920s by leading Hindu residents of the area this institution counts over 60 years of dedicated Missionary Service fulfilling educational needs of this remote and comparatively backwards District. Over these long years it has built up traditions that impart to its pupils a complete and wholesome education. As Minister in charge of Education I have great pleasure in sending my best wishes to the continued growth and success of this foremost Educational Institution in Trincomalee District.

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

I consider it a privilege to be able to send this message to the School Magazine of Ramakrishna Mission Hindu College.

Rama Krishna Mission Hindu College is one of the foremost Educational Institutions in the Trincomalee District. The future of the youth of Trincomalee is dependent to a considerable degree upon the progress and attainments of this college.

At a time when far reachings changes are proposed to be effected in the educational structure in this country, schools have to gear themselves to meet many new challenges. The public of Trincomalee took forward with confidence to Rama Krishna Mission Hindu College dedicating itself to the fulfillment of their expectations.

The school has progressed considerably in recent times. While our thanks are due, for its achievements in the past, to the Principal and the members of the staff, greater progress has to be made to meet the challenges of the future.

The parents and the students themselves have a key role to play. I wish to appeal to the parents and the students to contribute their mite to face these challenges with success.

I wish the college all the best and earnestly look forward to it occupying a place of pride amongst the foremost schools in this country.

Trincomalee.

**R. Sampanthan** M. P.

# பாராளுமன்ற உறுப்பினரின் ஆசியுரை

இராமகிருஷ்ண மிஷன் இந்துக்கல்லூரியின் சஞ்சிகைக்கு ஆசியுரை கூறக்கிடைத்தமை பெரும் பேறெனக் கருதுகின்றேன்.

திருக்கோணமலை மாவட்டத்திலே அதி முக்கியத்துவம் வாய்ந்தது இ. கி. ச. இந்துக்கல்லூரியாகும். திருக்கோணமலை இளைஞர்களின் எதிர்காலம் இக் கல்லூரியின் வளர்ச்சியிலும், சாதனைகளிலுமே குறிப்பிடக்கூடிய அளவிற்குத் தங்கியுள்ளது. இலங்கை நாட்டின் கல்வி அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் தீர்மானிக்கப்படும் காலத்தை அண்மித்துக்கொண்ட இவ்வேளையில்; பாடசாலைகள் இச்சவால்களை ஏற்கக்கூடியவகையில் வழி நடத்தவேண்டும். இ. கி. ச. இந்துக்கல்லூரி தன்னைத்தானே தியாகம் செய்து பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைக்குமென்று திருக்கோணமலை மக்கள் பூரண நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

இந்தக் கல்லூரி அண்மைக்காலங்களில் குறிப்பிடக்கூடிய வளர்ச்சியை அடைந்துள்ளது. கடந்த காலங்களில் இக்கல்லூரி ஈட்டிய சாதனைகளுக்காக அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைக் கூறும்போது, எதிர்காலத்தில் இவற்றைவிடப் பெரிய தேர்ச்சிகளை ஈட்டவேண்டுமென்பதற்காக சோதனைகளையும் சந்திக்க வேண்டும் என்று கூறுகின்றேன்.

பெற்றோரும் மாணவரும் மிக முக்கியமான பங்கினை தாங்கிட வேண்டும். பெற்றோரும், மாணவர்களும் இச்சோதனைகளை சாதனைகளாக்கக் கூடிய மனப்பாங்கினைப் பெற்றிருக்க வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

திருக்கோணமலை.

**R. சம்பந்தன்** (பா. உ.)

மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவரின்

# ஆசியுரை

விபுலானந்த அடிகளாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, இன்று எமது மாவட்டத்திலேயே ஒரு சிறந்த, உயரிய கல்வி ஸ்தாபனமாக மிளிர்ந்து கொண்டிருக்கும் இராமகிருஷ்ண சங்க, இந்துக்கல்லூரியின் வெளியீடான இம்மலருக்கு என் ஆசிச்செய்தியை அளிப்பதில் மிகவும் மகிழ்கின்றேன்.

திருக்கோணமலையின் கல்வி வரலாற்றை இ. கி. ச. இந்துக்கல்லூரியின் வரலாற்றிலிருந்து வேறாகத் தனிமைப்படுத்தி நோக்கமுடியாது. அந்தளவிற்கு திருக்கோணமலையின் கல்வி வரலாற்றில் இக்கல்லூரிக்குச் சிறப்பானதும், தனியானதுமான ஒரு இடம் உண்டு. எமது மாவட்டத்தின் பழம்பெரும் கல்வி ஸ்தாபனங்களில் ஒன்றான இக்கல்லூரி தனது படிப்படியான வளர்ச்சியின் மூலம், எமது மக்களுக்கு தனது கல்விச் சேவைகளை ஆற்றுவதில் முன்னேறிவருவது பாராட்டப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

ஒரு சமுதாயத்தின், சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு அம்சங்களின் விருத்திக்கு கல்வி ஒரு அடிப்படையானதும், முதன்மையானதுமான காரணியாக அமைகின்றது. எனவே எமது மக்களின் பலதுறை சார்ந்த விருத்திக்கு கல்வியை ஒரு பயனுள்ள சாதனமாக அமைக்கவேண்டுமாயின், நாம் எமது பாடசாலைகளின் வளர்ச்சிக்கான செயற்றிட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்தவேண்டும். இது இன்று எமக்கு முன்னுள்ள காத்திரமான ஒரு பிரச்சினையாகும்.

இவ்வகையில் இக்கல்லூரி எமது மக்களின் பல்துறை சார்ந்த விருத்திக்கு உழைக்கின்ற ஒரு ஸ்தாபனமாக மென்மேலும் வளர்ச்சியடைந்து, கல்வியில் பின்தங்கியிருக்கின்ற எமது நிலையை மாற்றி கல்வி வளர்ச்சிக்கான சகல பணிகளையும் வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மூதூர். அ. தங்கத்துரை

# Message

I am glad that Hindu College, Trincomalee has shown fresh enterprise by starting this College Magazine for the first time, and it gives me great pleasure in sending a message.

Working through years with dedication, in an atmosphere of academic zest and religious devotion the institution has been able to achieve a worthy record of success. In an age when values are changing fast, the world needs today, more than ever before, such guidance to the younger generation to appreciate and preserve things of perennial value without which life itself will be of little meaning. It is everyone's duty to strive to achieve this end.

You will, I am sure, look back with gratitude to those who have served the institution so well in the past, and as time passes, I hope you will be able to reach greater heights in your aspirations.

Trincomalee,
January 4, 1982.

**Jayatissa Amarasinghe**
Regional Director of Education

திருக்கோணமலை வட்டாரக் கல்வி அதிகாரி

# திரு. ஐ. துரைராசசிங்கம் அவர்களின்

## ஆசியுரை

திருக்கோணமலை இந்துக் கல்லூரியின் புதிய கட்டிடத் திறப்பு விழாவை யொட்டி ஒரு நினைவுமலர் வெளிவருவதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

திருக்கோணமலையின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்கை அளித்துவரும் இக் கல்விக்கூடம் புதிய கட்டிடங்களால் ஓங்கி வளர்ந்திருப்பதுபோல் கல்விப்பணி புரிவதிலும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்கோணமலை இளைஞர்களின் கல்வி வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய் இருந்து அயராதுழைக்கும் ஆசிரியர்களையும் அதிபர் திரு. அ. சிவலோகநாதன் அவர்களையும் மனமார வாழ்த்துகிறேன்.

இக்கல்லூரி இராமகிருஷ்ண சங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட கல்வி ஸ்தாபனம் என்பதை உணர்ந்து பணியாற்ற வேண்டும்.

கிழக்கிலங்கை மக்களின் கல்வி வளர்ச்சிக்காகத் துறவறம்பூண்டு பணி புரிந்த சுவாமி விபுலானந்தர் தன் அருமைக் குழந்தைகளில் ஒன்றாகப் போற்றி வளர்த்த இக்கல்வி ஸ்தாபனம் அப்பெருமகனார் எண்ணிய எண்ணங்களைப் பூர்த்தி செய்யவேண்டி இறைவனை இறைஞ்சுகிறேன்.

ஐ. துரைராஜசிங்கம்
வட்டாரக் கல்வி அதிகாரி

Your mind should become a stage on which the characters come and go; you should become absorbed in your book, lost in the scenes it creates.

— Lyon

★ ★ ★

"I soon found out" he (Socrates) said that poets do not compose poetry because they are wise, but because they have a certain nature or genius, which is capable of enthusiasms.

— Abercrombie

# MESSAGE



I am deeply honoured by the request for a message for the Magazine of the R. K. M. Hindu College, Trincomalee. It has been my privilege to be associated with this institution, as its first Science Master in 1934 and later as its Principal from 1954 to 1963. In response to this request, I am happy to send this brief note.

The institution has some unique features. It has an inspiring location overlooking this esplanade towards the sacred Konesar Temple on Swami Rock and further beyond towards the expance of the Blue Ocean. It stands as a symbol of the survival of the Hindu Culture and tradition against overwhelmingly hostile and alien elements. It holds aloft the flag of universalism and tolerance in accord with the teaching of the prophet of Dakshineswar.

It is a singularly notable circumstance that the official name of the college, which is now a totally government concern, is preceded by the three letters R. K. M. which stand for Ramakrishna Mission. There were similar abbreviations preceding the names of various schools in the denominational era of education. These have more or less disappeared and replaced by new letters connoting more mundane matters. It should be noted that the college was the first to come under the direct management of the R. K. M. in Sri Lanka. The retention of these letters reflects a tenacity to hold fast to its past roots and traditions. I hope it would continue for all time.

This implies that the college shares, however indirectly, the lustre and prestige of an international organization with the most profound religious and social objectives. It would also have to share the responsibility of maintaining certain standards which are implicit in this association. It should patiently build up public trust in its integrity and excellence of its administration and efficiency. The workers and students should be guided by the ideal of the Mission that "Work is Workshop".

It is one thing for a College to produce a galaxy of doctors, engineers, professors, administrators and even great devotees, but quite another to make the Man whom Swami Vivekananda had in view a man of shining character who would gladly follow a career of personal poverty and sacrifice to render selfless service to his less fortunate brethren. The destiny of this country depends on the ability of our schools to produce at least a few of these great ones. It is with a sense of deep humility that I invoke the blessings of Sri Ramakrishna for the continued progress of this institution and for the fulfillment of its inspired aims.

**S. Ambalavanar**
Emeritus Principal

# MESSAGE



I am glad to learn that Trincomalee R. K. M. Hindu College is going to bring out a school magazine at the end of this year. The people of Trincomalee had the unique pleasure of getting the first educational institution organized in the East Coast of Sri Lanka by the greatest literary savant - monk who was a proud son of the soil, namely the late Srimath Swami Vipulananda Maharaj.

Having been one of the earliest pupils of this College living with the Swamiji and the first Principal, Mr. K. Ramasamy Iyer M. A. L. T. I am fully aware of the immense assistance rendered by the people of Trincomalee to make it a premier institution in the District and later as the first past pupil to have had the pleasure of guiding its destinies under trying circumstances. I reminisce with gratitude that the co-operation of parents, past pupils and well - wishers was readily available, as at the initial stages of its organization in any activity that would not only elevate educational standards to regain prestige but also diseminate the culture and spiritual heritage of the Ramakrishna Mission.

I greatly appreciate the interest and earnestness evinced by the School Development Society headed by the Principal in desiding to publish a magazine that would serve as a source of inspiration to all those who have come into contact with the institution while reflecting its progress in various fields.

May the blessings of Baghavan and the Spirit of Srimath Swami Vipulananda Maharaj be always with the School Development Society to guide its undertakings towards a complete success.

**S. Eliathamby**
Emeritus Principal

# Message

It is with great pleasure I give an account of my Alma Mater where I received my education from child hood. Then it was known as Hindu School. It had a small number of students in the roll with a limited number of teachers. I wish to single out two of the teachers, whom I had the privilege of studying under them namely Messers C. Kathiravetpillai and V. Kulandavelu, (popularly known as Gopal Master) These two teachers are men of great calibre and interlect. They shove hard to bring the school to a very good footing by producing students of great eminence. This could not have been easily achieved if not by hard work, dedication, diligence, and keen sense of devotion to duty. I always felt a sense of fear in them as they were stern and strict disciplinarians. Simultaneously they were kind and lovable and took great care on students who showed great aptitude for learning. The students who had the good fortune to study under them are to-day men of great standing in the Town. It is through their perseverance and unflinching enthusiaism the school was upgraded as a Grade I College. I am very proud to say that this College ranks with any other leading Colleges in Sri Lanka. This institution participates in all activities connected to Colleges and earned great name and fame in inter College contests. It has a well equipped Science Laboratory and produced several students to the Medical Profession etc. It is my fervent wish that this Hindu College should grow from strength to strength and be a reputed College.

I wish the College all success.

**V. Sivanandam** J. P.

263, Dyke Street,
Trincomalee.
24th August, 1981.

## ஆசிரியர் முன்னுரை:

# உள்ளக்கமலம் மலர்கின்றது....

சுவாமி விபுலாநந்தரின் அருள் உள்ளத்தெழுந்து; அரவணைப்பிற் தவழ்ந்து; ஈழமெங்கனும் குன்றனைத் தீபமாக ஒளி வழி காட்டுவது திருக்கோணமலை இ. கி. ச. இந்துக் கல்லூரியாகும்.

அடிகளார் இறைவன் உவக்கும் மலர்களாக அர்ப்பணித்தவையும் மலர்களாகும். அவற்றுள் முதன்மையானது உள்ளக் கமலமாகும். அம்மலரே எமது கன்னி மலராக அச்சுவாகனமேறிப் பவனிவந்து உம் கரங்களிற் தவழ்கின்றது.

"உள்ளக் கமலம்" கல்லூரியின் கையேடாக மாணவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. காலச்சுழற்சியில் அவ்வேடானது தொடர்ந்து மலராது முகைக்குள் அமைந்துவிட்டது. தென் கயிலைநாதனின் அருட் கதிர் முகைக்குள் மலராத மலராகத் தேக்கி உரிய காலத்தில் முகை வெடிக்கப்பண்ணி மலர வைத்துள்ளார். அம் மலரே உங்கள் கைகளை அலங்கரிப்பதாகும்.

நல்லிதயங்கள் பல நம் முது சொத்தான கல்லூரியின் சாதனைகள் அழியா உருப்பெற வேண்டுமென முயன்றதன் பயனே உள்ளக் கமலம் உதயமானதன் நிலைகளாகும்.

தூயவர்கள் ஆற்றிய நற்பணிகள் புறத்தே வானோங்கி நிற்கின்றன. அறிஞர்கள் ஊட்டிய அகத்துணர்வின் பரிமளிப்பே உள்ளக் கமலம். கமல மலரை உங்கள் கரங்களிற் தந்து நுகருங்கள். காலஞ் செப்பாது மொழியுங்கள் என்று அமைகின்றோம்.

**"உள்ளக் கமலமடி உத்தமனர் வேண்டுவது"**

— சுவாமி விபுலாநந்தர்

**தொகுப்பாசிரியர் குழு**

# Mr. P. RAMACHANDRA M. A. (HONS.)

## PRINCIPAL EMERITUS, R. K. M. HINDU COLLEGE, TRINCOMALEE.

As any other student I am too proud of my College namely R. K. M. Hindu College, Trincomalee where I came under the direct influence of Mr. Ramachandra. I was a hosteler living under the same roof where Mr. Ramachandra resided. In appearence, he was a smart young man with a dynamic personality, whose beaming eyes could observe many things that students did not like to be noted while in the class room. In his capacity as principal he set an example to other members of the staff and maintained a high standard of discipline, the lacking of which today is the cause of many ills in schools and Colleges. Swami Vipulananda a Tamil Scholar Monk of the Ramakrishna Mission came from Batticaloa and took charge of the management of Hindu College, Trincomalee. The Swami went to the Madras University and personally selected Mr. Ramachandra to be appointed as the Principal. For Hindu College to have a Master's Degree person with Hons. in English as Principal at that time was a great leap forward. After the take over of the administration by Mr. Ramachandra the college started preparing students to sit the Cambridge Senior examination and the London University Matriculation the passing of the latter entitling the student to enter any Commonwealth University. As there was only a Chemistry Laboratory at that time the subjects offered by students for external examinations were not properly selected to persue studies in Medicine or Engineering. Mr. Ramachandra was a well informed person and could speak on any subject in a public platform and the audience would remain spell bound till his speach was over. In the class room he would monitor the happenings through one Sangarapillai who until recently was in Public Service. It was second world war at that time and it was a practice among the higher class students to talk of Adolf Hitler of Germany and his success or the success of Britain and her allies. Sometimes the discussions took the shape of a mini war in the class room and it is at that time Mr. Ramachandra would step in with the remark "you fellows have no time to study your lessons but find the time to talk of World War disturbing the other classes" and use the cane. As a teacher he was par excellence being gifted with a powerful memory. For example he would resume a class taken by him the previous day in English Literature at the very place where he left at the ringing of the bell for all this he never used a pencil mark. It was really very pleasing to attend his class dealing with texts on Shakesphere, Authors like Milton and Addidon too which normally are not so interesting were enjoyed for the language in his class. He started the student Parliament, which was modelled on the lines of the State Council. This was intended to prepare the students for public life. True to his expectation four Hindu College Students became Members of Parliament namely Mr. A. R. A. M. Aboobucker, Mr. S. M. Manikkarajah, Mr. B. Neminathan and Mr. Sivasitamparam of Vavuniya. Mr. Ramachandra was a dramatist, flute player and in sports a good tennis player. He retired from Hindu College and took up the post of Professor of English at Annie Besant Theosophical College in India. I was fortunate to meet him in this College before his demise.

**Dr. S. SIVANANDAN,** *Old Boy,*
*R. K. M. Hindu College.*

17-9-81.

# The Ramakrishna Mission Hindu College, Trincomalee.

Trincomalee is a place of deep spiritual and historical significance to Ceylon. Tradition, history and mythology have combined to make Trincomalee a centre of Hindu worship and pilgrimage. Sri Konesar, the presiding deity of Trincomalee whose greatness has been extolled in the Puranas has received the veneration of the great Hindu saints. The shrine dedicated to the Great Lord has been sanctified in the hymns of Saints Sampanthar and Arunagiri. To the Hindus of Ceylon, Trincomalee is sacred soil.

From the dawn of history, it held the key to power in Asia. Throughout the centuries, the great nations of the world vied with each other for the possession of its magnificent harbour so beautifully placed in the heart of the Indian Ocean. The hills and waves of Trincomalee have stood in silent witness to many a clash of arms, the rise and fall of empires and the conflict of cultures. The serene atmosphere is replete with a strange admixture of the spiritual and temporal, mythology and history, western power and eastern calm.

The Hindu College at Trincomalee is a symbol of the struggle of a people for the preservation and survival of their cultural and religious traditions, which were threatened in the whirlpool of the historical process. The progress, the college has made is not only a vindication of the internal strength of its ideals but also a pointer to the important role it has to play in the new social cultural context of renascent East.

The beginings of the College can be traced to the late nineties of the last century, when a band of devoted, enthusiastic and selfless workers of the Hindu Community in Trincomalee took over from the government, the management of a small and tottering school housed in a humble shed. The spirit of dedication and service shown by this voluntary body of Hindu workers and the selfsacrifice of the few teachers who were then employed in the school carried the instituion through this period of great trials and perils. It was then only a primary school. In 1922, the school was registered as an elementary school and was managed by a board of directors consulting of some of the leading Hindu residents of the town.

In 1924, the arrival of the late Srimath Swami Vipulananda heralded in the new era in the history of Hindu education in the Eastern province. The Swami by his profound scholarship, wide experience and knowledge of the educational problems of the country, his religious zeal and fervour and his progressive outlook captivated the hearts of one and all who came in contact in him. He immediately began to devote his remarkable talents to the task of organising the educational activities of the Ramakrishna Mission in the true spirit of the great ideals of renunciation and service of his order.

The Hindu public of Trincomalee was quick to grasp the helping hand proffered by so eminent a leader. In 1925, the Board of Directors which was then under the Chairmanship of the late Mr. Valli-

purampillai Mudaliyar decided to handover the management of the school to the Ramakrishna Mission. Under the fostering care of the Mission and the wise and personal direction of the Swami the school began to expand. The attendance went up, the teaching staff increased both in numbers and in quality and more permanent buildings were added. The Hindu public of the town rose to the occasion and contributed their mite to the building up of the institution. A spacious hall with an impreseive frontage, now known as the Kaliappu Mantapam was erected and declared open by the Governor H. E. Sir Herbert Stanley in 1927. Mr. K. Sinnathamby came forward with a handsome endowment of Rs. 10000/-. In 1932, the college was raised to the Senior Secondary Status. In 1934, an elegant Hall was erected in memory of the late Mr. P. K. Sampanthar by his wife and relatives.

The intervention of the second world war completely arrested the progress of the college during the years 1940 - 1945. The buildings were taken over by the military and in the wake of the general evacuation it ceased to function for a short while. It was re-started in a small rented house and in 1945 after a period of three years it was able to come back to its own premises. From then it was possible to make headway. Friends and old-boys of the college again rallied round the institution and helped to reconstruct the broken structure. The old boys association financed the erection of a block of two large classrooms. In 1947, Mr. Haradasa donated the library building in the name of his father the late Mr. Noris de Silva. To meet the growing demand for accomodation the adjoining compound was acquired and a block of 4 class-rooms was erected. The science laborataries were refilled and equiped and in 1952 the status of the college was raised to Grade I.

In 1955, to provide suitable accomodation for the increasing numbers an ambitious building scheme was started and the ground floor of a two-storied building was completed. In the same year Mr. S. Kanapathipillai of Nilaveli donated a property carrying an assessed rental value of Rs. 1200/- per annum for the use of the college. In the meantime, mainly due to the efforts of a keen and devoted staff, the college has built up a reputation for quiet efficiency and success in the academic and extra moral activities. It will thus be seen, that the growth of this institution represents the result of a great co-operative endeavour of a people to preserve the moral and spiritual values which they hold dear and reflects the new outlook in Hinduism expounded by the great Swami Vivekananda the ideal of a man-making, and strength growing religion that will be devoted to the service of man as the visible manifestation of Godhead.

Today, as a leading Collegiate institution in East Ceylon, its contribution to the education of youth is a source of pleasure to all who have associated with it. It has yet many wants and limitations and are immense scope for development and progress lies ahead. The early struggles, the chequered history, the present position and the future scope of the college bring to ones' memory the words of the ancient sage:

"*Sharp as a blade of razor,*
*The way so hard to find*
*Yet do not despond, Awake, Arise*
*Struggle on and stop not till the goal is reached.*"

---

**Article taken from "Ramakrishna Mission Services in Ceylon" with the kInd permission of Authority.**

# தி/இ. கி. ச. இந்துக்கல்லூரி, திருக்கோணமலை
# பரிசளிப்பு விழா 1981

## அதிபரின் அறிக்கை

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய முதன்மை விருந்தினர் திரு. அம்பலவாணர் அவர்களே! திருமதி அம்பலவாணர் அவர்களே!

கௌரவ விருந்தினரான எமது தேசியப்பேரவை உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் அவர்களே! திருமதி சம்பந்தன் அவர்களே!

மதிப்பிற்குரிய மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரை அவர்களே! திருமதி தங்கத்துரை அவர்களே!

அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலாளருமாகிய திரு. லயனல் பெர்ணுண்டோ அவர்களே!

கல்விப் பணிப்பாளர் திரு. ஜெயதிஸ்ச அமரசிங்கா அவர்களே! பிரதம கல்வி அதிகாரி திரு. சற்குணராசா அவர்களே, வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஐ. துரைராசசிங்கம் அவர்களே, பெற்ருேர்களே, சகோதர ஆசிரிய ஆசிரியைகளே, சபையோர்களே, அன்புள்ள மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் அன்புகனிந்த வணக்கம்.

திரு. அம்பலவாணர் அவர்களை எமது அழைப்பைப் பெருமனதுடன் ஏற்று, இப்பரிசளிப்பு விழாவிற் பிரதம விருந்தினராக எம்மத்தியில் அமர்ந்திருப்பதைக்கண்டு பெருமகிழ்வும் பெருமிதமும் அடைகின்ருேம்.

இன்று இக்கல்லூரி ஒரு சிறந்த உன்னத நிலையை அடைந்திருக்கின்றதென்ருல் தாங்கள் இக்கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் வகுத்த உயரிய திட்டங்களும், தங்களது தன்னலங்கருதாத முயற்சியும், சேவையுமாகும். அவற்ருலேயே இன்று இக்கல்லூரி இம்மாவட்டத்திலேயே பெருந்தொகையான மாணவர்களை ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்துக் கனுப்புவதிற் சிறந்த ஒரு கல்லூரியாகத் திகழ்கிறது.

இவ் உயரிய சேவையை ஆற்றிய தங்களை இவ்விழாவிற் பிரதம விருந்தினராக வரவேற்பதில் பேருவகை கொள்கின்றேன்.

திருமதி அம்பலவாணர் அவர்களே! நமது சிருர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் பரிசில்களை அவர்கட்கு வழங்க முன்வந்தமை எம்மைப் பெருமிதமடைய வைத்துள்ளது. தங்களை வரவேற்பதில் எமது கல்லூரி மேலும் புனிதமடைகின்றது. திரு. அம்பலவாணர் அவர்களின் ஒப்பற்ற பணிக்கு உறுதுணையாய் இருந்து ஊக்குவித்த தங்களின் குடும்பசேவை பாராட்டிற்குரியது. தங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

திரு. சம்பந்தன் அவர்களே! மக்களின் சேவையையே உயிர்மூச்சாக்கிக் குறிப்பாக எமதினத்தின் விமோசனத்திற்காக உங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் நீங்கள் இம்மாவட்டத்தின் கல்விவளர்ச்சியே ஜீவநாடியென்றுணர்ந்து திட்டமிட்டு அயராது செயலாற்றுகின்றீர்கள். இம்மாவட்டத்துக்குத் தரமான கல்லூரிகள் உருவாகவேண்டும் என்ற உயரிய நோக்கோடு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து பெருந்தொகையான நிதித்தொகையை ஒதுக்கீடுசெய்து தந்துள்ளீர்கள். இதனுல் இடவசதியின்மை தளபாடப் பற்றுக்குறை என்பன ஓரளவு நீங்கியுள்ளது. இன்று தரமான ஆய்வுகூட வசதிகளும் எமக்குக் கிடைத்துள்ளது. மாணவர் சமுதாயம் நன்றிமறவாப் பண்புடன் தங்கள் சேவையை நினைவுகூரவேண்டிய கடமைப்பாடுடையவர்கள்.

திரு. அ. தங்கத்துரை அவர்களே! தாங்கள் திருக்கோணமலைக்கு ஆற்றுகின்ற சேவைகளை யாம் அறிவோம். திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபைக்குத் தங்களைத் தலைவராகத் தெரிவுசெய்தமை மிகப்பொருத்தமானதாகும். தங்கள் தலைமையில் இம்மாவட்டம் நிச்சயமாகச் சிறந்த அபிவிருத்தியடையுமென்பதில் ஐயமில்லை. உங்களையும் இவ்விழாவிற்கு அழைத்ததில் பெருமிதமடைகின்றேன். இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் தங்களின் பேருதவியும் கிடைக்குமென்று நிச்சயமாக நம்புகின்றேன்.

திரு. லயனல் பெர்ணுண்டோ அவர்களே! தாங்கள் இம்மாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று வந்திருப்பது நிம்மதியும் மகிழ்ச்சியும் ஊட்டும் தித்திப்பான நிகழ்வாகும். தங்களுடைய வழிநடத்துதலில் எமது கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தங்களையும் இவ்விழாவிற்கு வருக வருக என அழைக்கின்றேன்.

கல்விப் பணிப்பாளர் திரு. ஜயதிஸ்ச அமரசிங்க அவர்களே! இம்மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காகத் தாங்கள் சிறந்த சேவையாற்றி வருகின்றீர்கள். எங்கள் கல்லூரியின் வளர்ச்சியில் தாங்கள் காட்டிவரும் ஆர்வத்துக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். தங்களை இவ்வைபவத்தில் வரவேற்பதில் நான் பெருமிதமடைகின்றேன்.

பிரதம கல்வியதிகாரி திரு. சற்குணராஜா அவர்களே! விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியில் பேரார்வமுடைய தங்களைப் பிரதம கல்வியதிகாரியாகப் பெற்றமை பெரும் பேருகும். எதிர்காலத்தில் விஞ்ஞானத்துறையில் உயர் கல்விநிலை உன்னதமான நிலையைப்பெறும் என்பதனை நாம் திடமாக நம்புகின்ருேம். தங்களையும் இக்கல்லூரியின் விழாவுக்கு வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஐ. துரைராஜசிங்கம் அவர்களே! தங்களது அயராத உழைப்பால் இவ்வட்டாரத்தின் கல்விநிலை உயர்ந்துவருவதை அறிவோம். இக்கல்லூரி தங்கள் வட்டாரத்தில் உன்னத நிலையை அடையவேண்டுமென்பதே தங்களது உயர்வான ஆர்வம் என்பதை நாம் தங்களின் ஆலோசனைகளின் வழியே உணர்கின்ருேம். உங்களது ஒத்துழைப்பால் இக்கல்லூரி மேலும் ஒளிமயமாக அமையுமென்பது எமது அசையாத நம்பிக்கையாகும். தங்களையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் விஞ்ஞானம் முதன்மை இடத்தைப் பெறுவதைக் கோடிட்டுக் காட்டுவதற்கு எமது விஞ்ஞானத் துறைக்கான வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆர். எம். ஜே. தங்கராசா அவர்களின் வழிகாட்டலும் பேருதவியுமே காரணமாகும்.

விளையாட்டுத்துறைக் கல்வி அதிகாரி திருமதி கமலப வின்லோ அவர்கள் எம்மீதும்; எமது கல்லூரியிலும் வைத்திருக்கும் ஆர்வமும் வழிகாட்டலுமே எமது விளையாட்டுத்துறை பிரபல்யமானதிற்குக் காரணமென்பதைக் கூறுவதிலும் பெருமைப்படுகின்ருேம்.

பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே தங்களின் பேராதரவும் ஆலோசனையும் இக்கல்லூரி இம்மாவட்டத்திலேயே குன்றின் மேல் தீபமாக விளங்க வழிவகுக்கும் என்று இதயபூர்வமாக நம்புகின்ருேம். உங்கள் ஒவ்வொருவரையும் வருக வருக என்று வரவேற்கின்ருேம்

**கல்விக் கொள்கையில் மாற்றங்கள்:**

ஒரு நாட்டில் ஏற்படுகின்ற சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்கள் கல்வியின் நோக்கங்களையும் மாற்றமடையச் செய்கின்றன. இதனுல் காலத்திற்குக் காலம் கல்விமுறைகளையும் பரிசீலனை செய்து மாற்றவேண்டிய கட்டாயநிலை ஏற்படுகின்றது. இலங்கையிலும் கல்வித் திட்டங்களில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. கல்வித்திட்டங்களை மாற்றம்செய்யும் போது அம்மாற்றத்தின் அம்சங்களை நன்கு திட்டமிட்டு உருவாக்கிப் பரிசீலிக்கப்பட்டபின் பயன்பாட்டுச் சாத்தியங்கள் இருந்தால்மட்டுமே அவை செயற்படுத்தப்படவேண்டும். நாட்டின் பொருளாதார அமைப்புக்கு எந்தவிதத்திலும் ஒவ்வாத திடீர்த்திட்டங்கள் அவசரமாகச்

செயற்படுத்தப்பட்டால் மாணவர்களின் எதிர்காலமும் தீடீர்ப்பரீட்சை அமர்வுகளினுல் பாதிக்கப்படும். இதன் விளைவினுல் மாணவர்கள் விரக்தியும் குரோதமும் அடையநேரிடும். கல்வித்திட்டங்கள் மாணவர்களின் உளப்பாங்கினை சமூக இயைபுக்கேற்ப உருவாக்கத் தவறிவிட்டன என்பது வெள்ளிடைமலை, ஆயினும் அண்மையில் இவ்வரசினுல் வெளியிடப் பட்டிருக்கும் வெள்ளை அறிக்கையின் சிபார்சுத் திட்டங்கள் மாணவர்க்கும் நாட்டிற்கும் நல்ல பயன்களை நல்க வல்லன என நாம் நம்புகின்றேம். அவற்றை மனப்பூர்வமாக வரவேற்கின் றேம். அதன் சிறப்பம்சங்கள் சிலவற்றைக் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேம்.

1. ஆங்கிலம் ஆறும் வகுப்புத்தொடக்கம் பல்கலைக்கழக புகுமுக வகுப்புவரை கட்டாயபாடமாக்கப் பட்டிருத்தல்.
2. சேவைக்குமுன் நியமனம் பெறும் ஆசிரியர்கள் பயிற்றப்படல்;
3. மாவட்ட அடிப்படையில் ஆசிரியர் நியமனம்;
4. கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சிகள்.
5. திறந்த பல்கலைக் கழகங்கள்.
6. கல்லூரிகட்குத் தொலைக்காட்சி உபகரணங்கள் வழங்கல். இக்கட்புல கல்வி வளர்ச்சி நெறியானது, ஆய்வுகூடங்கள் இல்லாது அல்லற்படும் பின்தங்கிய திருக்கோணமலை மாவட்டம்போன்ற பகுதி மாணவர்கட்கு ஒரு வரப்பிரசாதமாகும்.
7. தேசிய கல்விச்சபை உருவாக்குதல் இத்திட்டம் அரசியல்சார்பற்ற கல்வித்திட் டங்களை வகுக்கவும் வழிப்படுத்தவும் உருவாக்கப்படுவதை நாம் வரவேற்கின் றேம்.

எந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும்போதும் ஏற்கனவே உரிய தரத்தினைப் பெற்று உயர்நிலையிலுள்ள கல்லூரிகளின் தனித்துவம், தரம் பாதிக்கப்படாதவாறு வேண்டிய கவனம் செலுத்துவது மிகமிக இன்றியமையாததாகும்; மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் எத்திட்டத்திற்கும் எம்மாலான ஒத்துழைப்பை நல்குவோம்.

மாணவர்கள்:

எமது கல்லூரியின் மாணவர் தொகை 613 ஆகும். இத்தொகை விஞ்ஞானம், வர்த் தகம் கலைப்பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

புலமைப்பரிசில்:

ஆறும் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. உயர்தர வகுப்புவரை 17 மாணவர்கள் புலமைப்பரிசில்களைப் பெறுகின்றனர்.

மாணவர் வரவும் சிலகாலங்களில் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. இந்நிலைமை யைச் சீரமைக்கப் பெற்றேர், பாதுகாவலர் கல்லூரி நிர்வாகத்துக்கு ஒத்துழைப்புத் தரும்படி வேண்டுகின்றேம்.

ஆசிரியர்:

இக்கல்லூரியில் 28 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றர்கள். இவர்களில் இருவர் பகுதி நேர ஆசிரியர்களாவர். கடந்த ஆண்டுகளில் எமது கல்லூரியில் பணியாற்றி இடம்மாறிச் சென்றேர் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| திருவாளர்கள்: | ஜே. ஏ. மரியதாஸ் | நைஜீரியா |
| | ம. மகாலிங்கம் | ஜெர்மனி |
| | வே. சிவானந்தநாயகம் | கிண்ணியா ம. வி. |
| | வே. வரதசுந்தரம் | தி/த. மே. த. வி. |
| | வே. மதிபாலசிங்கம் | மாங்குளம் ம. வி. |
| | எஸ். கே. பஞ்சரெட்ணம் | ஆய்வுகூட உதவியாளர் கி. ம. வி. |
| | ந. தவபாலன் | பலாலி ஆ. ப. கலாசாலை |

எமதாசிரிய குழுவின் முன்னிலையாசிரியர்களில் திருவாளர்கள் வே. தில்லைநாதன், ஆ. நவரத்தினம் ஆகியோர் முறையே ஆங்கில சமூகக்கல்வி சேவைக்காலப்பயிற்சி முதன்மையாசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுக் கடமை செய்கின்றனர்கள். தம் ஆசிரிய பயிற்சிக் காலத்தில் எமது கல்லூரியுடன் இணைந்து கடமையாற்றிய திரு. ரி. நடராஜா, செல்வி ந. சண்முகசுந்தரம் ஆகியோருக்கும் உளம்கனிந்த நன்றிகள்.

சென்ற ஆண்டு தொடக்கம் எங்கள் ஆசிரியர் குழுவில் சேர்ந்த திருவாளர்கள் ச. குணரத்தினம், ந. சிவகடாட்சம், எல். பி. ஞானப்பிரகாசம், த. சச்சிதானந்தராஜா, ஆ. அருணகுமார், கெ. சித்திரவேலாயுதம், சி. சிறிஸ்கந்தராஜா, க. சண்முகநாதன் எல். திருச்செல்வம், ஜனப் ஆர். மரைக்கார், வி. எஸ். ஈஸ்வரதாசன், ஜனப் டி. எப். யூசுப் ஜான், திருமதிகள் இ. புஷ்பநாதன், வை. தேவசுந்தரம் ஆகியோரையும் சிற்றூழியரான திரு. கே. திருஞானசம்பந்தரையும் வரவேற்கின்றோம்.

**பிரியாவிடை:**

கடந்த 25 ஆண்டுகளாக சிறந்த கவனத்துடனும் தளர்வடையா ஊக்கத்துடனும் மாணவர் நலனே தன்நலன் என்னும் நோக்குடனும் சேவையாற்றிய திருமதி இ. கந்தையா ஆசிரியை அவர்கள் சேவையிலிருந்து சென்ற சித்திரை மாதத்துடன் ஓய்வுபெற்றுள்ளார். இவர் இக் கல்லூரியின் பாரம்பரியங்களைப் பேணுவதிலும் சமயவிழாக்களை விமரிசையாக நடத்துவதிலும் எமக்கு நல்கிய பேராதரவினை என்றும் மறக்க முடியாது.

**அஞ்சலி**

எமது கல்லூரியிற் பல ஆண்டுகளாகச் சேவையாற்றியவரும் இக்கல்லூரி பலதுறைகளிலும் வளர்ச்சியடைய அயராது உழைத்தவருமான காலஞ்சென்ற முன்னாள் அதிபர் இராமச்சந்திர ஐயா அவர்களுக்கும் முன்னாள் ஆசிரியர்களான திருவாளர்கள் வி. குழந்தைவேலு, கதிரவேற்பிள்ளை அவர்களுக்கும் எமது அஞ்சலிகளைச் செலுத்திக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

**பரீட்சைப்பேறுகள்:**

எமது கல்லூரியில் இருந்து பெருந்தொகையான மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக்கழகத்திற்கு சிறப்பாக விஞ்ஞானத்துறைகளுக்கு அனுமதிபெறச் செல்கின்றனர்கள். கடந்த ஆறு ஆண்டுகளில் நாம் தொடர்ச்சியாக பெற்ற பேறுகள் பின்வருமாறு.

| ஆண்டு | மருத்துவத் துறை | மிருக வை. துறை | விவசா. வி. துறை | உயிரியல் வி. துறை | பொறி துறை | பிரயோக விஞ். | கட்டிட நி. துறை | பௌதி. வி. துறை | கலைத் துறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1975 | 2 | — | — | 1 | 2 | 3 | — | 3 | 11 |
| 1976 | 3 | — | — | 4 | — | 2 | — | 8 | 2 |
| 1977 | 5 | — | — | 4 | 1 | — | 1 | — | 8 |
| 1978 | 5 | 1 | — | 5 | 3 | — | 1 | 3 | 8 |
| 1979 | 1 | — | — | 5 | 5 | — | — | 4 | 3 |
| 1980 | 5 | — | 2 | 3 | 1 | — | — | 7 | — |

க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பேறுகள்:

1979ல் 56 பேர் 6 பாடங்களுக்கு மேல் சித்தியடைந்தார்கள். மிகச் சிறந்த பெறுபேறு 7D 1C
1980ல் 21 பேர் 6 ,, ,, ,, ,, ,, ,, 6D 2C

**விவேகானந்தாப் பரீட்சை:**

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சையில் எமது கல்லூரியிலிருந்து தோற்றிய மாணவர்களுள் பெருந்தொகையானோர் விசேட சித்தியடைந்ததுடன் பதக்கங்களையும் நூற் பரிசுகளையும் பெற்றனர் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**விளையாட்டுகள்:**

சிலகாலமாக எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை சற்று மந்தமாகத்தான் இருந்தது. இதற்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியரான திரு. மகாலிங்கம் அவர்கள் ஜெர்மனிக்குச் சென்றதினால் இப்பொறுப்பை ஏற்கத் தகுந்த ஆசிரியரில்லாமையே மேற்குறிப்பிட்ட நிலைக்குக் காரணமாகும். இப்பொழுது திரு. எஸ். ஈஸ்வரதாஸ் அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் இத்துறையும் மிளிரத் தொடங்கிவிட்டது.

உள்ளக விளையாட்டுத்துறைக்கென கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினர் பெரும் நிதி உதவியுள்ளனர். பூப்பந்து, மேசைப்பந்து, கரம், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளுக்கான உபகரணங்களை அவர்களின் நிதியிலிருந்து வாங்கியளித்துள்ளோம். மாணவர்கள் தமது ஓய்வு நேரங்களில் இவற்றைப் பயன்படுத்துவதோடு இல்லரீதியாகப் போட்டிகளையும் ஏற்படுத்தி மாணவர்களையும் ஊக்கிவிக்கின்றோம். மேசைப்பந்தாட்டத்திற்கு திரு. ஜி. எல். லூயிஸ் அவர்களும், கரம் விளையாட்டுக்கு திரு. உ. மனோகரன் அவர்களும், சதுரங்க விளையாட்டிற்கு திரு.ச. குணரெட்ணம் அவர்களும் பொறுப்பாக உள்ளனர். திருக்கோணமலையிலுள்ள விளையாட்டுக் கழகங்களால் நடாத்தப்படும் போட்டிகளில் நாம் தவறுவதில்லை. உதைபந்தாட்டத் துறையிலும் குறிப்பிடக்கூடிய நிலையையடைந்துள்ளோம். அகில இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்படும் போட்டிகளிலும் நாம் பங்குபற்றுகின்றோம். ஆனால் நாட்டில் ஏற்பட்ட பதட்டநிலை காரணமாக வெளியூர்களில் நடைபெறும் போட்டிகளில் பங்கு கொள்ளமுடியாமற் போய்விட்ட துர்ப்பாக்கிய சூழ்நிலைக்காக வருந்துகின்றோம்.

15 வயதுக்குக் கீழ்ப்பட்ட மாணவர்களுக்காக வட்டாரரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வட்டாரத்தில் முதலாம் இடத்தையும் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் எமது கல்லூரி பெற்றுள்ளதென்பதைப் பெருமையுடன் கூறவிரும்புகின்றேன்.

மெய்வல்லுநர்ப் போட்டிகள் வருடாவருடம் சிறப்பாக நடைபெறுகின்றன. சென்ற வருடம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஐ. துரைராசசிங்கம் அவர்களும் இவ்வாண்டு நகராண்மைக்கழகத் தலைவி செல்வி சரஸ்வதி சுவாமிநாதன் அவர்களும் பிரதம விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

வட்டார மட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர்ப் போட்டியில் 25 இடங்களைப் பெற்றதுடன் அகில இலங்கை மட்டத்திலும் கலந்துகொள்வதற்காகக் கீழ்க்காணும் மாணவர்கள் தகுதி உள்ளவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செல்வர்கள் ஏ. ஆர். மகறூப், ஜி. முருகையா, என். சுதர்சன், ரி. ஞானசம்பந்தன், ஏ. சுந்தரராசா, ஜே. எம். றிஸ்வி, எஸ். அபூபைதா.

மென்பந்து கிரிக்கெற்

பல்வேறு விளையாட்டுக் கழகங்களினால் காலத்திற்குக் காலம் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கற் போட்டிகளில் எமது மாணவர்களும் பங்குபற்றிச் சிறப்பான முறையில் விளையாடினார்கள். இதற்குப் பொறுப்பாசிரியர்களாக ஜனாப் எம். ஆர். மரைக்கார், திரு. ஏ. எஸ். கிருபைராஜா ஆகியோர் தம் கடமைகளைச் செவ்வனே செய்துள்ளனர்.

## பிற நிகழ்ச்சிகள்:

எமது மாணவர்கள், வெளிக்கழகங்கள் ஸ்தாபனங்கள் நடாத்துகின்ற சகல போட்டிகளிலும் மிக ஆர்வத்தோடு பங்குபற்றித் தம் திறமைகளைச் சாதனைகளாக்கியுள்ளனர். அவற்றுள் சில பின்வருமாறு,

திருக்கோணமலை லயன்ஸ் கழகத்தினரால் கல்லூரிக்கிடையில் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கீழ்க்காணும் மாணவர்கள் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

16 வயதுக்கு மேல் செல்வன் சு. அருள்பாஸ்கரன்.

16 வயதுக்குக் கீழ் செல்வன் ஏ. நிசாந்திரகுமார்.

சான்றிதழ்கள் பெற்றோர்:- 16 வயதுக்கு மேல் செல்வன் எம். கலீல். ரகுமான்
16 வயதுக்குக் கீழ் செல்வன் சி. சண்முகராஜா.
செல்வன் ஜெ. ஜெயகாந்தன்.

திருக்கோணமலை கல்வி வட்டத்தினரால் நடாத்தப்பட்ட ஐ. நா. தினப் பேச்சுப்போட்டியில் 1979-ல் பரிசில்கள் பெற்றோர் விபரம்:

ஆங்கிலப் பேச்சு சிரேஸ்ட பிரிவு முதலாம் பரிசு செல்வன் கு. தீனதயாளன்
கனிஷ்ட பிரிவு முதலாம் பரிசு செல்வன் தே. ஜெயராஜ்
தமிழ்ப் பேச்சு சிரேஸ்ட பிரிவு முதலாம் பரிசு செல்வி கீதபொன்கலன்
கனிஷ்ட பிரிவு முதலாம் பரிசு செல்வன் ஜெ. ஜெயமயூரன்

திருக்கோணமலை கல்வி வட்டாரத்தினுல், வட்டாரமட்டத்தில் நடாத்தப்பட்ட ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் முதலாம் பரிசை செல்வன் கு. தீனதயாளன் பெற்றுக்கொண்டார்.

திருக்கோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் 1980-ல் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலாம் பரிசைச் செல்வன் தே. ஜெயராஜ் பெற்றுக்கொண்டார். மனித உரிமைகள் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசை செல்வன் கீதபொன்கலன் பெற்றுக்கொண்டார்.

ரொட்டரிக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட உங்களுக்குத் தெரியுமா போட்டியில் 1979ல் எமது கல்லூரி மாணவர் குழுவே முதலிடம் பெற்றது.

ராமகிருஷ்ண சங்கத்தினரின் 50-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டியில் சான்றிதழ்களைப் பெறுவோர் செல்வர்கள் கே. ரமணிதரன், பி. தயாபரன், ஜெ. ஜெயமயூரன்.

1980-ல் ரொட்டரிக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட மேலைத்தேய இசைப்போட்டியில் பின்வரும் மாணவர்கள் பரிசில்களைப் பெற்றனர்.

14 வயதுக்குக் கீழ் இசைக்கருவி இசைத்தல் ஆண்கள் பெண்களுக்கான போட்டி முதலாவதிடம் பிரிதிவிராஜ் திசாநாயகம்.

14 வயதுக்கு மேல் இசைக்கருவி இசைத்தல் ஆண்கள் பெண்களுக்கான போட்டி முதலாவதிடம் ஜெபராஜ தேவசகாயம், இரண்டாவதிடம் கீதாரணன் குணரட்ணம்
14 வயதுக்கு மேல் பியானோ எக்கோடியன் இசைக்கும் ஆண்கள் பெண்களுக்கான போட்டியில் முதலாமிடம் தேவராஜ் தேவசகாயம்.

14 வயதுக்கு மேல் ஆண்கள் வாய்ப்பாட்டு முதலாவதிடம் தேவராஜ் தேவசகாயம் இரண்டாவதிடம் கீதாரணன் குணரட்ணம் மூன்றுமிடம் பொற்கரன் குணரட்ணம் பாண்ட் இசைக்குழு முதலாவதிடம் இந்துக்கல்லூரி.

உயிர்காப்புச் சங்கத்தினரால் அளிக்கப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கலந்து தேர்ச்சியடைந்தோர் விபரம் பின்வருமாறு:-

செல்வன் K. சுரேந்திரன், எம். ஜெயகாந்தன்.

கம்பன் கழகம் நடாத்திய கட்டுரைப்போட்டியில் செல்வன் ந. சசிதரன் மூன்றும் பரிசைப் பெற்றார்.

உள்ளூர் ஆட்சி அமைச்சினுல் நடாத்தப்பட்ட நிழற்படப் போட்டியில் செல்வர்கள் எஸ். கெங்காதரன், வி. கனகசபை ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களைப் பெற்றனர். இலங்கை வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ரைம்ஸ் ஒவ் சிலோன் கூட்டாக இணைந்து க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்தனர். அத் தெரிவில் எமது கல்லூரியிலிருந்தும் இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுள் செல்வர்கள் கே. மதனதேவா, ஏ. சுரேந்திரன் வில்லியம் ஆகியோராவர். இதே க. பொ. த.

சாதாரண பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆகிய இரு பாடங்களிலும் அதிகம்கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களாகச் செல்வர்கள் கே. மதனதேவா, ரி. மோகனதாஸ், ஏ. அன்ரனி பீலிக்ஸ், ஆகியோர் ஸ்ரேட் ரேடிங் கோப்பரேசன் நிறுவனத்தினரால் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்பெற்றனர்.

றொட்டரிக்கழகம் 1981ல் நடாத்திய இன்னிசைத்திறன் போட்டிகளில் எமது கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களே பல துறைகளிலும் முதல் பரிசில்களைப் பெற்றனர்.

விபரங்கள் பின்வருமாறு:

14 வயதுக்குமேல் ஆண்களுக்கான வாய்ப்பாட்டு முதலாமிடம் தேவராஜ் தேவசகாயம், இரண்டாமிடம் கீதாரணன் குணரட்ணம், மூன்றுமிடம் ஜெபராஜ் தேவசகாயம்.

14 வயதுக்கு மேல் ஆண் பெண்களுக்கான இசைவாத்தியங்கள் இசைக்கும் போட்டி

| | | |
|---|---|---|
| எக்கோடியன் | முதலாம் பரிசு | தேவராஜ் தேவசகாயம் |
| மெலோடிக்கா | முதலாம் பரிசு | ஜெபராஜ் தேவசகாயம் |
| பியானோ | முதலாமிடம் | தேவராஜ் தேவசகாயம் |
| புல்லாங்குழல் | இரண்டாமிடம் | கீதாரணன் குணரட்ணம் |
| | மூன்றுமிடம் | பொற்கரன் குணரெட்ணம் |

15 வயதுக்குமேல் ஆண்களுக்கான பேச்சுப் போட்டி இரண்டாமிடம் கீதாரணன் குணரட்ணம், மூன்றுமிடம் பொற்கரன் குணரட்ணம்.

12 – 15 வயது வரையிலான கட்டுரைப்போட்டி முதலாமிடம் பிரிதிவிராஜ் திசநாயகம்

சமயக்கல்வி:

கல்லூரியின் சைவசமயக்குழு சமயசம்பந்தமான நிகழ்ச்சிகளில் மிக்க ஆர்வத்தோடு இயங்கி வருகின்றது. கோணேசர் சிவன் ராத்திரிப் பூசை, ஆலடிப்பிள்ளையார் திருவிழா உபயம், திருக்கேதீச்சர ஆலய திருவிழா உபயம் என்பவற்றை நடாத்தி வருகின்றது. கோணேஸ்வர ஊர்வலம் ராமகிருஷ்ணத்திலும் நாயன்மார்கள் குருபூசைகள் நவராத்திரி போன்ற விழாக்களை நாம் பக்திசிரத்தையோடு கொண்டாடி வருகின்றோம். சைவசமயக் குழுவின் பொறுப்பாசிரியர்களாக கீழ்க்காண்போர் இயங்கிவருகின்றனர்.

திருவாளர்கள் சு. செல்வரத்தினம், ரி. சச்சிதானந்தராஜா.

திருமதிகள் நி. திருநாவுக்கரசு, செ. அருணகிரிராஜா, மு. பாலசுப்பிரமணியம்.

முஸ்லிம் மஸ்லிஸ்:

இது இஸ்லாமிய மாணவர்களின் சமயவளர்ச்சிக்கும் தொழுகைக்கும் பொறுப்பாக உள்ளது. திங்கட்கிழமைகள் தவிர ஏனைய பாடசாலை நாட்களில் கல்லூரியறையில் தொழுகை நடைபெறுகின்றது. இவ்வமைப்பின் பொறுப்பாசிரியர்களாக ஜனாப். எம். ஆர். மரைக்கார், ஜனாப். எம். எல். கமால்தீன், ஜனாப். ரி. எம். யூசுப்ஜான் ஆகியோர் இயங்கிவருகின்றனர்.

கிறிஸ்தவ மாணவர் மன்றம்:

இது கிறிஸ்தவ மாணவரின் சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் அமைப்பாகும். திருவாளர்கள் ஏ. எஸ். கிருபைராஜ், ஜி. எல். லூயிஸ் ஆகியோர் பொறுப்பாசிரியர்களாகக் கடமை புரிகின்றனர்.

கடேட் அணியும், சாரணரும்:

கடேட் அணிக்கும், சாரணருக்கும் திருவாளர்கள் கே. சண்முகநாதன், சி. சிறிஸ்கந்தராஜா ஆகியோர் பொறுப்பாக இருந்து இயக்கி வருகின்றனர். எமது கடேட் அணி பொலநறுவையில் நடைபெற்ற பாசறையில் பங்குபற்றியது. இவர்களுக்குத் தினமும் கல்லூரியில் ஒழுங்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாரணருக்கு திரு. ஆரோக்கியநாதன் அவர்களும் செல்வன் சசிமகேந்திரன் அவர்களும் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர். சாரணர்களுக்கான பாசறையிற் பங்குபற்றி வெற்றிக் கேடயத்தையும் பெற்றுள்ளனர்.

பான்ட் இசைக்குழு:

ஜனுப். மரைக்கார் அவர்களின் பொறுப்பில் இக்குழு சிறப்பான இலக்கை நோக்கி வெற்றிநடை போடுகின்றது. கல்லூரியின் சகல வைபவங்களிலும் இக்குழுவின் இசை உயர்ந்த மதிப்புக்குரிய சின்னமாகக் கணிக்கப்படுகின்றது. இக்குழுவிற்கு பயிற்சி அளிக்கும் ஆசிரியையாக திருமதி தேவசகாயம் அமைந்திருப்பது பெரும் பேருகும். இவரின் தன்னலமற்ற சேவை, அயராத உழைப்பு என்பவை காரணமாக வட்டாரரீதியில் நடைபெற்ற ஆண்களுக்கான பான்ட் வாத்தியப் போட்டியில் முதலாமிடத்தையும், ருேட்டரிக் கழகத்தினரால் கல்லூரிகட்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் அடுத்தடுத்து முதலாமிடங்களைப் பெற்றுரேமென்பது பாராட்டப்பட வேண்டியதொன்ருகும். திருமதி தேவசகாயத்தின் ஒப்பரிய சேவைக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள். பொறுப்பாசிரியர் ஜனுப். எம். ஆர். மரிக்கார் அவர்களுக்கும், அவருக்குறுதுணையாக இருக்கும் திருவாளர்கள் ச. குணரத்தினம், உ. மனோகரன், சி. சிறிஸ்கந்தராசா ஆகியோருக்கும் எமது பாராட்டுக்கள்.

மாணவர் மன்றங்கள்:

மாணவர்களின் பேச்சு, இசை, நடிப்புக்கலை ஆகியவற்றை விருத்தி செய்வதற்காகவே மாணவ மன்றங்கள் உருவாக்கப் பெற்றுச் சிறந்தமுறையில் இயங்கிவருகின்றன. இவை வாரந்தோறும் கூடி மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்கின்றன. இவற்றுள் 9-ம், 10-ம் தரங்கட்கான மாணவர் மன்றம் சிறந்தமுறையில் இயங்கிவருவதுடன் மாணவர்களுக்கான போட்டிகளை வைத்து பரிசுக்குரிய நிகழ்ச்சிகளை தேர்ந்தெடுத்து மாணவ இலக்கிய விழாவைக் கொண்டாடி பரிசில்களும் வழங்கியமை பாராட்டுக்குரியதாகும்.

நூலகம்:

இக்கல்லூரியின் பழைய மாணவரான திரு. க. நடராசா நூலகப் பொறுப்பாளராகக் கடமை புரிந்து வருகின்ருர். இவர் நூலக விஞ்ஞான முதற் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார். வசதிக்கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்கநிதி ஆகியவற்றிலிருந்து இவருக்கு ஊதியம் வழங்கப்படுகின்றது. அற்ப ஊதியத்தைப் பெற்றபோதிலும் நூலகத்துக்கு இவர் ஆற்றும் ஊழியமே மிகப்பெரிதாகும். கடந்த வருடம் 400 நூல்கள் நூலகத்திற்கென சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் நூல்களை, உடனுதவும் துறை. இரவல் வாங்கும் துறை எனும் துறைகளில் பெறுகின்றனர்.

நூலகத்தின் வளர்ச்சிக்கென பின்வரும் ஆசிரியர் குழுவும் இயங்கி வருகின்றது: திருவாளர்கள் எல். பி. ஞானப்பிரகாசம், க. நல்லநாதன், சு. செல்வரெத்தினம், திருமதி பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆவர்.

மாணவர் முதல்வர் குழு:

மாணவர் முதல்வர் குழுவில் இருபதுபேர் உள்ளனர். இக்குழு செல்வன் ந. ரவீந்திரன் தலைமையின் கீழ் அளப்பரிய சேவையை ஆற்றிவருகின்றது. மாணவரின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணி ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்குப் பெரிதும் உதவுகின்றது: இக்குழு நிதியுதவிப் படக்காட்சிமூலம் பெருநிதியொன்றைத் திரட்டிக் கல்லூரியின் ஆய்வுகூட வசதிகளை ஆக்கியதுடன் கல்லூரிக்கு மேலும் தேவையான அத்தியாவசியத் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளது. இக்குழுவின் தலைவருக்கும், உறுப்பினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

கல்லூரி அபிவிருத்திச் சங்கம்:

இக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கம் கல்லூரியின் நலனைக் கருத்திற்கொண்டு அயராது ஊக்கத்துடன் சிறந்த சேவையை ஆற்றிவருகின்றது. இன்று இக்கல்லூரியின் பரிசளிப்பு விழா இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு காரணர்கள் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களேயாவர். கல்லூரியின் வளர்ச்சியில் அவர்கள் எமக்குத் தரும் ஊக்கத்திற்கும், ஆக்கபூர்வமான நல்ல ஆலோசனைகளுக்கும் எமது நன்றிகள் பல. எமது கல்லூரி முதன்முறையாக சஞ்சிகை ஒன்று வெளியிடவேண்டுமென்று ஆலோசனை கூறியதுடன் நில்லாது அதற்குரிய

நிதியையும் சேகரித்துத் தந்துள்ளார்கள். வெகுவிரைவில் சஞ்சிகை வெளிவர இருக்கின்றது என்பதையும் மகிழ்ச்சியோடு இவ்வைபவத்தில் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பழைய மாணவர்களுக்கு ஓர் வேண்டுகோள்:

இக்கல்லூரியில் கல்விகற்று சகல துறைகளிலும் முதன்மை நிலையில் பல பழைய மாணவர்கள், தீவெங்கிலும் பரந்து வாழுகின்றார்கள். இவர்கள் அனைவரும் ஓர் அமைப்பின்கீழ் இயங்கி இக்கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டாமை பெருங்குறைபாடாகும். தற்பொழுது பத்திரிகை மூலமும் விளம்பரம் செய்து பழைய மாணவர் சங்கமொன்றினை உருவாக்க முயல்கின்றோம். பழைய மாணவர்கள் தமது பெயர் விலாசம் தொழில் போன்ற விபரங்களை எமக்கனுப்புமாறு தயவாய் வேண்டுகின்றோம்.

பெற்றோர்களே! பழைய மாணவர்களே!!

இப்பிரதான விழாவில் இவ்வாண்டறிக்கை மூலம் கல்லூரியில் நடைபெற்ற ஆக்க முயற்சிகள் சா த னை க ள், போன்றவற்றில் சிலவற்றைத் தங்களுக்கும் அறியத்தந்துள்ளோம். உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சியாகும். புதிய கல்வித்திட்டம் உருவாகிவரும் இந்நாளில் கல்விச் சீர்திருத்தங்களை அமுல் நடத்துவதற்கும், நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் உங்கள் ஆதரவும் உழைப்பும் பிரதானமானவையாகும். இவற்றை நீங்கள் நிச்சயம் நல்குவீர்களென எதிர்பார்க்கின்றோம்.

## நன்றியுரை:

எமது கல்லூரி ஈட்டிய வெற்றிகள், சிறந்த பெறுபேறுகள் சாதனைகள், ஆற்றிய சேவைகள் அனைத்திற்கும் மூலகாரணம் எனது ஆசிரியர்கள் நல்கும் ஒத்துழைப்பேயாகும். இவர்களுக்கும் எனது பணிவான நன்றி. இக்கல்லூரியின் நிர்வாக யந்திரம் திறம்படச் செயற்படுத்தும் ஆசிரியர்க்கும் ஏனைய சிற்றூழியர்க்கும் எனது நன்றிகள்.


கல்லூரியின் தேவைகளை எடுத்துக் கூறியபோதெல்லாம், உடனுக்குடன் கவனித்து எம் தேவைகளை மனப்பூர்வமாக நல்கி ஆவன செய்யும் கல்விப் பணிப்பாளர், பிரதமகல்வி அதிகாரி நிர்வாக ஊழியர்கள், கல்வி அலுவலக ஊழியர்கள் ஆகியோருக்கும் கல்லூரியின் சார்பில் எனது நன்றிகள்.

பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற பலவிதத்திலும் உதவிய அனைவருக்கும், எமது அழைப்பையேற்று இங்கு வருகைதந்த பெரியோர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆகியோருக்கும் நன்றி கூறி சிரந்தாழ்த்தி கரம் கூப்பி விடைபெறுகின்றேன்.

செபம்: பகவானின் ஏதேனுமொரு நாமத்தை அல்லது உங்கள் இஷ்ட மந்திரத்தைத் தினசரி குறைந்தபட்சம் ஒரு மாலை (108) செபிக்குக.

— சுவாமி சிவானந்தர்

ஓம்



# சுவாமி விபுலானந்த அடிகளார்

சைவப்புலவர் - பண்டிதர்
**இ. வடிவேலு**
திருக்கோணமலை.

பெற்றதாயையும், பிறந்த பொன்னாட்டையும், கற்ற கல்லூரியையும், கற்பித்த குருவையும் எவரும் மறந்துவிடுவதில்லை. திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் கல்வி பெற்றவர்கள் இன்று உலகின் பலபாகங்களிலும் வாழ்கின்றார்கள். இந்துக்கல்லூரி வெளியிடும் சஞ்சிகையைப் படிக்க வாய்ப்பு ஏற்படும்போது கல்லூரி வாழ்க்கையின் பசுமையான அனுபவங்கள் நினைவுக்கு வருவதையுணர்ந்து பெருமிதமும் மகிழ்ச்சியுமடைவார்கள்.

இந்துக்கல்லூரியை நினைவுகூரும் ஒவ்வொருவரும், சுவாமி விபுலானந்த அடிகளாரையும் நினைவுகூரக் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம். இற்றைக்கு ஐம்பத்தாறு வருடங்களுக்குமுன் சைவத் தமிழ்ப் பாடசாலையாயிருந்த கல்வி நிலையத்தை இந்துக் கல்லூரியென்று பெயர்சூட்டி ஆங்கிலம் கற்பிக்கும் கல்லூரியாக உயர்த்தி அதற்குத் தாமே அதிபராயமர்ந்து, அயராதுழைத்து, இந்நாட்டுக் கல்விவளர்ச்சிக்காக சேவை செய்தவர் அடிகளார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை மாணவருலகம் தவறாது தேடிப் படிக்கவேண்டும்.

தமிழையும், ஆங்கிலத்தையும் கற்பதில் அவர் காட்டிய ஆர்வத்தினால், பதினாறுவது வயதில் கேம்பிறிச் பல்கலைக்கழகத் தேர்வில் முதன்மையாகச் சித்தியடைந்தார். இருபதாவது வயதில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியப் பணியில் ஈடுபட்டார். இருபத்தினாலாவது வயதில் இலண்டன் பல்கலைக்கழக பி. எஸ்ஸி பரீட்சையிலும், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையிலும் முதன்மையாகச் சித்தியடைந்தார். "கசடறக் கற்க கற்றபின் அதற்குத்தக நிற்க" என்பது அடிகளாரின் இலட்சியம். இந்த இலட்சியத்தை இன்றைய மாணவர்கள் குறிக்கோளாகக் கொண்டு முன்னேறுவார்களாக.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்று அதியுன்னத நிலையில் அறிவியல் உலகத்திற்கு அரும்பணியாற்றி வருகின்றது. அமரர் அண்ணாமலைச் செட்டியார் சிதம்பரத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கத் திட்டமிட்டபோது, அங்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியந்தானா? என்பதைத் தீர்மானிப்பதற்குச் சென்னைப் பல்கலைக் கழகம் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. அந்த விசாரணைக் குழுவுக்கு அறிவுரை வழங்குவதற்கு அடிகளாரைப் பரிந்து அழைத்தார்கள். அந்த விசாரணைக்குழுவுக்குச் சுவாமி விபுலானந்த அடிகளார் வழங்கிய ஆணித்தரமான கருத்துக்களால் 1927ம் ஆண்டு சிதம்பரத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்றியது. அதே பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி ஈழநாட்டுக்குப் புகழைத் தேடித்தந்தவர் சுவாமி விபுலானந்த அடிகளார்.

1924ம் ஆண்டு தமது முப்பத்திரண்டாவது வயதில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்துச் சந்நியாசியாகிய ஸ்ரீமத் சுவாமி சிவானந்தா அவர்களிடம் ஞானோபதேசம் பெற்

றுச் சுவாமி விபுலானந்தர் என்ற சந்நியாச நாமத்தோடு அடிகளார் இலங்கைக்குத் திரும்பிவந்தார். தமது குருவினுடைய நினைவாக மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயத்தைத் தோற்றுவித்து அதற்கு அதிபராயிருந்து பணியாற்றினர். அந்தநாட்களில் கிழக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணத்திலும் பல கல்வி நிலையங்களை அமைத்து தாமே முகாமையாளராயிருந்து கல்வியையும் சமயத்தையும் வளர்த்துவந்தார். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயமும் அடிகளாருடைய ஆக்கப்பணிகளிலொன்றுகும்.

அடிகளாருடைய அறிவாற்றலை இலங்கைப் பல்கலைக் கழகமும் பயன்படுத்தத் தவறவில்லை. இலங்கை அரசாங்கத்தினுடைய வேண்டுகோளுக்கிணங்க கல்வித் திட்டம், சமயபாடத்திட்டம், சங்கீதபாடத் திட்டம் என்பனவற்றை அடிகளார் அமைத்துக்கொடுத்தார். இலங்கையின் பலபாகங்களிலும் தமிழ்ப்பண்டிதர்கள் தோன்றுவதற்கு, யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தை முதன் முதல் தோற்றுவித்து, அதன்மூலம் தமிழை வளர்த்த பெருமை அடிகளாரையே சாரும்.

தமிழ்மொழி, வடமொழி, ஆங்கிலம், லத்தின், யவனம், வங்கம், சிங்களம், அரபு ஆகிய மொழிகளில் சிறப்பாற்றலுடையவர் சுவாமி விபுலானந்தர். பன்மொழிப் புலமையும், விஞ்ஞான மெஞ்ஞான அறிவும் பல நூல்களையும் ஆராய்ந்து கற்பதற்கு அவருக்கு வாய்ப்பளித்தது. இசைக்கலையைப் பற்றி ஆழமாக ஆராய்ந்த அடிகளார் சிலப்பதிகாரத்திலும் ஏனைய பல நூல்களிலும் கிடைத்த இசை நுணுக்கங்களைப் பற்றிய தரவுகளையும், விஞ்ஞானப் புலமையையும் ஆதாரமாக வைத்து மறைந்துபோன யாழ்களை மீண்டும் தோற்றுவிக்க முனைந்தார். அதன்பயனுக அறிவுலகத்திற்கு 'யாழ்நூல்' என்ற அற்புதப் பொக்கிஷம் கிடைத்தது.

அடிகளார் பத்தாண்டுகளாக முயன்று எழுதிய யாழ்நூலைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் திருக்கொள்ளம்பூதூர் திருக்கோவிலில் ஆளுடைய பிள்ளையார் முன்னிலையில் 21-6-1947ம் ஆண்டு அரங்கேற்றினர். அந்த அரங்கில் இயற்றமிழ்ப் புலவர்கள், இசைத்தமிழ்ப் புலவர்கள், பேராசிரியர்களுடைய சமுகத்தில் மறைந்துபோன யாழ்களாகிய முளரியாழ், சுருதிவீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டி வீணை என்பனவற்றை உருவாக்கி அறிமுகம் செய்துவைத்தார். வீணைவித்தகன் திரு. க. பொ. சிவானந்தம்பிள்ளை அவர்களைக்கொண்டு யாழ்களை மீட்டி இன்னிசை பொழியச் செய்தார். பாரதநாட்டு இசைப்பேரறிஞர்களின் புகழ்ச்சியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு இலங்கைக்குத் திரும்பினர் அடிகளார். இந்தப் பூவுலகத்திற்குத் தான் வந்தகாரியம் நிறைவேறிவிட்டதென்ற திருப்தியோடு யாழ்நூல் அரங்கேற்றப்பட்ட இருபத்தெட்டாவது நாள் தேகத்தைவிட்டுத் தெய்வீகமடைந்தார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் அந்நூலிற் கூறியுள்ள இசைநுணுக்கங்களை இதுகாலவரை யாரும் புரிந்துகொள்ள முடியாதிருந்ததினுல் இளங்கோவடிகளே விபுலானந்த அடிகளாக மறுஜென்மம் எடுத்துவந்து யாழ்நூல் மூலம் விளக்கினுர் என்று அறிஞர்கள் புகழ்ந்தார்கள்.

ஈழநாட்டில் கிழக்கு மாகாணத்தில் காரேறுமூதூரில் கண்ணகையம்மைக்கும் சாமித்தம்பியாருக்கும் அருந்தவப் புதல்வனுகப் பிறந்து, மயில்வாகனன் என்ற பிள்ளைத்திருநாமத்தோடு வளர்ந்த சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்தநாட்டில் நாமும் வாழக் கொடுத்துவைத்துள்ளோம். அவருடைய இதயத்தில் மலர்ந்த திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் அறிவுத்தேன் உண்ணக்கிடைத்த வாய்ப்பை நினைத்து மகிழ்ச்சியடைவோமாக. ★

> பிரமசரியம்: வீரிய சக்தியைக் காப்பாற்றுக. அதுவே உங்கள் சீலத்துக்குப் பின்னுள்ள சக்தி. உள்ளக் கிளர்ச்சியூட்டும் இலக்கியத்தை வாசியாதீர்கள்.
>
> — சுவாமி சிவானந்தர்

# இந்துக்கல்லூரியின் தாயகம்

வே. இராமகிருஷ்ணன்

திருக்கோணமலைப் பிரதேசம் உழைப்பிற்கு ஏற்ற பயன் தரக்கூடிய அளவிற்கு இயற்கைவளம் நிறைந்தது; சலிப்பு ஏற்படாது கண்டு கழிப்பதற்குரிய அழகுடையதுங்கூட. இதனுல் இப்பிரதேசத்தில் வாழ்வதை அரியதோர் வாய்ப்பென்றே கொள்ளல்வேண்டும்.

இயற்கை அமைப்பைப் பயன்படுத்தி நீரைக் கடலுக்குள் வீணே ஓடவிடாது தடுக்கக் கந்தளாய், அல்லை, பதவியா முதலிய குளங்கள் மனித சாதனைகளுள் இவையுஞ் சிலவெனச் சுட்டிக்காட்டிய வகையில் காட்சியளிக்கின்றன. இவை யாவும் மாநிலத்தைச் சூழ்ந்த வகையில் இருப்பன;

தெற்கே குளங்களின் நீரைப் பயிர்ச் செய்கைக்கு உபயோகிப்பதற்கெனவேண்டி பரந்த வெளி. மஹாவலி கங்கா நதி தான் கிளைவிட்டு சமுத்திரத்தில் சங்கமமாகும் வரை கழிமுகமாகின்றது. எங்கும் பசுமை. வயல்வெளியில் நெற்பயிரும், கரும்பும் மேட்டு நிலங்களில் தென்னை, மா, பலா முதலிய வான்பயிர்கள். இடையிடையே காடுகள். அங்கே இயற்கைத் தாவரம் அடர்ந்திருக்கும் நிலை. சுதந்திரமாகத் திரிய விரும்பும் விலங்கினங்களுக்கு இவை எஞ்சியிருக்கும் உறைவிடம்.

பிரதேசத்தின் மத்தியில் குன்றுத் தொடர்கள் அழகிய குடாக்களை முத்தமிடுமாப்போல் முட்டுகின்றன. (விநோதமான இயற்கை அமைப்பாகையால் அவற்றுள் சில வற்றுக்குப் புராண விளக்கங்கள்.) இவற்றிற்கிடையே திருக்கோணமலைப் பட்டணம் எழுப்பப்பட்டுள்ளது. இது பல நூற்றுண்டுகளின் முயற்சி. தொன்மைவாய்ந்த குடியென்பதற்கு ஆதாரமாக சுவாமிமலை உச்சியில் கோணேஸ்வரனுக்குக் குளக்கோட்டன் கட்டிய ஆலயம். சுதந்திரத்தை இழந்ததையும் அதன் விளைவால் கோவிலுக்கு ஏற்படுத்தப்பட்டசேதத்தையும் நினைவூட்டப் பறங்கியர் அமைத்த பிறடறிக் கோட்டை, நவீன வாழ்க்கைத் தத்துவத்தின் பொருள் இதுவென விளக்குவதற்கு ஹொட்டல்களும், உல்லாசப் பிரயாணிகள் விடுதிகளும் அங்கும் இங்கும். பழமையையும், புதுமையையும் இணைத்தவகையில் நகரசபை மண்டபம். வளைந்த குடாக்களுக்கும், நகரத்திற்குமிடையேபரந்த முற்றவெளி. அதன் அருகில் விபுலானந்த முனிவன் தாபித்த இந்துக்கல்லூரி. நகரின் மறு எல்லையில் உலகப்பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகம்; சர்வதேச வர்த்தகஞ்செய்யும் வசதிகளோடு கடற்படைத்தளமும் கொண்டுள்ளது.

நகரத்தின் வடக்கே தென்னமரவாடி வரை பழமையான தமிழ்க் கிராமங்கள். காடுகளும் ஆறுகளும் அவற்றிற்கு இடையே இருப்பதனுல் அந்நிய தாக்கங்கள் குறைவாயிருந்தது. இதனுல் அவை தம் பண்டைய அழகினைச் சமீபகாலம்வரை பேணிப் பாதுகாக்கக்கூடியதாக இருந்தது.

இப்பிரதேசத்தில் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், சர்வதேச வர்த்தகமாகிய தொழில் துறைகளுக்குப் பல வாய்ப்புக்கள் உண்டு: இதனுேடு, அதன் இயற்கை அழகினையும் சேர்த்துக்கொண்டால், இயற்கையன்னையும், திருகோணமலை மக்கள்மீது பாரபட்சமாக நடந்துகொண்டாள் என்று சொல்வதில் வியப்புக்கிடமில்லை. ஆகவே அங்கு வாழக்கிடைத்தது அரியதோர் சந்தர்ப்பம் என்றே கூறவேண்டும்;

பிரித்தானியர் கடற்படைத்தளம் நிறுவும்வரை பரம்பரையாக வாழ்ந்த மக்களே இங்கும் அங்குமாக கிராம வாழ்க்கை நடத்தி வந்தனர். நகரமும் சிறியதாகவே இருந்தது. பாரம்பரிய தொழில் அடிப்படையில் சமூகவேறுபாடு. நகரத்தின் வெவ்வேறு வீதிகளும், வெவ்வேறு தொழில்களுக்குரிய வகையில் அமைக்கப்பட்டிருந்தன;

முதலாம் உலக யுத்தத்தோடு (1914-1918) கடற்படைத்தளம் அமைக்கப்பட்டதும், தொழில்தேடி வந்தோர் பலர் நகரத்தில் குடியேறினர், இவர்களுள் பெரும்பாலோர் வெளிமாவட்டங்களில் இருந்து வந்தார்கள். இரண்டாம் உலக யுத்தத்தோடு தளம் விஸ்தரிக்கப்பட்டபோது மீண்டும் பலர் பலபாகங்களிலும் இருந்து வந்து குடியேறினார்கள்.

பொருள் வளம் நிரம்பியதாக இருந்தாலும் ஒரே கலாச்சாரத்துள் கட்டுப்படுத்தப்பட்ட இனம் உருவாகவில்லை. பெரும்பாலும், நகரமக்கள் வேறு, கிராமிய மக்கள் வேறாகவே இருந்தனர். (மாவட்ட தலைநகரமாக இருந்தமையாலும், நிரந்தரத் தொழில் வாய்ப்புக்கள் இருந்தமையாலும் நாட்டு மக்களுக்கும், பட்டண வாழ்க்கையோடு தொடர்பு சற்றுச் சற்றாக வளரத் தொடங்கியது.) நகரத்துள் தன்னும் குலபிரதேச வேறுபாடு. 1956ம் ஆண்டிற்குப் பின்னர் மட்டுமே தமிழினம் எனும் உணர்ச்சி ஓரளவிற்கு உருவாகிற்று. ஆனால், இது உறுதியானது என்பதற்கில்லை: தளம் ஒப்படைக்கப்பட்டது. வேலைவாய்ப்புக் குன்றியதால், படித்தவர்கள், தொழில் நுட்பமுள்ளோர்கள் பெரும்பாலோர் வெளியேறினர்.

வர்த்தகத் துறைமுகமானபின்பும் குளங்கள் திருத்தியமைக்கப்பட்ட பின்பும், மீண்டும் பலர் குடியேறினாலும், இவர்களுள் பலர் வேறு மொழி பேசுபவர்களாயிருந்தனர். இதனால் இப்பிரதேசத்தில் வாழும் மக்களை ஒருங்கு இணைக்கக்கூடிய கலாச்சாரமொன்று தோற்றுவித்தற்குரிய வேறு உருவம் எடுத்துள்ளது.

நிலைமை சிக்கலானதாகையால் சிந்திக்கத் தகுந்தவர்கள் இதற்குத் தீர்வுகாணத் தயங்காது முன்வரவேண்டும். இதுவரை முயற்சிகள் எடுக்கப்படவில்லையென்றும் கூற முடியாது, கோணேஸ்வரம், தம்பலகாமம், வெருகலாகிய புராதன தலங்களையும், குறிச்சிக்குக் குறிச்சியுள்ள கோயில்களையும் மையமாகக்கொண்டு, மக்கள் தம்மை நெறிப்படுத்தி சமூகமாக வாழமுயன்றனர் என்பதை மறக்கமுடியாது. மேலும், அருள்நெறி மன்றம், திருவள்ளுவர் கழகம், சிவானந்த தபோவனம், சிவயோக சமாஜம் முதலிய வைதீக சமய நிறுவனங்களும் தீவிர அரசியல் கட்சிகளும் குறித்த கோட்பாடுகளுக்கிணங்க மக்களை வழிநடத்த முயன்றன என்பதையும் நாம் மறக்க இயலாது. ஆனால், இவை எடுக்கும் முயற்சியின் பயன் தீவிரப்படுத்தப் பட்டாலும், போதாதென்றே கருதவேண்டியிருக்கின்றது. நாட்டிலும், குறிப்பாகத் திருக்கோணமலைப் பிரதேசத்திலும் ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் தாக்கம் வேகமாக இருப்பதனாலேயே அவ்வாறு கூறவேண்டியிருக்கின்றது. பண்டைய காலந்தொட்டு மக்கள் கொண்டுள்ள இலட்சியங்களும் பெறுமதியாகக் கொண்டவைகளும் தூக்கியெறியப்படும் சோதனைக்காலம். இதற்காக வேண்டி பழமை முழுவதும் புனிதமானதெனக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. கழிக்கவேண்டியவை பல உள்ளன. மறுபுறத்தில் புதுமையென்ற காரணத்தால் இரு கரங்களையும் நீட்டி யாவற்றையும் ஏற்கவேண்டிய தேவையுமில்லை. புதியதுள் பெரும்பாலானவை அற்ப சொற்ப ஆசைகளைமட்டும் பூர்த்திசெய்வனவாக இருக்கின்றன. பொருளாதாரத் துறையில் தனிநபர் லாபமும் இவற்றிற்குரிய கல்விப்பயிற்சியுமே மேலோங்கியுள்ளன. கலைத்துறையிலும் ஆசாபாசங்களைத் தூண்டும் படைப்புகளே சந்தையில் குவிந்துள்ளன. இதனால், சமூக வாழ்க்கையில் இசைவும் மனித உறவுகளில் நிறைவும் இன்பமும் மங்கிக்கொண்டே போகின்றன. அபிவிருத்தி முன்னேற்றம் என்ற போர்வையில் சமூகச் சீர்குலைவு, பாரம்பரியம் இன்னதென வரையளவு செய்யமுடியாத கட்டத்தில் தனித்துவத்தை இழக்கும் அபாயம் வெகு தொலைவில் இல்லை.

இந்தக் கட்டத்தில் இவ்வித பெரும் பொறுப்பினை ஏற்க சிந்திக்கப் பயின்றவர்கள் தயங்காது முன்வரவேண்டும். உணர்ச்சி வேகம்மட்டும் போதாது, இன்றைய பிரச்சினைகள் இன்னதென உணரும் ஆற்றலும் சிந்தனைத் தெளிவும், மன உறுதியும் கருத்துக்களை நடைமுறையில் அமுலாக்கும் தலைமைத்திறனும் ஒருங்கு சேர்ந்தாகவேண்டும். பரம்பரையாகக் குடியிருந்தோர் பேணிப் பாதுகாத்தவற்றுள் பெறுமதியானவையென

தேர்ந்தெடுக்கப்பட்டவையும், புதிதாகக் குடியிருக்க வந்தவரது மத்தியில் நிலவும் நற்பண்புகளும் ஒருங்கு இணைந்ததாக இருத்தல்வேண்டும். இதுவே, சமூகத்தைப் பின்னிப் பிணைந்து ஒருமித்த உறுப்பாக்குவதற்கு உறுதுணையாக்கும் கருவியாகும். உயர்ந்த இலட்சியங்கள் இன்னதென வகுத்துக் கொண்டால் எதிர்கால சமூகத்தின் நற்பண்புகள் இவைதான் எனும் சிந்தனைத் தெளிவு ஏற்படும். அவற்றினைப் போராடி அடைய வேண்டிய மனஉறுதியும் மக்கள் மத்தியில் உதித்துவிடும். வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாகிவிடும். இதற்கேற்ப இளஞ்சந்ததியினரையும் தகுந்த சூழலில் பயிற்றுவித்துவிட்டால், நல்லதோர் சமூகத்தைத் தாங்கி நிற்கும் தர்மவீரர்கள் தோன்றிவிடுவார்கள். அதன்பின் எவ்வித சோதனைக்காலம் தோன்றிடினும் மனந்தளராது நிமிர்ந்துநிற்கும் நற்பண்பு குலையாது என்பது உறுதியாகிவிடும்.

பிரச்சினைகளும் தீர்வுகாணும் முறைகளும் தெளிவாகியதன்பின் நம் மத்தியில் உள்ள நிறுவனங்களின் கடமைகள் என்ன என்பது ஆய்விற்குரிய அடுத்த பிரச்சினையாகின்றது. மக்களுள் சிலர் ஒன்றுசேர்ந்து இலட்சியங்களுக்கேற்ப சாதனைகளில் ஈடுபடுவதே சமூக நிறுவனங்களின் நோக்கமாகும். பல ஆண்டுகள் ஒன்றுதிரண்டு தொண்டு புரியும்போது, சகோதரத்துவம் பிறக்கும். இறைபணிக்கும் அதனுள் அடங்கும் தேசாபிமானத்திற்கும் முண்டுகொடுக்கும் கருவிகளே இந்நிறுவனங்கள். இவற்றுள் திருக்கோணமலை இந்துக்கல்லூரி முதலிடம் பெறும்.

ஏறத்தாள அரைநூற்றாண்டின் முயற்சி பலரது தியாகங்களின் விளைவு. மாநிலத்தில் வாழும் பல பிரமுகர்கள் இந்தப் பள்ளிக்கூடத்தில்தான் பயிற்சிபெற்றார்கள். திருக்கோணமலை மக்களது கலாச்சாரத்திற்குத் தனித்துவமும் தொடர்ச்சியும் இருக்குமென்றால் அச்சாதனையில் பெரும் பங்கு இந்துக்கல்லூரிக்கே உரியதாகும். பாரதப் போர்வீரனாகிய அருச்சுனனை எவ்வாறு துரோணாசாரியார் உருவாக்கினாரோ, அதேபோன்று இங்குள்ள ஆசிரியர்கள் பல நல்மாணாக்கர்களை உருவாக்கியுள்ளார்கள். மாற்றங்கள் மின்வேகத்தில் ஏற்பட்டுக் கொண்டு வருவதனால், கல்வியின் நோக்கம், பாடத் திட்டங்கள், பயில்விக்குமுறைகள் அனைத்தையும் பரிசீலனை செய்து தம்பணிகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடுவார்கள் என நம்புகிறோம்.

சமீப காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பிரதேச சுயாட்சி முறையில் மாவட்ட அபிவிருத்திச் சபை உருவாக்கியதைச் சகலரும் அறிவர். கல்வித்துறையிலும் ஓரளவு அதிகாரம் இதற்குப் பகிர்ந்து கொடுக்கப் பட்டுள்ளது. இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டால், ஏற்கனவே குறித்த பிரச்சினைகளின் சிக்கல்தனம் சற்றுக் குறையும். அபிவிருத்திச் சபையினரது உதவியும் கல்வி முன்னேற்றத்திற்குக் கிடைக்குமாகில் மாநிலத்தின் கலாச்சாரம் பிரதிபலிக்கக் கூடியவகையில் கல்விப்பயிற்சி முன்னேறுமென்பது நம்பிக்கை.

தேவைகளைக் குறைக்குக: உங்கள் சொந்த உபயோகத்திற்கு மிகக் குறைந்த அளவு பொருட்களை வைத்திருக்குக. இப் பொருட்களை ஒழுங்கான முறையில் வைத்திருக்குக. தேவைகளைக் குறைப்பதால் நீங்கள் குறைவான தொல்லைகளைப் பெற்றிருப்பீர்கள்.

— சுவாமி சிவானந்தர்

SRI VINAYAGAR
SARIALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# கல்லூரியின் முன்னேற்றம்

பழைய மாணவன் மு. கோ. சங்கரதாஸ்

திருக்கோணமலை இந்துக்கல்லூரிப் பழைய மாணவன் என்று கூறுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இக் கல்லூரியில் 12-9-33இல் இருந்து 5-9-42 வரை கல்விகற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 1942ம் ஆண்டு சித்திரை மாதம் திருக்கோணமலையில் யப்பானிய போர்விமானங்கள் குண்டுபோடப்பட்டதை யிட்டு, திருக்கோணமலைப் பாடசாலைகள் யாவும் மூடப்பட்டன. இதன்காரணமாக கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. இக்கல்லூரியில் நான் படித்த காலத்தில் ஆசிரியர்களிற் சிலரை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. குறிப்பாக மதிப்புக்குரிய அதிபர் P. இராமச்சந்திரா, ஆசிரியர் C. கதிரவேற்பிள்ளை, V. குழந்தைவேல், S. சண்முகம் அவர்கள் கல்லூரியை சகல துறைகளிலும் முன்னேற்றுவதில் பெரும் பங்காற்றினர். திரு. P. இராமச்சந்திரா அவருடைய பார்வையாலும், திரு. C. கதிர வேற்பிள்ளை அவருடைய அன்பாலும், திரு. V. குழந்தைவேலுவின் செருப்புச்சத் தத்தைக்கேட்டும், திரு. S. சண்முகத்தின் பிரம்பைக்கண்டும் மாணவர்கள் அடங்கி ஒடுங்கிவிடுவார்கள். இவர்கள் கல்லூரிக் கட்டடங்கள் கட்டுவதற்காக, தமது சிரமத் தையும் பாராது பொதுமக்களிடம் சென்று பணமும் பொருளும் சேகரிக்க அல்லும் பகலும் பாடுபட்டார்கள். கல்லூரியின் வளர்ச்சியே அவர்களின் குறிக்கோளாய் இருந்தது. மாணவர்களுக்குத் தகுந்த முறையில் பாடங்களைக் கற்பித்தார்கள். அவர்களின் முயற்சியால் மாணவர்கள் உயர் வகுப்புப் பரீட்சைகளில் திறமைச்சித்தி யடைந்தனர். அக்காலத்தில் இக்கல்லூரி யின் ஆய்வுகூடம் இலங்கையிலே ஒரு முன் மாதிரியான ஆய்வுகூடமாய் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

1942ஆம் ஆண்டு யப்பானிய போர் விமானங்கள் திருக்கோணமலையைத் தாக்கிய தால் பீதியடைந்த மக்கள் திருக்கோண மலையைவிட்டு வெளியேறினார்கள். அக் காலத்தில், பாடசாலைகள் யாவும் மூடப் பட்ட அந்த இருண்டநாட்களில், ஆசிரியர் திரு. கதிரவேற்பிள்ளையின் சேவையை என் றும் மறக்கமுடியாது. அவர் அப்போது கல்லூரிக்கு அதிபராகவும், இராக்காவலாளி யாகவும் கடமைபுரிந்து எவ்வளவோ கஷ்டங் களின் மத்தியில் கல்லூரியை இயக்கிவைத் தார். அவருடைய விடாமுயற்சியால் கல்லூரி முன்பு இருந்ததைவிட உன்னத நிலைக்கு இயங்க ஆரம்பித்தது. இதன் பின்பு அதிபராக விளங்கிய திரு. S. அம்பல வாணர் அவர்களும், மாணவர்களின் உயர் கல்வி வளர்ச்சிக்காக இரவும் பகலும் அயராது உழைத்து கல்லூரியின் பெரு மையை உயர்த்திவைத்தார்.

இப்போது அதிபர் சிவலோகநாதன் காலத்தில் கல்லூரி ஆல்போல் தழைத்து உன்னத நிலைக்கு இயங்க ஆரம்பித்திருப் பதைக் காணும்போது திருக்கோணமலையில் மகிழ்ச்சியடையாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

இக்கல்லூரியிலிருந்து சர்வகலாசாலைக்கு மருத்துவம், பொறியியல், கட்டிடக்கலை விஞ்ஞானம், சட்டம், கலை, விவசாய பீடங் களுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, சர்வகலாசாலைக்கு ஏறும் படிக்கல்லாக, இலங்கையிலே முன்மாதிரியான கல்லூரி யாகத் திகழ்வது திருக்கோணமலை மக்கள் பெருமைப்படக்கூடிய விடயமாகும். இன் றைய நிலையில் திருக்கோணமலையில் குன்றி லிட்ட தீபமாக விளங்கும் இந்துக்கல்லூரி யின் பழைய மாணவன் யான் எனக் கூறுவ தில் இணையற்ற இன்பமடைகின்றேன். ★

CHUNNAKAM

# விஞ்ஞானமும்

விஞ்ஞானம் என்றால் என்ன? விஞ்ஞானத்திற்கும் மனித வாழ்க்கைக்கும் என்னென்ன தொடர்புகள் என்றெல்லாம் நாம் ஆராய முயன்றோமானால் பல்வேறு பிரச்சினைகளும் தோன்றுவது இயற்கை. ஏனெனில் விஞ்ஞானம் என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டிருந்தாலும், ''விஞ்ஞானத்திற்கு விளக்கம் அளிக்க முடியாது. விஞ்ஞானம், வரலாறும் அதாவது மனித வாழ்க்கையும், விஞ்ஞானமும் ஒன்றாகவே பின்னிப் பிணைக்கப்பட்டு வளர்ந்த ஒன்றாகும்'' என ஒரு விஞ்ஞானியே கூறுகின்றார். இருந்தாலும் இன்றைய விஞ்ஞானஎழுத்தாளர்கள் அதற்கு விளக்கம் அளிக்காமலா விட்டுவிடுவார்கள்? அதனாலேயே அது உள்ளதை உள்ளபடி கூறுகின்ற அறிவாக வளர்ந்துள்ளது. இத்தகைய விஞ்ஞானத்திற்கும், மனிதவாழ்விற்கும் உள்ள நெருக்கத்தை ஈண்டு நாங்கள் இனங்காண முயல்வோமானால் மனித வாழ்விற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற உணவு, உடை, உறையுள் போன்ற விடயங்களில் விஞ்ஞானம் ஒன்றிப் பிணைந்திருப்பதை நாம் நடைமுறைவாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

இன்று நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம், வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? இல்லவே இல்லை. ஆனால், வாழ்வுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றோம். ஆமாம் ஒன்றா, இரண்டா, எத்தனை எத்தனை போராட்டங்கள். அத்தனையும் வாழவேண்டும் வாழவேண்டும் என்ற வாழ்க்கைப் போராட்டத்தோடு முடிவடைகின்ற நேரத்திலும் விஞ்ஞானமும் அதற்குள் புகுந்து மனித வாழ்க்கையோடு ஒன்றிவிடுகின்றது.

அன்று மனிதன் தோன்றிய நாளிலிருந்து விஞ்ஞானமும் வளரத்தொடங்கியது. ஏனெனில், கல்லுடன் கல்லை மோதினால் தீப்பொறி பறக்கும் என்ற ஆரம்பக் கண்டுபிடிப்பு இன்று தீபற்றிய பூரண அறிவைக் கொடுத்து நிற்கிறது. மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற உணவு என்ற தத்துவத்தில் விஞ்ஞானம் நிறைவான இடத்தைப் பெற்றிருக்கின்றது. ஆரம்ப காலங்களில் மனித உடல் உழைப்பினால், தம்முடைய உணவுத்தேவையைப் பூர்த்திசெய்தார்கள். ஆனால், விஞ்ஞான காலமென அழைக்கப்படுகின்ற 20ம் நூற்றாண்டில் நவீன விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சியால் உணவுற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல இயந்திரக் கருவிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. இதிலிருந்து நடைமுறைக்காலத்தில் உணவுத் தத்துவத்தில் விஞ்ஞானம் எந்தளவு இடத்தை வகித்திருக்கின்றது என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மனித வாழ்விற்குத் தேவைப்படுகின்ற உடைத் தத்துவத்தை எடுத்துப் பார்த்தோமானாலும், ஆரம்பகாலங்களில் இலைகுழைகளாற் தம்முடலை மறைத்த மனிதன் இன்று பருத்தி மரத்திலிருந்து பருத்தித் துணியும், பட்டுப்பூச்சிகளிலிருந்து பட்டுத் துணியும் பெற்று ஆடைகள் தயாரிக்கக்கூடியதாகவுள்ளது. மனிதன் நவநாகரிக முறையில் இன்று தன்னை அலங்கரிக்கும் அளவிற்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மனித வாழ்க்கையோடு எவ்வாறு தொடர்புபட்டுள்ளன என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

அடுத்து உறையுள் தத்துவத்தை எடுப்பின் ஆரம்ப காலங்களில் ஆற்றங்கரையோரங்களிலும், காடுகளிலும் வாழ்ந்த மனிதன் இன்று பல மாடிக்கட்டிடங்களிலும், அதாவது நிலத்திற்கு மேலேயும், நிலத்திற்குக் கீழேயும் வாழ்ந்துகொண்டிருக்கின்றான். அப்படி அவன் வாழ்ந்துகொண்டிருக்கக் காரணம், விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்றே கூறவேண்டும். இப்படியாக உணவின் தத்துவமும், உடையின் தத்துவமும், உறையுளின் தத்துவமும் உண்மையாகவோ, தற்செயலாகவோ நிகழ்ந்த நிகழ்வுகளாற் தோன்றி விஞ்ஞானமாக வளர்ந்து

# மனித வாழ்வும்

— திருச்செல்வம் இராஜ்குமார் —
A/L 2வது வருடம்

நாளுக்குநாள், ஆண்டுக்கு ஆண்டு, காலத்திற்குக் காலம், யுகத்திற்கு யுகம் படிப்படியாக வளர்ந்து இன்று நவீன நிலையைக் கண்டுகொண்டிருக்கிறது. ஆமாம், இன்றைய நவீன நிலையிலா? அப்பப்பா, விஞ்ஞான யுகத்தில் அல்லவா நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அப்பாடா! கட்டை வண்டிக்காலத்தில் இருந்த நாம் கடுகதிப் புகைவண்டி வரைக்கும், நுழையும் குடில் தொடக்கம் நூறு அடுக்கு மாளிகைவரையும், அகல்விளக்குத் தொடக்கம் அதிநுட்ப மின்விளக்கு வரையும், சீனவெடி தொட்டு சீறிப்பாயும் அனல்கக்கும் ஏவுகணைகள் வரைக்கும் வந்துவிட்டோம், கண்டுவிட்டோம். இத்தனையும் கண்டுபிடித்த விஞ்ஞானிகள், விந்தையான மனிதர்களல்ல, விசித்திரமான மூளை படைத்தவர்கள்.

மருத்துவத் துறையில் விஞ்ஞானம் செய்த புதுமைகள் அநந்தம். இவை யாவற்றுக்கும் மனிதகுலம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. விஞ்ஞானம் தந்துதவிய மருந்துகள், மனிதகுலக் கொடும்பிணிகளை மாற்றும் அமிர்த சஞ்சீவிகளாய் விளங்குகின்றன. சமுதாயத்தை அளிக்கும் தொற்றுநோய்கள் தடுக்கப்படுகின்றன. மனிதனின் உள்ளுறுப்புகள் படமாக்கப்பட்டு பழுதுள்ள இடங்கள் அறுவை வைத்தியத்தாற் குணமாக்கப்படுகின்றன. இதயத்தின் பழுதே அறுவைவைத்தியத்தாற் குணமாக்கப்படுகிறதென்றால், பிறவுஞ் சொல்லவேண்டுமோ? பத்திய பாகம் காத்துப் பலநாள் நோயின் கொடும்பிடியிற் சிக்கித் தவித்து மீழுதலும் மாழுதலும் அக்காலத்திற் பெருவழக்கு. இறப்பைத் தடுக்கமுடியாவிடினும் இன்று ஊசி மருந்துகளாலும், உயிர்ச்சத்துக் குளிகைகளாலும் நோய்த்துன்பத்தைப் பெருமளவு குறைக்க முடிகிறது. எனவே, மருத்துவத்துறையில் விஞ்ஞானத்தின் சாதனையைக் கூறவும் வேண்டுமோ?

விஞ்ஞானம் இன்று சந்திரனிலும், மனித சுவட்டைப் பதித்துவிட்டது. இதன் வளர்ச்சி மண்ணிலிருந்து விண்ணிற்கே தாவிவிட்டது. இதன் வளர்ச்சியில் மண்ணும் விண்ணும் மாற்றங்கண்டது. மக்களது மூட நம்பிக்கைகள் விரட்டியடிக்கப்பட்டன. இவைகளிலிருந்து நாம் பார்க்கும் போது இன்று, வாழ்வே ஒரு சமூக விஞ்ஞானமாக, அரசியல் விஞ்ஞானமாக மாறிக்கொண்டிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், மூடநம்பிக்கைகள் குடியேறியிருந்த மூளைக்குள் இன்று விஞ்ஞான அறிவு சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. என்றாலும், அகங்காரம்கொண்ட மனித உள்ளங்களினால், ஆக்கப்பாதையை விடுத்து அழிவுப் பாதையையும் அணைத்தவாறே விஞ்ஞானம் பயணம் செய்கின்றது என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எத்தனை துப்பாக்கிகள், எத்தனை பீரங்கிகள், எத்தனை டாங்கிகள், எத்தனை எத்தனை கவச வாகனங்கள் எண்ணில் அடங்காப் போர்விமானங்கள், கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், நியூட்டன் குண்டுகள். அப்படியே அணுக்குண்டுகள், அதையுமல்லவா இந்த விஞ்ஞானத்தாய் ஈன்றெடுத்திருக்கின்றாள். இதையெல்லாம் நாம் பார்க்கும்போது நாம் வாழப்பிறந்தோமா? என்ற கேள்வி எம்மிடையே எழுகிறது.

எனவே, மனித வாழ்க்கையின் முக்கிய பாகங்களான உணவு, உடை, உறையுள், போக்குவரத்து, பாதுகாப்புப் போன்ற விடயங்களை விஞ்ஞானம் முழுமையாக ஆட்கொள்ளுகின்றது. அதிற் பல தீமைகள் இருந்தாலும், நன்மைகளும் இருப்பதோடு மனித வாழ்விலிருந்து விஞ்ஞானத்தினைப் பிரித்தறிய முடியாதுள்ளது. எனவே, விஞ்ஞானம் வளரவேண்டிய ஒன்று. மூடநம்பிக்கைகளை ஒழித்து முன்னேற்றப்பாதையில் மனித வாழ்க்கையை அழைத்துச்செல்லட்டும். அதனால், விஞ்ஞானமும், மனித வாழ்வும் மென்மேலும் நல்லன கண்டு, நல்லதை நலமுடன் பெற்று, நாமும் நம் ஊரும் நலமுடன் வளரட்டும்.

# திருமதி இ. கந்தையா

திருமதி ம. பாலசுப்பிரமணியம்

எளிமையான தோற்றம். இலட்சியங்கள் நிறைந்த உள்ளம். குன்றாத நேர்மை. காந்தியத்தைப் பற்றுக்கோடாகக்கொண்ட வாழ்க்கை நெறி. சொல்லிலும் செயலிலும் ஒருமைப்பாட்டுத் தொழிலைத் தொண்டாகக் கருதும் மனோநிலை. அறிவினால் தீட்சண்யம் அடைந்த பரந்த நோக்கு. பொய்யான உலக வாழ்வில் பற்றுவைக்காதே, நிலையான ஆனந்தம் உண்டு என்று கூறாமற் கூறுவது போல் யாரைக்கண்டாலும் அகத்தினின்றும் வெளிப்படும் ஆனந்தம் என்ற வார்த்தை எந்த நேரத்திலும் யாருக்கும் இயன்றளவு உதவும் மனப்பாங்கு. இவற்றின் மொத்த வடிவமே திருமதி இராசநாயகி கந்தையா என்றால் மிகையாகாது.

எமது கல்லூரி வரலாற்றில் நீண்ட காலம் சேவைசெய்த பெண் ஆசிரியை என்ற வகையில் குறிப்பிடத்தக்க ஒருவராக இவரே விளங்குகிறார். இவர் 1-9-54 தொடக்கம், 7-4-81 வரை எமது கல்லூரியில் கடமையாற்றியுள்ளார். இவரது சேவைக்காலத்தில் சிறப்பாகச் சைவமுந் தமிழும் தழைத்தன. தனது இரு கண்களாக இரண்டையும் கொண்டார். கற்பித்தலிற் சிறந்த ஓர் ஆசிரியையாகத் திகழ்ந்தார். இதனால் நன் மாணாக்கர் பலரை உருவாக்கினார். மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றார். இவரை மாணவர்கள் அன்போடு ''ஆனந்தம் மிஸ்'' என்று அழைப்பார்கள். இவர் சிந்திய முத்துக்களை, இரத்தினங்களை, மாணிக்கங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எமது கல்லூரியில் மட்டுமல்ல, இந்தநாட்டில்மட்டுமல்ல, வெளிநாடுகள் பலவற்றிலும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அதிபர்களுடனும், சக ஆசிரியர்களுடனும் அன்போடும் பண்போடும் மனம்விட்டுப்பழகும் இனிய சுபாவமுடையவர். எமது கல்லூரி ஆசிரியர்கள் அவரை ஒரு தாயாக, சிறப்பாகப் பெண் ஆசிரியர்கள் கொண்டிருந்தோம். கல்லூரி விடயங்களிற் சிறந்த ஒரு ஆலோசகராக ஆசிரியர்கட்கு மட்டுமல்ல சில சந்தர்ப்பங்களில் அதிபர்களுக்கும் கூட தொழிற்பட்டுள்ளார். கல்லூரியில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளிலும் கல்லூரி வெளியில் பங்கேற்கும் சமய நிகழ்ச்சிகளிலும் முன்னின்று நடாத்திக் கல்லூரியின் கௌரவத்தையும் தனித்துவத்தையும் பேணியுள்ளார்.

மேலும் கல்லூரியிலும், கல்லூரிக்கு வெளியிலும் பல விவாதங்களிலும் சிறப்புச் சொற்பொழிவுகளிலும் பங்குபற்றித் தமது நாவன்மையைப் பலரறியச் செய்ததோடு மாணவர்கள் பலரையும் அவ்வாறு பங்குபற்றித் திறமைகளை வளர்க்க உதவியுள்ளார். காந்திய நெறியில் நின்று கணவருடன் இணைந்து சமூகத் தொண்டுகள் செய்வதிலும் முன்னோடியாக விளங்குகிறார். இத்தகைய ஒருவரது சேவையை இந்துக்கல்லூரி இன்று இழந்திருப்பது துரதிஷ்டமே.

முடிவாக நோக்குமிடத்து இவர் நல்லாசிரியையாக மட்டுமல்ல சிறந்த ஆலோசகராக, நிர்வாகியாக, சமூக சேவகியாக, பேச்சாளராக, எழுத்தாளராக, நடுநிலையாளராக விளங்கினார் என்பதில் ஐயமில்லை.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் இவர் பொதுச்சேவையிலிருந்து ஓய்வு பெறவில்லை. இவரது தொண்டும் பணிகளும் ஓங்குக, இவர் புகழ் நிலைபெறுவதாக.

> தவிர்க்குக: கெட்ட சங்கத்தையும் மாமிச போசனத்தையும் சீட்டு விளையாடுவதையும் படக்காட்சியையும் தவிர்க்குக. இது உங்கள் சொந்த நன்மைக்கே.
>
> — சுவாமி சிவானந்தர்



எங்கள் கல்லூரியில் இருபத்தைந்து ஆண்டுகட்குமேல்
ஆசிரியப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ள
ஆசிரியை திருமதி இ. கந்தையா

---

PRIZE DAY – 1981



A Scene from "DEAR DEPART"


PRIZE DAY – 1981



Siva Dance




A Scene from Tamil Drama



Our Villuppaddu Group

# PRIZE WINNERS



K. Nadesan
( Best Student - 1980 )




K. Ramanitharan
(Gold Medalist - Vivekananda Society)




S. Kesavan
( Silver Medalist - Vivekananda Society )

FIRST PRIZE



S. Gengatharan
Photographic Competition
Ministry of Local Govt. & Housing

FIRST PRIZE Rs. 5000/-



N. Koneshamoorthy
Essay Competition (All Island)
Ministry of Trade & Shipping

# "தந்தை தாய் பேண்"

- ப. கோணேசரஞ்சன் -

8ம் வகுப்பு

''தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை'', ''தந்தை சொல் மிக்க தோர் மந்திரமில்லை'' என்ற ஆன்றோர் வாக்கில்தான் எத்தனை உண்மை. ஏன்? நாம் குடியிருந்த கோயிலே அன்னைதானே. அன்னை ஓர் ஆலயம். அந்த ஆலயத்தையும், பிதாவாகிய தெய்வத்தையும் பேணவேண்டியது, அக் கோயிலைப் பூசித்துப் பேணும் பூசகர்களாகிய எமது கடமை.

பொறுமையிற் சிறந்த பூமியை மிஞ்சும் பொறுமை தாய்மனத்துக் குண்டு. அப்பொறுமையைக் கொண்ட அன்னையையும் தந்தையையும் இரு கண்கள்போல் பூசிக்கவேண்டும்.

''தாயுடன் அறுசுவைபோம், தந்தையுடன் கல்வி போம்'' என்பது உண்மை. இந்த இருவரைப்போல் எம்மைப் பேணிப் பாதுகாக்க யார் உள் ளனர்? அல்லும், பகலும் அயராது பிள்ளைகளின் நலனே தன் நலனாகக் கொண்டு, அவர்களின் கருமத்திலேயே தன் கருத்தைச் செலுத்தி வாழும் அன்னையையும், தன்னுடைய பிள்ளை என ஊரார் பெயர்சொல்ல வேண்டு மென விரும்பும் தந்தையையும் பேணிப் பாதுகாக்கவேண்டியது எம் கடன்.

''உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை, அப்பன் இல்லாவிட் டால் தெரியும் அப்பனின் அருமை'', என்பதுபோல் அவர்கள் இருக்கும்போது அவர்களைப் பேணாத நாம் அவர்கள் இல்லாதபோது அதை நினைத்து வருந்து வதில் பிரயோசனமில்லை.

பத்து மாதம் சுமந்து பகல் இரவு தூக்கமின்றி எம்மைப் பேணும் அன்னையையும், பிள்ளைகளின் சுகத்தைப் பேண, உழைக்கும் தந்தையையும் நாம் பேணவிடின் நாம் எவ்வளவு நன்றி கெட்டவர்கள்.

ஆசை, அருமையாய்த் தாலாட்டுப் பாடி அதுவும், தான் ஆராரோ என்று தாலாட்ட இன்னும் யார் யாரோ வந்து பாராட்ட என்று மனக் கோட்டை கட்டிப் பாடிப் பரவசமடையும் அந்தத் தாயைப் பேணவிடில் நாம் மானிடராய்ப் பிறந்ததில் பயனில்லை.

★

உண்ணோக்குகை: நித்திரைக்குச் செல்லுமுன் ஏறக்குறைய 10 நிமிடங்களுக்கு அந்நாட் செயல்களைப் பற்றிச் சிந்திக்குக. உங்கள் மூத்தோர் யாரொருவரையும் அவமதித்தீர்களோ என்றும் உங்கள் அன்பர்களில் யாரொருவருடனும் கோபம் கொண்டீர்களோ என்றும் சிந்திக்குக, நேர்மையாகச் சிந்திக்குக. அப்படியான நிகழ்ச்சிகளை மறுபடி செய்வதில்லையென்று மனவுறுதி கொள்க. இது உங்கள் ஆண்மையைச் சிறப்பிக்கும்.

— சுவாமி சிவானந்தர்

# அன்பே சிவம்

நு. சக்திதரன் 10ம் வகுப்பு A

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.
— திருமூலர்

எது அழிவில்லாததோ - அது இறைவன். அன்பு அழிவில்லாதது. அன்னை என்று சொல்கிறேம்; நம்மைப் பெற்றவள், உலகத்தைப் படைத்தவள்; இருவரும் தாய்மார்களே. நம்மை நேரடியாகப் பெற்ற அன்னை எங்கள்மீது காட்டும் அன்பு பாச அன்பு. அண்டகோடி சீவராசிகளையும் படைத்த அன்னை காட்டும் அன்பு அழியாத இறை அன்பு.

குழந்தைக்கு வயிற்றில் சுகவீனம் வருகிறது. தாய் வைத்தியரிடம் காட்டிப் பேதி வாங்கிக் கொடுக்கிருள். சுகம் வருகிறது. அன்னையாம் பராசக்தி அன்பே வடிவானவள். மாயமல காரியங்களினுல் அல்லலுறும் நம்மைப் பேதிக்கிருள். தன்னேடு சேர்த்துக்கொள்கிறுள்.

''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த
பெய்வளை'' — திருவாசகம்

அன்பே உருவானவள் இல்லாவிட்டால் நம்மைப் பேதிப்பாளா?

''தாயினும் நல்ல தலைவர்'' —சம்பந்தர்

அன்பே உருவானவள் இல்லாவிட்டால் சம்பந்தர் அப்படிக் கூறுவாரா?

ஒரு குழந்தை அழுகிறது; தாய் ஓடோடி வந்து எடுத்து உச்சிமோந்து பாலூட்டுகிருள்.

சம்பந்தர் ஒருமுறை அழுகிருர்; உலகம் உய்ய அழுகிருர்; அன்னை பராசக்தி கீழே இறங்கி வருகிருள்; பாலூட்டுகிருள். (ஞானப்பால்)

பால்நினைந்தூட்டும் தாயினும்
சாலப் பரிந்து. —மாணிக்கவாசகர்

குழந்தைக்கு எப்போது பசி வருமென்பதை உணர்ந்து தாய் பாலூட்டுகிருள். அதைவிடச் சாலப்பரிந்து ஒப்பில்லா ஆனந்தத்தை எங்களுக்கு அளிக்கிருள். இறைவன் அன்பு சொரூபம் இல்லாமலா!

உயிர்களிடத்து அன்பு வேண்டும்
உண்மையென்று தானறிதல் வேண்டும்.
—பாரதியார்

இப்படிப்பட்ட அன்பினுல் ஒரு அரசன் (சிபிச் சக்கரவர்த்தி) தன் உடல், உயிரையே அர்ப்பணிக்கிறுன். இறைத்தன்மை எய்துகிறுன். பெற்றேரிடத்து அன்பில்லாத குழந்தைகளை உலகில் பார்க்கமுடியும். தன் குழந்தையிடம் பாசமில்லாத தாயை உலகில் காணமுடியாது. அன்னை; அன்னை; என்று ஓலமிடுகிருர்கள். பாசமுள்ள அன்பே சிவமாக உள்ள இறைவனிடம் ஆர்த்த பிறவித்துயர் கெட வேண்டி நிற்கிருர்கள்.

''செய்யாமற் செய்யும் உதவி''—இப்படிச் செய்யக்கூடியவர்கள் யார் என்று சிந்திக்கவேண்டும். சாதாரண மனிதர்களால் செய்யக்கூடியதா?

கண்ணன் பஞ்சபாண்டவர்கள்மீது நட்புப் பூண்டான், துரியோதனதிகளிடமும் நட்புப் பூண்டவர். பஞ்சபாண்டவர்கள், அன்புவழி, அறவழி நின்று அன்பு பூண்டார்கள். துரியோதனனே, வெறும் சொல்லளவில் அன்பு பூண்டான். முடிவு அன்புவழி நின்றவர்களிடம் தன்னை அர்ப்பணித்தார். அன்புதான் இறைவன் என்பதற்குப் பாரதத்தில் வரும் சான்றுகள் கொஞ்சமா?

குசேலர் — கண்ணன் கதை பெரிய எடுத்துக்காட்டு.

அன்பு சிவமென்றறியார் இரண்டென்பர்
அன்பு சிவமென்றறிவார்க் கிரண்டில்லை
அன்பு சிவமென்றறிவால் அறிந்தபின்
அன்பே சிவமாய் அறிந்துகொண்டாரே.

# நான் விரும்பும் விஞ்ஞானம்

**வி. பிரவீன்குமார் - 9 B**

விஞ்ஞானம் என்பது இன்று, நேற்றுத் தோன்றியதல்ல. இது தொன்றுதொட்டு இருந்துவரும் ஒன்ருகும். இது காலத்திற் குக்காலம் மெருகேறி மலர்ச்சிபெற்று வளர்ந்து இன்று உலகம் முழுவதிலும், பிரதி பலிப்பதுடன் நமது அன்ருட வாழ்க்கை யிலும் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. இந்த 20ம் நூற்ருண்டு, விஞ்ஞானத்தின் முக்கிய காலகட்டத்தில் ஒன்ருகும். இன்று உலகம் முழுவதிலும் வியாபித்திருக்கும் விஞ் ஞானத்தின் வளர்ச்சிபற்றி நாம் எப்பொழு தாவது சிந்தித்ததுண்டா?

ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள் அதிக அறிவுபெற்றவர்களாக இருக்கவில்லை. இவர் கள் நாடோடி வாழ்க்கையை நடாத்திவந் தனர். இயற்கை படைத்த தாவரங்களி லிருந்தும், விலங்குகளிலிருந்தும் உணவைப் பெற்று வாழ்ந்தனர். மரங்கள், குகைகள் போன்றவற்றைத் தமது உறைவிடங்களாகப் பாவித்தனர். காலமோ வேகமாகச் சுழன் றது. அப்போதுதான் மனிதன் தனது சிந்தை யைக் கிளறிவிட்டான். ஆறறிவு படைத்த மனிதன் தனது சிந்திக்கும் ஆற்றலாற் புதிய முறையிற் செயற்படத் தொடங்கிஞன். அதன்படி நிரந்தரமான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அதில் வாழத்தொடங்கி ஞன். இதஞல், மனித யுகத்தில் ஒரு மறுமலர்ச்சி தோன்றியது,

மனிதன் தனது ஓய்வுநேரங்களைப் பல வகையான ஆய்வுகளிற் செலுத்தியதன் பயஞக வாழ்க்கை முறையை இலகுவாக்கிக் கொள்ளக்கூடிய வழிவகைகளைக் கண்டு பிடித்தான். காலச்சுழற்சியாற் பல விஞ் ஞானிகள் உலகத்திற் தோன்றினர்கள். அவர்கள் தரை, வான், கடல் ஆகியவற்றில் தமது சிந்தையைத் தொடரவிட்டதன் பல ஞகப் பல புதிய கருத்துக்கள் வெளிப்படுத் தப்பட்டும் அன்றைய சமுதாயம் அதனை ஏற்க மறுத்தது. ஆஞல் காலப்போக்கில் அவர்கள் உண்மையை உணர்ந்துகொண் டார்கள்.

"மானிடனே உன் சொந்தச் சிந்தை யாற் செயற்படப் பழகு, அதையும் ஏன்? எதற்காக? எப்போது? என அறிந்துகொள்" என்று அன்று கூறினர் கிரேக்க தத்துவ ஞானியான சோக்கிரடீஸ். அதைப்போலப் பல அறிவாளிகள் உறங்கிக்கொண்டிருந்த மக்களின் சிந்தையைத் தட்டி எழுப்பினர். இதன் பலஞகக் கலிலியோ, சேர் ஐசாக் நியூற்றன், ஐன்ஸ்டைன் போன்ற விஞ்ஞானி கள் உலகத்திற்தோன்றிப் பல அரிய சாதனைகளை விஞ்ஞானத்துறையிற் சாதித் தனர்.

காலத்தின் சுழற்சியால் உலகில் எல் லாத் துறைகளிலும் மாற்றம் ஏற்பட்டன. முக்கியமாக விவசாயத்துறையிற் பெருமாற் றம் ஏற்பட்டது. சிலகாலத்தின் பின், மேற்கு நாடுகளிற் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டது. இதஞல் ஒரு புதிய யுகமே உலகத்திற் தோன்றியது எனலாம். விவசா யத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும், கைத்தொழிலில் ஏற்பட்ட மாற்றம் காரண மாகவும் பல புதிய கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டன. அக்காலத்தில் விவசாயம் செய்வ தற்காக மரக்கலப்பைகள் போன்றவை பாவிக்கப்பட்டது. ஆஞல் இன்ருே, மிகப் பிரமாண்டமான இயந்திர வகைகள் விவசா யத்துறையில் பாவிக்கப்படுகின்றன. இத ஞல் மிகப் பரந்தமுறையில் அதிக உற்பத் தியை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின் றது.

அடுத்து, நாம் உறைவிடத்தை எடுத் துப் பார்த்தால் அக்காலத்தில் மரங்களிலும் குகைகளிலுமே மக்கள் வாழ்க்கையை நடாத்திஞர்கள். ஆஞல் இன்ருே அதிக மக்கள் வாழத்தக்க நவீன வசதிகளைக்

கொண்ட உறையுள்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதைப்போல் போக்குவரத்திலும், மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. அக்காலத்தில் மக்கள் கால்நடையையும் மற்றும் குதிரை கழுதை போன்றவற்றையும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தினுர்கள். சிலகாலத்தின்பின் 'சில்லு' கண்டுபிடிக்கப்பட்டதன்பயனுய் மக்கள் வண்டில்களைப் போக்குவரத்துக்குப் பாவித்தார்கள். காலச் சுழற்சியின்பின் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனுல், போக்குவரத்துத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதன் பலனுக மோட்டார் வாகனம், புகையிரதங்கள், கப்பல்கள், விமானம் போன்றன கண்டுபிடிக்கப்பட்டன.

வான்துறையைப் பிரித்தெடுத்துப் பார்த்தால் விமானத்தைக் கண்டுபிடித்த பெருமை 'ரைட் சகோதரர்களையே' சாரும். காலப்போக்கில் அதிலும் மாற்றம் ஏற்பட்டது. அதுவே 'ஜெட்' யுகமாகும். இன்று மிக வேகமாகச் செல்லக்கூடிய ''சுப்பர் சொனிக்'' விமானங்கள், ''மிக்'' போர் விமானங்கள் போன்றன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனுல் மிகப்பரந்த உலகம் வரவரக் குறுகிக்கொண்டே வருகிறது. அத்துடன், விஞ்ஞானிகள் ஓய்ந்துவிடவில்லை. அதன்பலனுக 1969ம் ஆண்டு நமது விண்கலம் வான்வெளியையும் தாண்டிச் சந்திரனில் இறங்கியது. ''நீல் ஆம்ஸ்ரோங்'' மனிதனுக்கு இது ஒரு சிறு படி, ஆனுல், மனித இனத்திற்கு இது மாபெரும் பாய்ச்சல் என்று அன்று சொன்னுர். ஆம், அவர் கூறியது முற்றிலும் உண்மை. இன்று அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் பல கோள்களுக்குப் பல விண்கலங்களை அனுப்பியுள்ளன. இவையெல்லாம் விஞ்ஞானத்தின் முதிர்ந்த வளர்ச்சியைக் காட்டுகின்றன எனில் மிகையாகாது.

விஞ்ஞானம் மருத்துவத் துறையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அக்காலத்தில் மக்கள் நோயை உண்டாக்குவது பிசாசுகளே என்று எண்ணினர். அதற்கு மருந்தாக மூலிகைகளைப் பாவித்தனர். ஆனுல், விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் பல நோய்களும் அவற்றை உண்டாக்கும் காரணிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனுல், மக்கள் தங்களை மரணத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

கைத்தொழிற் புரட்சியால் இன்று மக்களுக்கு அதிக ஓய்வுநேரம் கிடைத்துள்ளது. இவ் ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காகப் பல்வகையான சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலகில் நடக்கும் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் கேட்க வானெலியும், உலகெங்கும் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழத் தொலைக்காட்சிப் பெட்டியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர, மின் சக்தியால் இயங்கும் மின் அடுப்புகள், மின் விசிறிகள், 'எயர்கண்டிஷன்' போன்றனவும் கண்டுபிடிக்கப்பட்டன. இதனுல், மனிதன் தனது அத்தியாவசியத் தேவைகளைப் பெற்று மிகவும் நாகரிகமான வாழ்க்கையை நடத்துகிறுன்.

இன்று மனிதன் விஞ்ஞானத்தின் உதவியாற் சூழலை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகிறுன். அமெரிக்கா போன்ற நாடுகளில் மழையைக் கட்டுப்படுத்துகின்றனர். அதைப் போல் புயல்களையும் திசைதிருப்பிவிடும் சக்தியையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். ஆனுல் இன்னும் விஞ்ஞானம் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஒரு காலத்தில் மனிதனுற் சூழலை முழுமையாகக் கட்டுப்படுத்தக்கூடிய காலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தற்போது விஞ்ஞானம், உலகம் முழுவதும் வியாபித்துக் காணப்படுகின்றது. மாணவர்களுக்கு விஞ்ஞானம் கட்டாய பாடமாக இருந்துவருகின்றது. இதனுல் விஞ்ஞானம் மென்மேலும் வளர்ந்து உச்ச நிலையை அடையக்கூடிய சூழ்நிலை இயல்பாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்று விஞ்ஞானம் இன்றேல் உலகில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டது. ஆகவே, விஞ்ஞானத்தின் முக்கிய இந்தக் கட்டத்தை 'விஞ்ஞான யுகம்' என்றழைப்பதில் தவறு ஏதும் இல்லை என நினைக்கிறேன்.

—★—

# உலக சமாதானத்திற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பங்களிப்பு

சு. ரவீந்திரன் - 12 வர்த்தகம்

உலக நாடுகளிடையே சிறிய சிறிய சச்சரவுகள் தொடக்கம் பெரும் யுத்தங்கள் வரை ஏற்படுவதுண்டு. பெரும் யுத்தங்கள் ஏற்பட்டு உலகில் பேரழிவுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அந்த யுத்தங்களும் அழிவுகளும் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிமுறைகள் ஏதாவது உண்டா? என்று மக்களும், மக்கள் தலைவர்களும் சிந்திப்பதுண்டு. உலகில் எங்கோ ஒரு மூலையில் உள்ள இரு நாடுகளுக்கிடையில் ஏற்படும் யுத்தம் அந்த நாடுகளை மட்டுமன்றி, உலக நாடுகள் எல்லாவற்றையுமே பாதிக்கக்கூடும். உதாரணமாக இப்பொழுது, மத்திய கிழக்கில் ஈரானுக்கும், ஈராக்கிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்தம் வல்லரசுகளின் தலையீட்டால், மூன்றாவது உலக மகா யுத்தம் ஒன்றைத் தோற்றுவித்து, மீண்டும் ஒரு பேரழிவு ஏற்பட்டுவிடுமா என்ற பயத்தை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. எனவே, உலக நாடுகளிடையே ஒற்றுமையையும், நட்புறவினையும் ஏற்படுத்தவும், மக்களை யுத்த அபாயங்களிலிருந்தும், பயப்பீதியிலிருந்தும் பாதுகாக்கவும் ஒரு சர்வதேச அமைப்புத் தேவை என்று கருதி, சர்வதேச சங்கம் முதலாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டது. உலக சமாதானத்தைப் பேணவும். சமாதானத்தைக் குலைக்குமுயலும் நாடுகளைப் பலத்தினால் அடக்கவும் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சங்கம் இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தடுக்கத் தவறிவிட்டது. இரண்டாம் உலக மகாயுத்தம் உலகில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. இத்தகைய பேரழிவுகள் மீண்டும் ஒருமுறை ஏற்படாது தடுப்பதற்கு சர்வதேச சங்கத்தைவிட, சக்தியுள்ள ஒரு அமைப்புத் தேவை என்று கருதிச் செயல்பட்டதன் விளைவாகப் பிறந்ததே ஐக்கிய நாடுகள் சபை என்ற சர்வதேச அமைப்பாகும்.

இந்த ஐக்கிய நாடுகள் சபையைத் தோற்றுவிப்பதற்காக 1942ம் ஆண்டு அத்திவாரமிடப்பட்டது. இதில் அமெரிக்கா, ருசியா, தேசிய சீனா, பிரித்தானியா ஆகிய பெரிய சக்திகள் முக்கிய பங்கேற்றன. 1942ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி இருபத்தாறு நாடுகளின் அரசாங்கப் பிரதிநிதிகள் கையொப்பமிட்ட ஐக்கிய நாடுகள் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1943ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்கா, பிரித்தானியா, ருசியா சீனா ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மொஸ்கோவில் ஒன்றுகூடி, சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலை நாட்டுவதற்கு ஒரு பொதுவான சர்வதேச அமைப்பு அமைக்கப்படவேண்டுமெனவும் சமாதானத்தை விரும்பும் நாடுகள் எல்லாம் அதில் அங்கத்துவம் வகிக்க வாய்ப்பு இருக்க வேண்டுமெனவும், அந்த நாடுகள் இறைமைச் சமத்துவம் உடையனவாக இருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தி, அறிக்கை வெளியிட்டனர். அடுத்து, 1944ம் ஆண்டு ஆகஸ்ற் 24ல் இருந்து ஒக்டோபர் 7 வரை மேலேகூறப்பட்ட நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் வாஷிங்டனில் கூடி ''டம்பர்ட்டன் ஒக்ஸ் திட்டம்'' என்ற ஒரு திட்டத்தை வகுத்தனர். அதன்படி, உலக சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்கும், அதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் ஒரு புதிய சர்வதேச நிறுவனத்தை நிறுவ வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. எனினும், பிரதிநிதிகளிடையே இருந்த சில கருத்து வேறுபாடுகளை நீக்குவதற்காக, 1945ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் தளபதி ஸ்டாலின் ஆகியோர் யோட்டோ என்ற இடத்தில் ஒன்றுகூடி, புதிய நிறுவனத்திற்கான, அடிப்படை விதிகளை வரைவதற்

கென, சான் பிரான்சிஸ்கோவில் ஒரு மகா நாட்டைக் கூட்டவேண்டுமெனத் தீர்மானித் தனர். இதற்கு இணங்க, 1945ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐம்பத்தொரு நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி ஆராய்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்திற்கான அறிக் கையை ஏற்றுக்கொண்டனர். 1945ம் ஆண்டு ஒக்டோபர் 24ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் தினமாகும். இவ்வாறாக, ஐம்பத் தொரு நாடுகளுடன் ஆரம்பமான இந்தச் சபையில் இன்று எமது தாயகமான ஸ்ரீ லங்கா உட்பட நூற்றி ஐம்பத்தியிரண்டு நாடுகள் வரை அங்கத்துவம் வகிக்கின்றன. இவ்வாறு தோன்றிய ஐக்கிய நாடுகள் சபை யின் அடிப்படை நோக்கங்கள் நான்கு, அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன;

1. உலக நாடுகளிடையே ஏற்படும் சச்சர வுகளையும், சண்டைகளையும் சமாதான முறையிலும், கூட்டு முயற்சியாலும் தீர்த்து, உலகில் சமாதானமும் பாது காப்பும் நிலவச் செய்தல்.
2. உலக நாடுகளின் பொருளாதார, சமூக பண்பாட்டு மனிதத்துவ பிரச்சனைகள் தொடர்பாக ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்தும், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தும் நாடுகளிடையே ஒத்து ழைப்பை வளர்த்தல்.
3. உலக நாடுகளிடையே நட்புறவினை வளர்த்து உலக சமாதானத்தை உறு திப்படுத்தல்.
4. மேலே கூறப்பட்ட நடவடிக்கைகளைச் செய்வதற்கு ஓர் ஒருங்கிணைக்கும் மத்திய நிலையமாக இருந்து செயலாற்றல்.

இந்த நோக்கங்களை நிறைவேற்றப் பாடு படும் ஐக்கிய நாடுகள் சபை ஆறு துணை அமைப்புக்களைக் கொண்டுள்ளது. அவை யாவன;

பொதுப் பேரவை, பாதுகாப்புச் சபை, பொருளாதாரச் சமூகச் சபை, பொறுப் பாண்மைச் சபை, சர்வதேச நீதி மன்றம், செயலகம் என்பவைகளாகும்.

பொதுப்பேரவை ஐக்கிய நாடுகள் சபை யில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பு நாடுகள் எல்லாம் ஒன்றுகூடும் ஒரு சபையாகும். இச் சபையானது ஒரு வருடத்திற்கு ஒருமுறை கூடுகின்றது. அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன் றும் ஐந்து பிரதிநிதிகள் வரை இச்சபைக்கு, அனுப்பலாம். ஆனால், ஒரு நாட்டிற்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு. முக்கிய தீர்மா னங்களை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை. உலக அமைதி, சமாதானம் என்பன தொடர் பான சகல விடயங்கள்பற்றியும் விவாதிக் கவும், படை குறைப்புப்பற்றி உலக நாடு களுக்கு அறிவுரை கூறவும் இச்சபைக்கு உரிமை உண்டு. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் காரியதரிசியைப் பாதுகாப்புச் சபை யின் சம்மதத்துடன், இச்சபையே நியமிக் கின்றது. பாதுகாப்புச் சபைக்கு நிரந்தர மற்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வது இச் சபையே; இச்சபைக்கு விவாதம் செய்யும் உரிமைமட்டுமே உண்டு. சட்டமியற்றும் அதிகாரம் கிடையாது.

பொருளாதாரச் சமூக சபை பொதுப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்படும் பதி னெட்டு உறுப்பினர்களைக் கொண்டது. ஒவ் வொரு உறுப்பு நாட்டிற்கும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு. இதன் முக்கிய நோக்கம் உலக நாடுகளின் பொருளாதார, சமூகநலத் துறைகளைக் கவனித்து, இத்துறைகளில் மக் களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவ தற்காகப் பாடுபடுவதாகும். முக்கியமாக வேலையில்லாப் பிரச்சனை, பெண்களின் நிலை, தாய்மாரின் நலன்கள் என்பவற்றைக் கவ னிக்கத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஆசிய தூர கிழக்குப் பொருளா தாரக் குழு, ஐரோப்பியப் பொருளாதாரக் குழு, இலத்தீன் அமெரிக்க பொருளாதாரக் குழு, என்பன இச்சபையினால் அமைக்கப் பட்டுள்ள சிறப்புக் குழுக்களாம்.

பொறுப்பாண்மைச் சபையின் முக்கிய பணி இரண்டாம் உலகமகாயுத்தத்தில் தோல்வியடைந்த நாடுகளிடமிருந்து கைப் பற்றப்பட்ட, பிரதேசங்களிலும், ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பில் விடப்பட்ட சுயாட்சிபெறாத நாடுகளிலும் வாழும் மக் களிடையே சுயாட்சி முறைபற்றிய கருத்துக் களைப் பரப்புவதும், இதன் பணியாகும்.

இச்சபை மேலே கூறப்பட்ட பகுதிகள்பற்றிய அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு அனுப்புகிறது. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் ஐந்து வல்லரசுகளும் இப் பொறுப் பாண்மைச் சபையில் அங்கத்துவம் வகிக் கின்றன.

பதினைந்து நீதிபதிகளைக் கொண்ட சர்வ தேச ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் களால் கொண்டுவரப்படும் எந்த வழக்கை யும் விசாரித்துத் தீர்ப்புக்கூறும் அதிகார முடையது. இந்த நீதிமன்றத்தின், தீர்ப்புக் களையும், அதிகாரத்தையும், அங்கத்துவ நாடுகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. அண்மையில் அமெரிக்க பணயக் கைதிகள் விவகாரம் தொடர்பாக, சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஈரான் ஏற்றுக்கொள்ளாது உதா சீனம் செய்தமை இங்கு அவதானிக்கக்கூடி யதாகும். நாடுகளிடையே ஏற்படும் பிணக் குகளைத் தீர்ப்பது தொடர்பான சட்டப் பிரச்சனைகள் ஏற்படும்போது பொதுப்பேர வையும், பாதுகாப்புச் சபையும் இதன் உதவியை நாடும்.

ஐக்கிய நாடுகள் சபையின் சகல நிர் வாக விடயங்களையும் பொதுச்செயலாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் செய லகம் செய்து வைக்கின்றது. பாதுகாப்புச் சபையின் சம்மதத்துடன் பொதுச்சபை பொதுச் செயலாளரை நியமிக்கின்றது. இவரே ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நிர்வாக உத்தியோகத்தராவர். இவர் மூன்று ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். பொதுப் பேரவை, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூக சபை, பொறுப்பாண்மைச் சபை ஆகியவற்றின் கூட்டங்களில் பொதுச் செய லாளர் கலந்து கொள்வார். ஐக்கிய நாடு கள் சபையின் பணிகள் பற்றிய ஆண்டறிக் கையை ஒவ்வொரு வருடமும் இவர் பொதுச் சபையில் சமர்ப்பிப்பார்.

பாதுகாப்புச்சபை பதினைந்து அங்கத்த வர்களைக் கொண்டுள்ளது. இச்சபையில் அமெரிக்கா, ருசியா, பிரித்தானியா, சீனு, பிரான்ஸ் ஆகிய ஐந்து உலக நாடுகள் நிரந்தர உறுப்பினராக உள்ளன. இவ் ஐந்து நாடுகளை விட ஏனைய நாடுகள் நிரந்தரமற்ற நாடுகளாகும், இவை இரண்டு ஆண்டு காலம் பதவிக்குத் தெரிவு செய்யப்படுகின் றன. இச்சபையின் முக்கிய நோக்கம் மக் களுக்கு பாதுகாப்பையும், சமாதானத்தை யும் நிலவச் செய்தலாகும்.

மேலே கூறப்பட்ட ஆறு துணை அமைப் புக்களை விட, சர்வதேச தொழில் நிறுவனம், உணவுவிவசாய நிறுவனம், ஐக்கிய நாடு களின் கல்வி, விஞ்ஞான, கலாச்சார நிறு வனம், சர்வதேச நிதி நிறுவனம், உலக சுகாதார நிறுவனம், சர்வதேச அகதிகள் நிறுவனம், உலக வங்கி போன்ற பல்வேறு நிறுவனங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனங்களாக செயற்படுகின்றன.

இம் முகவர் நிறுவனங்கள் அங்கத்துவ நாடுகளின் பொருளாதார சமூகநல மேம் பாடுகளுக்காக பல திட்டங்களைச் செயற் படுத்துகின்றன. அபிவிருத்திப் பிரச்சனைகள், உலக வர்த்தகம், மனித உரிமைகள், மகளிர் அந்தஸ்து, சமூகநலன், விஞ்ஞானமும் நுண் தொழிலும் போன்ற சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளில் இம் முகவர் நிறுவனங்கள் ஈடுபட்டுழைக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக சமா தானப் பணியை நோக்கும்போது, ஐக்கிய நாடுகள் சபையானது இதுவரை காலமும் மூன்றாவது உலக மகாயுத்தம் என்று ஒன்று தோன்றுவதற்கு ஒரு தடைக்கல்லாக அமைந் திருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பேணி நாடுகளிடையே நட்புறவை வளர்ப் பதை பிரதான நோக்கமாகக் கொண்டியங் குகின்ற ஐக்கிய நாடுகள் சபை தனது அமைதிப் பணிகாக்கும் வரலாற்றில் சில தோல்விகளைக் கண்டிருந்தபோதும் வளமான தும், நீதியுமானதுமான ஒரு உலகத்தை கட்டியெழுப்புவதில் காத்திரமான வகையில் தனது பங்கைச் செலுத்தி வருகின்றது.

''ஐக்கிய மென்னும் அகன்ற பிரதேசத்தில்
ஐக்கிய மில்லா வல்லரசுகளின் வெற்றி
வெறி - அதனை
வேரோடு சாய்க்கும் ஐ. நா. வின் சமரச
பங்களிப்பு
சந்தோஷ பங்களிப்பே.''

★

# விஞ்ஞானத்தின் பயன்கள்

சி. சிவவரதன் 10-ம் வகுப்பு A

ஆத்தும ஞானம், விஞ்ஞானம், இலக்கியம் எனும் முத்துறைகளின் கூட்டுறவால் மனித வாழ்வு முழுமை பெறுகிறது,'' என்று கூறுகிருர் பெரும் பேரறிஞரான விஞேபாவே. விஞ்ஞானம் இன்றைய நிலையில் மனித நாகரிகத்தின் வியத்தகு வளர்ச்சிக்குச் சிறந்த தோழனுகவும், அதேவேளையில் அது அழிவுத் தொழிலுக்கும் பயங்கரக் காலனுகவும் விளங்குகிறது. காட்டிலே விலங்கு நிலையில் வாழ்ந்த மனிதனை விண்வெளியைக் கடந்து கோள்களுக்குப் பயணஞ் செய்யுமளவிற்கு வளர்த்ததும் விஞ்ஞானம். இவ்வளர்ச்சியத்தனையையுங் கணப்பொழுதிலழித்து, உலகைச் சுடுகாடாக்கிவிடப் பயமுறுத்துவதும் விஞ்ஞானம். எனவே, ஆக்கத்திலும் அழிவிலும் எவ்வகையில் நோக்கினும் வாழ்வோடு பிரிக்கமுடியா வகையில் விஞ்ஞானம் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது.

விஞ்ஞானம் கடலைப்போல அகலமும், ஆழமும் நிறைந்த அறிவுத்தொகுதி. மனித இனம் உலகிலே முளைவிடத்தொடங்கிய நாள்முதல் இன்றுவரை அது பல வசதிகளைப் படைத்துக்கொண்ட கதையை விஞ்ஞானத்தின் கதை எனலாம். இவ்வுண்மைக்கதையின் ஒவ்வொரு திருப்பத்திலும், மனித சிந்தனை தூண்டப்படுகிறது. இதனுல், அறிவு பிரகாசிக்கிறது. இவ்வாறு பிரகாசிக்கும் அறிவுத் தொகுதியே விஞ்ஞானம். அது சிந்தனைச் செல்வர்களான விஞ்ஞானிகளின் ஆய்வு மூலம் விளைவுகளாகவும், விதிகளாகவும் காட்டப்பட்டிருக்கிறது. இவை விவசாயம், கைத்தொழில், மருத்துவம், போர் ஆகிய துறைகளுக்காதாரமான பல புதிய உண்மைகளையும், கண்டுபிடிப்புகளையும் காண உதவுகிறது. இவை யாவற்றையும் திரட்டிப் பார்க்கும்போது மனித சிந்தனையிற் காணப்படும் திட்பமும், நுட்பமும், மிகத் துரிதமான சந்தேக விபரீதமற்ற தெளிவும், முழுமையான பயனும் விஞ்ஞானப் பண்புகளாக விளங்குவதைக் காணலாம்.

இன்றைய மனித வாழ்க்கையில் விஞ்ஞானம் உயிரும், உடலும் போலப் பிணைந்து காணப்படுகிறது. மிகமிகப் பிற்போக்கான கிராமங்களிற்கூட விஞ்ஞானத்தின் ஒளி பரவியிருப்பதைக் காணமுடிகிறது. அன்று ஏரும், எருதுங்கொண்டு நெற்றிவியர்வை சிந்த உழைத்துப் பயன்கண்ட உழவன், இன்று இயந்திரக்கலப்பையால் ஆழ உழுது இரசாயன உரமிட்டுப் பெரும் பயன் பெறுகிறுன். ஆழக் கிணற்றில் ஆவி கலங்கிச் சோர நீரிறைத்துப் பயன் கண்ட தோட்டக்காரன் இன்று இயந்திரங்களின் உதவியால் நீரிறைத்துப் பயன் பெறுகிறுன். பெரும் பண்ணை முறை விவசாயத்திற்கூட உழுதல், மட்டப்படுத்தல், விதைத்தல், களை பிடுங்கல், எருவிடல், அறுத்தல், அடித்தல் ஆகிய செயல்களை இயந்திரங்களே செய்கின்றன, இம்மாற்றங்கள் கமக்காரரின் உழைப்புச் சக்தியைக் குறைத்து விளைவை மிகுவிக்கின்றன. அன்று பயிர்களுக்கு நோயேற்பட்டுவிட்டால், மாற்ற வகையறியாது, தெய்வச் சினமென நம்பி அதற்குப் பிரீதி செய்த மக்கள் இன்று இரசாயன மருந்துகளினுதவியாற், தம் பயிரை அழிவினின்றுங் காக்கின்றனர். விஞ்ஞான ரீதியான அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் வாயிலாக வறண்ட நிலங்களுக்கு நீர்பாய்ச்சுகின்றனர். பயிர் வளராத பாழ் நிலங்கூட இன்று விஞ்ஞான முறைகளாற் பசுஞ்சோலைகளாக மாறியிருப்பதைக் காணமுடிகிறது. இவை விவசாயத் துறையில் விஞ்ஞானம் செய்த மாற்றங்களுட் சிலவாம்.

அன்று பயணஞ் செய்வதற்குக் கால்நடை தவிர்ந்தாற், கட்டை வண்டி என்றிருந்த நிலைமாறி இன்று மனிதன் விண்மீதும்,

மண்மீதும், மாகடல்மீதும் விரைந்து பிரயாணஞ் செய்கிறுன். பலநாட் பிரயாணம் சிலநாளாகச் சிலமணியாகச் சுருங்க வகை வகையான வாகனங்களை விஞ்ஞானம் தந்திருக்கிறது. சகல சௌகரியங்களுமமையப் பெற்றுக் கடல் வயிற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும் கப்பல்கள் தேசதேசாந்திரங்களை இணைக்கின்றன. விண்மீது பிரயாணஞ் செய்யும் பலவகை விமானங்கள் சிலமணி நேரத்தில் நெடுந்தூரத்தைக் கடந்து விடுகின்றன. இவை யாவும் விஞ்ஞானம் மனித குலத்திற்களித்த பரிசுகளாம். இச்சாதனங்களால் இடமகன்ற இப்பூமி சுருங்கி பலவின மக்களும் ஒன்று கூடும் வாய்ப்பினுல் உலகம் ஒரு குலமாகும் நிலை ஏற்பட்டுவிட்டது. இவை யாவற்றையும் விஞ்சிக் கோள்களுக்குப் பிரயாணஞ் செய்யும் நிலை உதயமாகிவிட்டதென்றுல் விஞ்ஞானத்தின் புதுமைகளை வியக்காமல் இருத்தல் முடியாது.

இல்வாழ்க்கையில் மின்சாரம் என்ற உருவில் விஞ்ஞானம் செய்த புதுமைகள் அளப்பில. அது இல்லத்திற்கு ஒளி ஊட்டி விளக்கஞ் செய்கிறது. கூட்டித்துடைத்துக் கழுவிச் சுத்தஞ் செய்கிறது. இன்பமூட்டும் வாஞெலியாய், பேசும் படமாய் விளங்குகிறது. சுருங்கக் கூறின் நல்லதோரில்லாளாய் வேலை மிகச் செய்தும், அதிக கூலி கேளாச் சேவகஞக விளங்குகிறது. அன்றுட வாழ்விலே செய்திகளை விரைவிலறிவித்தற்கேற்ற தந்தி, தொலைபேசியாகவும் மிளிர்கிறது.

கைத்தொழிற் துறையில் விஞ்ஞானம் செய்தமாற்றம் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. நீராவியின் சக்தியும், எரிபொருட் சக்தியும் கண்டுபிடிக்கப்பட்டபோது கைத்தொழிற் துறையிலேற்பட்ட மாற்றம் சரித்திரத்தில் ஓர் திருப்பத்தை உண்டாக்கித் தொழில் யுகத்தைத் தோன்றச் செய்தது. இதனுற், பெரிய பெரிய தொழிற்சாலைகள் நிருமாணிக்கப்பட்டன. எந்திரங்கள் பல நூற்றுக்கணக்கானவரின் வேலையைச் சில மணி நேரத்திற் செய்தன. இதனுல் உற்பத்தி பெருகியது, பொருளின் தரம் உயர்ந்தது, விலை குறைந்தது. இம்மாற்றம் சமுதாயத்திலேயே ஒரு பலம் வாய்ந்ததொரு தொழிலாளவர்க்கத்தையும் உண்டாக்கியது.

இவை யாவற்றிலும் மேலாக மருத்துவத் துறையில் விஞ்ஞானத்தின் மாற்றங்கள் சொல்லிலடங்கா. விஞ்ஞானம் தந்துதவிய மருந்துகள் கொடும்பிணிகளை ஆற்றும் அமிர்த சஞ்சீவிகளாக மிளிர்கின்றன. சமுதாயத்திலேற்பட்ட தொற்று நோய்களும் மாற்று மருந்துகளாற் தடுக்கப்பட்டன. உடல் உள்ளுறுப்புகளைப் படம் பிடிப்பதன் மூலம் பழுதுள்ள இடங்கள் அறுவை சிகிச்சையாற் குணமாக்கப்பட்டன. இதயத்தின் பழுதே அறுவை வைத்தியத்தாற் குணமாக்கப்பட்டதென்றுல் பிறவுஞ் சொல்லவேண்டுமோ? இறப்பைத் தடுக்காவிடினும், ஊசிமருந்துகளாலும், உயிர்ச்சத்துக்குளிகைகளாலும் பெருமளவு நோய்த்துன்பத்தைக் குறைக்கமுடிகின்றது. இவை யாவற்றிற்கும் மனித குலம் நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

இவையன்றி, அகத்துறையிலும் விஞ்ஞானத்தின் தாக்கம் வாழ்வுக்கு உயர்வளிக்கிறது. உண்மைத் தீவிரமாக ஆவலோடு அறியமுயலும் மனநிலை வாழ்வுக்கு இன்றியமையாததாகும். அன்றியும் கற்பனைக் கலப்பின்றி அறிவோடு பொருந்தக் கருமமாற்றும் இயல்பு புதுமை வாழ்வுக்குப் பொருந்துவதொன்று. எண்ணும் கருத்தையும், செய்யும் செயலையும், சொல்லும் சொல்லையும் திட்பநுட்பத்தோடும், நிதானத்தோடும் எண்ணுதலும், சொல்லுதலும், செய்தலும் அறிவிற்கு அடையாளமாகும். இப்பண்புகளனைத்தும் விஞ்ஞானப் பண்புகளாய் மனதை வளர்த்து வாழ்வுக்கு உரமூட்டுகின்றது.

இன்று விஞ்ஞானம் அரசியல் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருக்கும் நிலையை உலகெங்கும் காணமுடிகிறது. ஆட்சியாளரின் கட்டளைக்கேற்ப விஞ்ஞானிகள் நடந்து கொள்ளவேண்டியிருப்பதனுல் சிலவேளை நன்மையும், சிலவேளை குண்டு, ஏவுகணை பயங்கர ஆயுதங்கள் முதலியவற்றை உரு

வாக்கி அழிவை ஏற்படுத்தவும் வழிவகுக்கின்றது. உணவு, உடை உறையுள் முதலியனவற்றை சமுதாயத்திற்களிக்கும் பொறுப்பு முதலியன விஞ்ஞானத்தின் தலையில் சுமந்துகிடக்கும் பெரும் பொறுப்பாகும். எனவே உலக நாடுகளனைத்தும் விஞ்ஞானத்தை அழிவுத்துறைக்குப் பயன்படுத்தாமல் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் ஆக்கத்துறைக்குப் பயன்படுத்துதல் இன்றியமையாததாகின்றது.

All those who have meditated on the art of governing mankind have been convinced that fate of empires depends on the education of youth.

— Aristotle

A good book should expose the privacy of the writer's mind and invade the privacy of the reader's mind.

— Keith Jennison

உடற்பயிற்சி: மாணவர்களுக்கு உடற்பயிற்சி வேண்டியது. யோகாசனங்கள் சிறப்பாகப் பயனுடையவை. சற்றேறக்குறைய அரை மணி நேரம் சிறப்பாகக் காலை 6 மணி தொடக்கம் $6\frac{1}{2}$ மணி வரையும் ஆசனங்களுக்கு ஒதுக்குக. சிரசாசனம் ஞாபக சக்தியையும் நுண்ணறிவையும் கூட்டுகிறது. உங்கள் அப்பியாசத்தில் ஒழுங்காயிருக்குக. இது உங்களுக்கு ஒளிவீசும் ஆரோக்கியத்தை அளிக்கும்.

— சுவாமி சிவானந்தர்

# எனது பொழுதுபோக்கு

தி. பிரிதிவிராஜ் - 8-ம் வகுப்பு B

"முயற்சி திருவினையாக்கும் முயற்சியின்மை
இன்மை புகுத்தி விடும்."

என்ற வள்ளுவர் வாய்மொழி, முயற்சியின் பெருஞ் சிறப்பை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவுறக் காட்டுகிறது. உழைப்பொன்றே உயரிய செல்வம் என்ற உண்மையை உணர்த்துகிறது. நான் முழுவதும் தொழில் புரிவதற்கு மனிதனின் உடல், உள இயற்கை என்றுமே அனுமதித்ததில்லை. அதனால் எட்டு மணி நேர வேலை என்ற தத்துவம் தொழிலுலகிலே தோன்றி, நாளடைவில் சட்டமாகி விட்டது. இதனை மீறி தொழிலாற்றுவதால் மனிதன் நோயாளியாகி அற்ப ஆயுள் உள்ளவனாகின்றான். அதனால் வேலை நேரத்தின் பின், அவனது உடலும், உள்ளமும் ஆறுதல் கொள்ளத்தக்க வகையில், அவன் மாற்று முயற்சிகளில் ஈடுபடுதல் அவசியமாகிறது. அவைகள் அவனை பெரிதும் விரும்பத்தக்கனவாயிருத்தல் வேண்டும். அவ்வித முயற்சிகளே பொழுதுபோக்குகள் என்னும் பெயர் பெறுந்தகையன.

ஒவ்வொரு மனிதனின் பண்புக்கேற்ப, பொழுதுபோக்குகள் பலப்பல வகையின. பேசும்படம் பார்த்தல், சீட்டாடுதல் என்பன ஒரு வகையின. உலாச் செல்லல், விளையாடுதல் என்பன இன்னொரு வகையின. புத்தகம் படித்தல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல் முதலியன வேறொரு வகையின. கடைசி வகையின மனம் விரும்பும் பொழுதுபோக்குகளாவதோடு பயன் தரக்கூடியன. இவ்வகையானவற்றில் என் உள்ளம் பெரிதும் விரும்புவது. கோழிப் பண்ணை அமைத்தலாகும்.

வண்ண வண்ணப் பறவைகளைக் கண்டு களிப்பதிலும், அவற்றை வளர்ப்பதிலும் எனக்கு இயல்பாகவே நாட்டமுண்டு. எனினும், அவற்றைப் பிடிப்பதுந் தக்க முறையில் வளர்ப்பதும் எளியதொன்றன்று. அதனால், என் மனம் எளிதிற் பெறக்கூடியனவும், இலகுவிற் காக்கக்கூடியதுமான கோழிகளை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டது. காலை, மாலை வேளைகளிலே உயிர்த்துடிப்புள்ள கோழிகளையும், குஞ்சுகளையும் அவதானித்து, உணவளித்தலும், தக்க பாதுகாப்புச் செய்தலும் அவப் பொழுதைத் தவப் பொழுதாக்கும் முயற்சிகள் என்பது என் கருத்து. அன்றியும் அவை எனக்கு உறுதியளிக்கும் பயிற்சிகளாகவும் அமைந்தன. அரசனைப்போல், கம்பீர நடை நடந்து, நிமிர்ந்து நின்று, பண்ணையை ஆட்சி செய்யும் கோழிகள், கண்ணுக்கும், மனத்திற்கும் விருந்து செய்தன. மாலை வேளைகளிலே முட்டைகளைப் பொறுக்கிச் சேர்த்தலும், அவற்றைத் தரப்படுத்தித் திகதியிடுதலும் எனக்கு இன்பப் பொழுது போக்குகளாய் விளங்கின. எனினும் அவை என் உடலுக்கும், உள்ளத்திற்கும் நலனளித்து, சிறியதொரு வருவாயையும் தந்தமையாலே, கோழிப்பண்ணை அமைத்தல் எனது பொழுது போக்காய் அமைந்தது.

கோழிகளும் சௌகரியத்தோடு குடும்பமாக வாழ்வதற்கு, காற்று, மழை, வெயில் என்பன தாக்காத கொட்டில் மிக்க அவசியம். அப்பொழுது தான் அவை நோய் நொடியின்றிப் பயன் தரல் கூடும். கோழிகளை எப்பொழுதும் கூட்டில் அடைத்து வைப்பது அவற்றைச் சிறை செய்வது போலாகும். கோழிகள் காலாறுவதற்கு ஓடித்திரிவதால் அவற்றின் உடல் வலுவும், முட்டையிடும் சக்தியும் பெருகுகின்றன. எனவே, கோழிகள் நடமாடுவதற்குப் பரந்த

இடமிருத்தல் மிகமிக அவசியமானதொன்றுகும்.

அடுத்ததாக, நமது நாட்டுச் சுவாத்திய நிலைக்கேற்ப கோழியினங்களைத் தெரிந்தெடுத்தல் அவசியம். நம் நாட்டில் மேலைத்தேயக் கோழியினங்களும், உள்நாட்டுக் கோழியினங்களும் ஏராளமாக வளர்க்கப்படுகின்றன. இவற்றில் இறைச்சியினக் கோழிகளைப் பார்க்கிலும், முட்டையினக் கோழிகளே அதிகமாக வளர்க்கப்படுகின்றன. மேலைத்தேயக் கோழியினமாகிய ''வெள்ளை லெக்கூன்'' இனமே முட்டையினத்திற்குச் சிறந்தது. அவை முட்டையிடத் தொடங்கிய முதலாண்டிலே இருநூற்றெண்பது முட்டைகளளவில் இடுகின்றன. எனினும், அவற்றை அவதானத்தோடு பார்க்காவிடில், நமது நாட்டுப் பருவ நிலைக்கு ஏற்றனவாக மாட்டா. அதனல், முட்டையினக் கோழிகளும், உள்நாட்டு சேவல்களும் கொண்டு தயாரிக்கப்பட்ட கலப்பினமே நம் தேசத்திற்கு ஏற்றனவாகின்றது. பெரும் பணம் செலவளித்து, மேலைத்தேயக் கோழியினங்களைக்கொண்டு பண்ணையமைப்பதால், பெருஞ்சிரமம் ஏற்படுவதோடு, சில சமயம் பேரிழப்பும் நேரிடும். உள்நாட்டுக் கோழியினங்களைக்கொண்டு பண்ணை அமைத்தாலும் நற்பயனைப் பெற முடியாது. எனவே, நமது நாட்டுச் சுவாத்திய நிலைக்குக் கலப்பினக் கோழிகளே மிகவும் ஏற்றனவாகின்றன.

கோழிகளுக்கு நல்லுணவளித்தல் மிக மிக அவசியம். நாம் எப்படி எம்மை உணவுப் பொருட்களால் பக்குவப் படுத்துகிறேமோ அதே போன்று கோழிகளுக்கும், சத்து, பக்குவம், அளவு, கால வரையறை ஆகிய நான்கு அம்சங்களையும் மனத்திற் கொள்ளல் இன்றியமையாதது.

எனவே, நமது கோழிகளுக்கு நல்லுணவளித்து, இடவசதி செய்து, கலப்பினங்களைப் பெருக்கி, நோய் நொடிகள் கோழியினங்களுக்கு வரமுன் தடுத்தல், போன்றவைகளால் நாம் நல்ல பயனைப் பெறமுடியும். அதனல் நாம் பிறர் கையை எதிர்பாராது மாணவர் நாமே நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

ஆகையால், நாம் எமது பொன்னன நேரத்தை மண்ணுக்காது, ஏதாவது ஒரு வகைப் பொழுது போக்கைக் கையாளுதல் மிக இன்பமும், பயனும் அவசியமானதுமாக அமைகின்றது.

---

உணவு: உங்கள் உணவு எளியதாய் இருக்க வேண்டும். வெங்காயம், உள்ளி, பெருங்காயம், சுவைச் சரக்குள்ள முதலியவற்றை விலக்குக. உங்கள் ஆரோக்கியம் உங்கள் உணவில் தங்கியிருக்கிறது. வாரத்திற்கொரு தடவை உப்பை அல்லது சீனியை உங்கள் உணவிலிருந்து தவிர்த்து நாவடக்கத்தை விருத்தியாக்குக. தேநீர் அல்லது கோப்பி பருகும் பழக்கத்தைப் பழகாதீர்கள். தூய பால் அருந்துக.

— சுவாமி சிவானந்தர்

# சூழல் மாசடைதல்

க. இரமணீதரன்
12-ம் வகுப்பு (கணிதம்)

விஞ்ஞானம் விரைந்து பெருகிவரும் இற்நூற்றுண்டிற் தொழில் முறை வளர்ச்சியினல் ஏற்பட்டிருக்கும் இப்புதிய சகாப்தத்தில் பணப்பெருக்கமும், ஜனப்பெருக்கமும் கூடிக் கொண்டே போவதை நாம் நன்கு அவதானிக்க முடிகின்றது. இப்பெருக்கங்கள் சிலருக்குச் சௌபாக்கியத்தையும் பொருளாதாரப் பெருக்கத்தையும் அளித்தாலும் பல இலட்சக்கணக்கான மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தியும், தூய்மை மிக்க கிராமப் பிரதேசங்களை முற்றுக மாசுபடுத்தியும் வருதலைக் காணலாம். இச்சூழல் மாசடைதல் என்னும் பிரச்சனை தற்காலத்தில் மாபெரும் பயங்கரப் பிரச்சனையாக உலகத்தையே ஆட்டிப்படைக்கும் அழிவுப் பாதைக்கு வித்தாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

சூழல் மாசடைதல் என்றால் என்ன? மக்கள் வாழும் சூழலில் ஏற்படும் பௌதிக இரசாயன உயிரியல் மாற்றங்களாற் சூழல் அழுக்கடைதலே சூழல் மாசடைதல் எனப்படும். இத்தகைய மாற்றங்களால் மனிதன் மட்டுமல்ல, விலங்குகள், பறவைகள், தாவரங்கள் மற்றும் மனிதனேடு தொடர்புடைய மற்றைய பொருட்கள் யாவும் பாதிக்கப்படுகின்றன. இம்மாசாக்கம் இன்று நேற்றுத் தொடங்கியதொன்றல்ல. உலகம் தோன்றியபோதே ஆரம்பமானதொன்று. சூரியனிலிருந்து துகள்களாகப் பூமியும், மற்றும் கோள்களும் வெடித்துச் சிதறியபோதே தூசிப் படலம் பூமியைச் சூழத் தொடங்கிவிட்டது. மனித சஞ்சாரம் குறைந்த நேரத்திற் சிறிய அளவிற் காணப்பட்ட இம்மாசாக்கம் இன்று அபாயகரமான நிலைக்கு வந்து விட்டதெனலாம். அன்று அறியாமை காரணமாகச் சூழல் மாசாகியது. ஆனல், இன்றோ, பொருளாதார, இடநெருக்கடி காரணமாகப் பெருகிக்கொண்டே போகிறது. சின்னஞ்சிறு கால்வாய்களும், அருவிகளும் மட்டுமன்றி மாபெரும் நதிகளும்கூடத் தினமும் அசுத்தமாக்கப்படுகின்றன. குப்பை கூழங்களின் தொகுதி என்று குறிப்பிடப்படும் ஐரோப்பாவிலுள்ள ரைன்நதி இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும். இந்நதி பல ஐரோப்பிய நாடுகளுக்கூடாகப் பாய்ந்தோடுகின்றது. இந்நாடுகள் யாவுமே தொழிற்சாலைகள் நிறைந்தன. இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுகள் யாவும் இந்நதியிற் கலப்பதால் நீர் அசுத்தமாகின்றது. ஆற்று நீர் இயற்கையாகவே பரிசுத்தமாகக் கூடியது. ஆனல், கழிவுகளின் தொகை அளவுக்கதிகமாக இருப்பதால் இயற்கையாக ஏற்படும் தூய்மை இதில் வந்துசேரும் கழிவுகளை ஈடு செய்ய மாட்டாது. ஜேர்மனியிலுள்ள ரூர் பள்ளத்தாக்கு, ஜப்பான் தலைநகராகிய டோக்கியோ நகரம் ஆகியன இத்தகைய பெரும் ஆபத்தை எதிர்நோக்கும் இடங்களிற் சிலவாகும். இவ்வாபத்துக்கள் வருவதற்கு முன்யோசனையின்றி நிர்மாணிக்கப்பட்ட நகரங்களே காரணமாகும்.

அசுத்த நீர் கடலிற் சேர்வதாற் கடல் நீரும் அசுத்தமாகும். அதுமட்டுமன்றி அசுத்தமான பொருட்களைக் கடலுள் எறிவது மக்கள் வழக்கமாகும். இப்பழக்கத்தாலும், எண்ணெய்க் கப்பல்கள் தாழ்வதினலும் வேறு நச்சுப் பொருட்களும், மக்களும் கடல் நீரில் மூழ்குவதாலும் கடல்நீர் மாசடைகின்றது. பின் அங்கு கிடைக்கும் புரதப் பொருட்களை நாம் உண்ண நேரிடுவதால் மாந்தர் பாதிக்கப்படுகின்றனர். இந்நீர் பின்னர் மீண்டும் தூய்மைப்படுத்தப்பட்டுப் பாவிக்கப்படலாம். இரசாயனப் பொருட்களைச் சேர்த்துச் சுத்திகரிக்கலாம். இத்தகைய சுத்திகரிப்பு முறையைத் தென்மேற்கு ஆபிரிக்காவில் காணலாம். அங்கு இந்நீர் சுத்தமாக்கப்பட்டுத் தேவைகட்குப் பயன்படுத்தப்படுகின்றது.

அடுத்ததாக வளி, தாவரங்களின் ஒளித்தொகுப்புக்கும் மனிதனதும், ஏனைய விலங்குகளினதும் சுவாசத்திற்கும் அத்தியாவசிய

மாகும். இவ்வளி வீடுகள், தொழிற்சாலைகள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் புகையினுலும், மோட்டார் வாகனங்களின் கழிவு வாயுக்களினுலும், இரசாயன வாயுக்களாலும், அணுப்பரீட்சைகளினுலும், பரிசோதனைகளினுலும் அசுத்தமடைகின்றது. மோட்டார் வாகனங்கள் இருபது நூற்று வீதமும், தொழிற்சாலைகள் முப்பத்தைந்து நூற்று வீதமும், ஐரோப்பிய நாடுகளில் வளி மண்டலத்தை அழுக்காக்குகின்றன. இவ்வளியைச் சுவாசிப்பதால் இறப்பை விளைவிக்கக் கூடிய சுவாச நஞ்சாக அமைகின்றது. இவ்வளிகள் இரும்பைக்கூடத் துருப்பிடிக்கச் செய்கின்றன. இவ்வளியின் மாசாக்கம் காரணமாக வளிமண்டலத்திலும், காபனீரொட்சைட்டின் நூற்றுவீதம் அதிகரிக்கின்றது. இவ்வளி மாசாக்கத்தால் மக்களுக்குத் தீராத சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. அது மட்டுமல்ல அழகிய கட்டிடங்கள் பல அரிப்புக்குள்ளாகின்றன. இதற்கு ஆக்ராவிலுள்ள தாஜ்மகால் அருகே அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையிலிருந்து புறப்படும் வாயு காரணமாக அரிக்கப்பட்டிருப்பது சிறந்த உதாரணமாகும்.

நீரும் வளியும் மாத்திரம் சூழலை மாசுபடுத்துவதில்லை. குப்பைகூளங்கள், இரசாயன உரங்கள், பூச்சி கொல்லிகள், கிருமி நாசினிகள் என்பவற்றுலும், தரை மாசடைகின்றது. மிகப்புராதன காலந்தொட்டு நெற்பயிர் செய்யப்படும் எமது நாட்டில் இயற்கையாகவே பூச்சிகளும் புழுக்களும், பறவைகளாலும் குருவிகளாலும் அழிக்கப்பட்டன. ஆனுல், இன்றே கிருமிநாசினிகளும் பூச்சி கொல்லி மருந்துகளும் உபயோகிக்கப்படுகின்றன. இதனுல், தரைமட்டுமல்ல பயிர்களும் நச்சுத்தன்மை பெறுகின்றன. அதனுல், இதிலிருந்து பெறும் பிரயோசனங்களும் நச்சுத்தன்மையாகின்றன. இதனுல், வருங்காலத்தில் மரஞ்செடிகளிலிருந்து பெறப்படும் பலனும் குறைகின்றது.

நீர், வளி, தரை, மாசாக்கம் மட்டும் சூழலை மாசு படுத்துவதில்லை. ஒலியும், ஒளியும் கூடச் சூழலை மாசாக்குகின்றதென்றுல் ஆச்சரியமே. தொழிற்சாலைகளும், வானவூர்திகளும் எழுப்பும் இரைச்சல்களும் பல தீய விளைவுகளுக்குக் காரணமாகின்றன.

நம்நாட்டிற் தொழிற்சாலைகளும், சனச்செறிவுமிக்க நகரங்களும் பெருந்தொகையாக இல்லாததாற், சுற்றுடல் அசுத்தமாதல் நம்மைப் பாதிக்காத பிரச்சனை என்று எண்ணுதல் தவறு. இம்மாசாக்கத்தை வெளிநாடுகளில் மட்டுமன்றி நம் நாட்டிலும் காணுகின்றேம். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளாலும், புகையிரதப் பாதைகள், கொழும்பு போன்ற குடிநெருக்கமான பட்டினங்கள், வெடிமருந்துச்சாலைகள் போன்றவற்றுல் நம் நாட்டிலும் சூழல் மாசடைகின்றது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிலுள்ள ஹிரோசிமா, நாகசாக்கி போன்ற அழகிய நகரங்கள் அழிந்தது மட்டுமின்றி அயலிலும் இருக்க முடியாமற் போயிற்று. அங்கு பிறந்த பிள்ளைகளே அங்கவீனர்களாயினர். நம் நாட்டிற் கழிவுப் பொருட்களைத் தெருவோரங்களிற் கொட்டுவதால் ஈக்கள் வளர ஏதுவாகின்றன. இதனுல் வரும் நோய்களும் அனந்தம்.

இவ்வாறு மாசாக்கம் கட்டில்லாது தொடர்ந்து சென்றுல் மனிதனும் ஏனைய அங்கிகளும் உலகில் வாழ முடியாது என்ற நிலைக்கு விரைவிலேயே உந்தப்பட்டுவிடுவார்கள். நீர், வளி, தரை, ஒளி, ஒலி என்பவற்றுற் சூழல் மாசடைவதை விஞ்ஞான அறிவை உபயோகிப்பதன் மூலமும், தொழில்நுட்ப அறிவின் மூலமும் கட்டுப்படுத்தலாம். சுற்றுடல் அழுக்கடைதல் தற்கால மக்களையும், வருங்காலச் சந்ததியினரையும் பாதிக்கக்கூடிய பேரபாயம் என்பதை உணர்ந்தே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் குறிப்பிட்ட ஒரு நாளை உலக அழுக்கு நீக்குத் தினம் என அனுசரிக்க ஏற்பாடு செய்துள்ளது. நகரங்களையும், கிராமங்களையும் நிர்மாணிக்கும் பொழுது, அவற்றினுல் விளையக்கூடிய பலாபலன்களை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தும்போது அவை தீய விளைவுகளை ஏற்படுத்தாத வண்ணம் உபயோகிக்கப்படவேண்டும். இரசாயன உரங்களுடன் கூடிய அறிவுரைகளை வாசித்து, அதில் உள்ளபடி நடந்தால் கஷ்டம் ஏது? இதனுல் தரை மாசாகாது அறுவடையும் பெருகும். இவ்வாறு சூழல் மாசாவதைக் கட்டுப்படுத்தினுல், அது உறுதியான சூழலை உருவாக்குவதுடன், மனிதனின் முன்னேற்றத்துக்கும் வழிகாட்டியாக அமைகின்றது. ★

SITHY VINAYAGAR
EAPLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# அலைகள் ஓய்வதில்லை

பி. மகேந்திரபாலா 12. கலை

எங்கோ அந்த இளம் காலை மெல்லிய இருளைக் கிழித்துக்கொண்டு சேவல் ஒன்று படபடவென அடித்து ஓய்கின்றது. அதனைத் தொடர்ந்து பட்சிகளின், இன்னிசைகள் அந்தக் கிராமத்தையே இசைவெள்ளத்தில் மூழ்கச் செய்கின்றன. ஓ! அந்த ஐந்து அறிவுடைய ஜீவாத்மாக்களுக்குத்தான் எவ்வளவு குதூகலம். நாங்கள்தான் அந்தக் கிராமத்து ஜனங்களை எழுப்புகின்றோம் என்ற குதூகலமோ என்னவோ தெரியவில்லை. கூட்டைவிட்டு சுதந்திரமாகத் தங்களது இறக்கைகளை அசைத்தவண்ணம் அங்கும் இங்கும் பறக்கவும் ஆரம்பித்துவிட்டன. இல்லை வழக்கமான நாட்களைப்போல் அன்றும் தாங்கள் வாழ்க்கையுடன் போராடத் தங்களைத் தயார் செய்கின்றன போலும்.

பட்சிகளின் ஆரவாரத்தைக் கேட்ட பொன்னம்மாள் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்து எதிரே இருந்த அரிக்கன் லாம்பை எடுக்க முயலும்போது அந்த விளக்கின் வெளிச்சத்தில் ஓடாய்த் தேய்ந்துபோன அவளது உருவம் பெரியசாமியின் கண்களில் நீரையே சுரக்கச் செய்துவிட்டது. எவ்வளவு அழகாக இருந்த பொன்னம்மாள்? இப்படியான கோலத்தில் இருக்கின்றான் அவள். அவ்விடத்தைவிட்டு நகர்ந்து எவ்வளவு நேரம் ஆகியும் அவன் அவ்விடத்தை நோக்கிக்கொண்டு இருந்தான். மனைவி மக்களுக்கு சீராக உணவு கொடுக்க முடியாத எனக்கு ஓர் குடும்பமா? ம்... என்று ஒரு நீண்ட பெருமூச்சு அவனை அறியாமலே அவன் அடிமனதில் இருந்து எழுந்தது. நான்மட்டும் இல்லை. இக்கிராமத்தில் வாழும் மக்கள் எல்லாம் என்னை மாதிரித்தானே? அப்படிச் சொல்லாதே. எல்லா மனிதர்களும் இல்லை. தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சுகின்றானே அந்தப் பண்ணையார், தலைவர், பெரியவன், அறிவாளி. எங்களுக்குக் கஞ்சி ஊற்றும் கடவுள் என்று சொல்லித் தன்னைப் புகழ்ந்துகொண்டு பசுத்தோல் போர்த்த புலியாட்டம் கிராமத்தில் பவனிவருகின்றானே. அவனுக்கு வாழ்க்கை ஒரு போராட்டமா? அவன் பின்னால் தாங்கள் கிராமத்தைக் காக்கும் அதிகாரிகள் என்று போலி வேடம் பூண்டு தொழிலாளர்களை நசுக்குகின்றார்களே. அவர்களுக்கு வாழ்க்கை ஒரு போராட்டமா? அரசாங்கம் கூட்டுறவுக் கடைகளுக்குக் கொடுக்கும் உணவுப் பொருட்களைப் பதுக்கிக் கூடிய விலையில் விற்கும் தெருக்கோடி வைரமுத்துவிற்கு வாழ்க்கை ஒரு போராட்டமா? இல்லை நிச்சயம் அவர்களுக்கு வாழ்க்கை ஒரு போராட்டமாக இல்லை. வானைப்பார்த்து, நிலத்தை உழுதும், ஓ! ஒன்றும் அறியாத அந்த ஜீவாத்மாக்களுக்குத்தான் வாழ்க்கை ஒரு போராட்டமாக அமைகின்றன. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதுபோல் முருகன் கோவில் மணியோசை காற்றின் அலையில் தவழ்ந்து சென்றது. ஆம் மணியோசை ஒலி செய்யும்வரை வீட்டுக் கூரையின் துவாரத்துக்கு ஊடாக வானையே நோக்கிக்கொண்டு இருந்த பெரியசாமி இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற வீரம் ஓர் உணர்ச்சி, மனத்தைரியம் அவனின் ஓடாய்த் தேய்ந்துபோன அவன் உடலில் புகுந்து ஆட்சி செய்தது.

கிழக்கு வானில் ஞாயிறு எட்டிப்பார்த்துக்கொண்டு இருந்தான். ஆம் அக்கிராமம் ஓர் அழகிய குக்கிராமம். வீடுகளைச் சுற்று மதில்கள் அமைத்து இருப்பதுபோல அக்கிராமத்தைச் சுற்று தென்னந்தோப்புகள் வரிசையாகக் காணப்பட்டன. பல தடாகங்களும், தடாகத்தைச் சுற்றி வயல்களும் காணப்பட்டன. எங்கும் பச்சைச் சேலையைப் போர்த்தது போல் பச்சைப் பசேல் என்று காட்சியளித்தது அக்கிராமம்.

பெரியசாமி காலைக்கடன்களை முடித்துவிட்டு வெளியில் இறங்கத் தெருக் கோடியில் மணியோசையின் ஒலி சலங், சலங்


என்று கேட்டது. பார்க்காமலே அவனுக்குப் புரிந்துவிட்டது பண்ணையார்தான் வருகிறார் என்று. அவனுக்குமட்டுமல்ல அந்த வழியாகின்ற எருமைமாடுகளுக்கும்கூட அந்தச் சத்தத்தைக் கேட்டு நின்று ஒருமாதிரியாகப் பார்த்துவிட்டுச் செல்லுங்கள். ஆ..... எங்க வயலுக்கா பெரியசாமி போகின்றாய்? ம்..... இந்தமுறை உன்ர வயல்தான் நல்ல விளைச்சல் என்று கேள்விப்பட்டனான். நீ தருகின்ற பணத்துக்குப் பதிலாக நெல்லைத்தா. உனக்கு ஏன் சிரமம், அதைக்கொண்டு வித்துப் பணத்தைத் தருவதற்கு. அடுத்து, இன்னும் ஒன்று, என்னுடைய ஆட்களே வந்து சூட்டுக்களத்திலே நெல்லை எடுத்துட்டுப் போவார்கள். எல்லாம் உங்களுடைய நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன் பெரியசாமி. இல்லாட்டி இப்படிச் சுளையாகப் பணத்தைக் கொடுத்துப்போட்டு இப்படி வந்து நெல்லை எடுக்கிறதுக்கு எனக்கு என்ன விதியா? என்னைப் போல ஆட்கள் இந்தக் கிராமத்தில் இருப்பதற்குக் கொடுத்துவைக்கவேண்டும் என்று பண்ணையார் நீண்ட பாரதத்தை வாசித்துவிட்டு அவர் போய் வெகு நேரம் ஆகியும் கூட பிரமை பிடித்தவன்போல வண்டி சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு நின்றான் பெரியசாமி.

அவன்கண் எதிரில் ஒரு வருடமாகக் கட்டி வந்த மனக்கோட்டை தூள் தூளாகச் சிதறுகின்ற மாதிரி ஒரு பிரமை. யாரோ தன் தலையில் சம்மட்டியால் அடித்ததுபோல் ஒரு மயக்கம். உலகமே தனது அச்சில் விட்டு விலகியது போன்ற ஓர் உணர்வு, நேற்று இரவு இருந்து ஒரு உணவும் இல்லாதஞல் ஒரு தலைசுற்று. அப்படியே அவ்விடத்தில் அமர்ந்துவிட்டான் பெரியசாமி.


எப்போதோ தனது மூத்த பெண்ணின் கல்யாணத்துக்காக மூவாயிரத்து ஐனூறு ரூபா பண்ணையாரிடம் இருந்து பணம் வேண்டியது உண்மை. ஆனல், அதற்கு மேலாக வட்டியுடன் குட்டியையும் போட்டு மூவாயிரத்து ஐனூறு ரூபாய்க்கு மேலாக ஐந்தாயிரம் ரூபாய்க்குக்கிட்டக் கொடுத்துவிட்டான் பெரியசாமி. ஆனல், இவன் கணக்கு எழுதவில்லை. எழுதத் தெரியவில்லை பெரியசாமிக்கு. அதையே கணக்காக வைத்து, பண்ணையார் இவனை மட்டுமல்ல, எத்தனையோ குடும்பங்களை அவன் காலடியில் வைத்து ஆட்டும் புண்ணியவான்தான் பண்ணையார் ராமமூர்த்தி.

என்ன பெரியசாமி, அவிடத்திலே ஏதோ பறிகொடுத்தவன் மாதிரி இருக்கிறாய். ம்..... என்று விரக்தியான சிரிப்பு ஒன்றை உதிர்த்து விட்டு, ஆம். ஆம். பொன்னையா எமது வாழ்க்கையையே பறிகொடுத்துவிட்டுவிட்டோம். வேறு என்ன இருக்கு நாம் பறிகொடுக்க. இதனைக் கேட்ட பொன்னையாவின் உள்ளத்தில் சோகத்திரை படர்ந்தது. அதன் அறிகுறியாக அவன் முகம் வறண்டு கிடந்தது. என்ன செய்கிறது பெரியசாமி? நாம் அப்படிப் பிறந்துவிட்டோம்; மானிடராய் பிறப்பது அரிது என்று பெரியோர்கள் சொல்கிறார்கள். தற்போது மானிடராய் பிறப்பதைவிட மந்தைகளாகப் பிறப்பது மேல். அன்று பாரதத்தில் அடிமை முறையை ஒழிப்போம் என்று பாரதி கூறினன். அது வெறும் வாய்ப்பேச்சாக முடிந்துவிட்து என்று கவலையாக இருக்கிறது பெரியசாமி. இல்லை பொன்னையா, நாம்தான் அதை நடைமுறைப்படுத்தவில்லை. தெரிந்தும், தெரியாமல் நாம் அடிமை என்ற போர்வையில் புகுந்துகொண்டு வாழ்கின்றோம். இதனைக் கருவாவைத்து சில வசதிபடைத்த மனிதர்கள் தங்கள் இஷ்டப்படி எம்மை நடாத்துகின்றார்கள். நாம் உழைக்கிறோம். அதன் ஊதியத்தைக்கொண்டு வாழ்கின்றோம். நாம் ஏன் மற்றவர்களுக்குப் பயப்படவேண்டும்?


இப்படிப் பெரியசாமியின் ஆவேசக் கருத்துக்களும், தத்துவங்களும் வளர்ந்துகொண்டே சென்றது, அதேபோல் அவ்விடத்தில் பல ஜீவாத்மாக்களும் கூடிவிட்டன. ஆவேசக்கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு ஒவ்வொரு இதயங்களிலும் உணர்ச்சிகள் ஊர்ந்துகொண்டு சென்றன. பெரியசாமி இதற்கு ஒரு முடிவு எடுக்காமல் விட்டால் எமது சமுதாயம் இப்படியே கீழ்மையாகப் போய்க்கொண்டுதான் இருக்கும என்று எல்லோரும் ஒருமித்து ஆவே




MUSLIM MAJLIS





CHRISTIAN ASSOCIATION




SCHOOL BAND




Our Band Instructress
MRS. A. THEVASAGAYAM




BAND IN ACTION

## LITERARY ASSOCIATION




## LIBRARY COMMITTEE




(L - R) Mr S. Vykunthasamy, Mr. R. Rajamany *(Vice Principal)*
Mr. A. Sivaloganathan *( Principal )* Mr. K. Nadarajah *( Librarian )*
Mr. A. Arunakumar, Mr. L. B. Gnanapragasam
Mrs. M. Balasubramaniam, Master N. Ravindran




**DRAMATIC SOCIETY**

PRIZE DAY — 1979




A Scene from "OTHELLO"

PRIZE DAY — 1981




A Scene from "DEAR DEPART"

## PRIZE DAY — 1979




A Scene from Tamil Drama "MARKADDIL MAPPILLAI"


## PRIZE DAY — 1981



A Scene from Tamil Drama "KULAKKODDAN"



**ATHLETIC CAPTAINS - 1980**




**HOUSE MASTERS & CAPTAINS**

WITH BEST COMPLIMENTS

FROM

# YOGAM STORES

39, CENTRAL ROAD,

**TRINCOMALEE.**

Phone: 286

*BEST WISHES FROM:*

# KINGS HOTEL

*Main Street,*

*Trincomalee.*

BEST

COMPLIMENTS

FROM

# JEEVA BROTHERS

**SOAP MANUFACTORY**

**18, SAUNDERS PLACE,**

**COLOMBO - 12.**

THE BEST VALUE FOR MONEY
IN TRINCOMALEE.

*Visit us for Celebrations,*
*Conferences or Get-togethers*

Intimate Dining or Fun
A Refreshing Swim or a Shopping Spree
A Week-end Break or a Night on the Town
Do it all with us - with

SPIRIT
SPARKLE &
STYLE.

*Rainbow Beach Hotel,*
322, Dyke Street,
TRINCOMALEE.
Phone: 365

*Silver Stars,*
25/7, College Street,
TRINCOMALEE.
Phone: 348 / 482

BEACH HUTS
34, MURUGAPURI — UPPUVELI,
TRINCOMALEE.
Sri Lanka.

One Mile from Town
Half Mile from Station

Home Comforts
Modern Conveniences

SEA SUN & SAND

*Approved by:* THE CEYLON TOURIST BOARD

BEST & SINCERE WISHES

7 ISL

HOTEL

TELEPHONE: 373

TELEGRAMS: "ISLANDS"

SITHY VINAYAGAR
SADULAI WEST
CHUNNAKAM
LIBRARY

FROM

# MRS. S. L. ROMANOS
(DIRECTOR)

# AIN D S
## & PARK

Proprietors: **M/s. NELUMENT LTD.**

WITH BEST COMPLIMENTS FROM

*M. Ramanathapillai & Son*

**PAWN BROKERS**

654, EHAMBARAM ROAD,

**TRINCOMALEE.**

*With Best Compliments from*

# VARAPRAGASAMS

EHAMBARAM ROAD,

**TRINCOMALEE.**

*With Best Wishes*

*from*

*Dr. S. Sivanandan*

46, Main Street,

Trincomalee.

WITH BEST COMPLIMENTS FROM

# Veerabalan & Co.

MAIN STREET,

TRINCOMALEE.

*With best Wishes from:*

# MARKANDU BROS.

CENTRAL ROAD,

TRINCOMALEE.

சத்துடன் கூறினார்கள். பெரியசாமி அக் குழுவுக்குத் தலைமை தாங்கினான். அவர்கள் குழுவில் பலர் சேர்ந்தார்கள். நாட்களும் சென்றுகொண்டு இருந்தன.

பெரியசாமியின் புரட்சியைப்பற்றி பண்ணையார் தெரிந்துகொண்டும், பசுத் தோல் போர்த்த புலியாட்டம் அக்கிராமத் தில் பவனி வந்துகொண்டு இருந்தார். ஆனால், அவர் உள்ளத்தில் மலைபோல் திட் டம் உருவாகிவிட்டது. அறுவடைகாலமும் நெருங்கிவிட்டது. பெண்களும், ஆண்களும் தத்தம் வேலைகளுக்குச் சென்றுகொண்டு இருந்தனர். அந்நாட்களில் தான் வேலை யில்லாப் பிரச்சனை குறைவாக இருக்கும். பெரியசாமியின் மனைவி பிள்ளைகளும், மற்ற வர்களுடன் சேர்ந்து வேலைக்குப் போவார் கள்.

பெரியசாமியின் வயலிலும் அறுவடை செய்து சூடும் போட்டுவிட்டான். மூன்று ஏக்கர் வயல்தான். ஆனால், அக்கிராமத் திலே அவனுக்குப்போல் எவனுக்கும் நெல் விளையவில்லை. பெரிய சூடாக நான்கு சூடு போட்டு இருந்தான் பெரியசாமி. சூட்டுக் களத்தில் மணிமணிக் கதிர்களாக சூட்டுப் போர்த்து அழகிய கோபுரங்களாகக் காட்சி யளித்ததை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தான் பெரியசாமி. அவன் உள்ளத்தில் மனைவியும், பிள்ளைகளும் ஆனந்த மாக இனி வாழப்போகின்றார்கள் என்று காட்சியளித்துக்கொண்டிருந்தது. உவகை மேலீட்டால் கண்ணீர் சுரக்கும் அல்லவா? அப்படி பெரியசாமியின் கடைக்கண்களிலும் முத்து முத்தாகக் கண்ணீர் சுரந்துகொண் டிருந்தது.

என்ன பெரியசாமி? சூடு பெரிதாக இருக்கின்றது. நல்ல இலாபம்தான் உனக்கு என்று சொல்லிக்கொண்டே வந்தார் பண் ணையார். அவரைக் கண்டதும் அவன் உள் ளத்தின் உவகை எல்லாம் புயலில் அடிபட்ட துரும்பைப்போல் பறந்துவிட்டன. எனக்கு நீ இருபத்தைந்து மூடை நெல் இல்லை இரு பத்தைந்து நெல் மணிகூட இந்தச் சூட்டுக் களத்தில் இருந்து உன்னால் எடுக்கமுடியாது என்று ஒருமையில் பேசினான் பெரியசாமி. உன்ர பணத்துக்கு வட்டி வைத்துத் தந்து விட்டேன். இனி எங்களை நீ வெருட்ட முடி யாது என்று படபடத்தான் பெரியசாமி. எதிர்பார்த்தது தான் என்று பண்ணையார் அமைதியாக வெளியேறிவிட்டார்.

பூரண சந்திரன் வானில் பிரகாசித்த வண்ணம் இருந்தான். பெரியசாமியின் மன தில் அளவுகடந்த உற்சாகம். அன்று எல் லோரும் கூடி நிலா முற்றத்தில் கதைத்து விட்டுத் தூங்கச் சென்றான் பெரியசாமி. விடிய நான்கு மணிபோல் பொன்னையாவின் குரல்கேட்டு திடுக்கிட்டு எழுந்தான். என்ன பொன்னையா? ஆ—— இறைவா என்று சொல்லிக்கொண்டு வயலைநோக்கி ஓடினான் பெரியசாமி. அங்கே தீப்பிளம்புகளாக நெற் சூடு எரிந்துகொண்டு இருந்தது. அங்கே பண்ணையார் கோரச் சிரிப்புடன் அதை ரசித்துக்கொண்டு இருந்தார். என்ன பெரிய சாமி, என்னிடமா எதிர்த்துப் பேசினாய்? ஏய், அவனை அடித்து அந்தச் சூட்டுக்களத் துக்கு மேல் போடுங்கடா, இவன் இருந்தால் எமது கிராமம் உருப்படாது என்று பயங் கரமாகச் சிரித்தார்.

ஐந்து ஆறு பேருடன் சிறிதுநேரம் தமது வலுவுள்ளவரை போராடினான் பெரியசாமி. பின் எரிகின்ற நெருப்புக்கு விறகைப் போடுவதுபோல் சூட்டுக்களத்துக்கு மேல் அவனது உடல் தீச்சுவாலையில் எரிந்து கொண்டு இருந்தது. தற்போது அவ்விடத் தில் ஒரு ஜீவாத்மாக்களும் இல்லை. பொன் னையா மற்றவர்களுடன் வந்து பார்க்கும் போது, சாம்பல் குவியல்தான் அவ் விடத்தில் கிடந்தது. அவர்கள் அந்தச் சாம் பல் குவியலையே உற்றுநோக்கிக்கொண்டு இருந்தார்கள். ஆனாலும், எண்ண அலைகள் ஓய்வது இல்லை.

# English in our Schools

S. Ratnadeepan, 10 - A

Today the question that is on everybody's lips is: 'What is the place of English in our country?' English is, as we are all aware, an international language. Although English was imposed on us during the colonial rule, we willingly learn it now. Learning English is beneficial to us, Sri Lankans, in many ways.

In some countries English is taught as a second language whereas in certain other countries it is taught as a foreign language. The term 'second language' is used when English is the medium of instruction in schools or when it is used as a medium of communication between the various communities in a country, as in India. By 'English as a foreign language' some educationists mean teaching English as a school subject.

In Sri Lanka with the invasion of the British English was made the official language. So it became necessary to teach English as a second language then. As a result English occupied a prominent position and the national languages were pushed to the back ground.

Ever since Sri Lanka got her freedom from the British English has lost its prominence. Although English was taught as a second language for some time after independence, it is now taught as a foreign language. This has resulted in the deterioration of the standard of English.

It is essential that the national languages should be given the pride of place. Anyway, the fact remains that a developing country like ours cannot afford to ignore English which has already firmly rooted in our soil.

Unlike in our national languages a lot of books on science and technology have been written in English. Our students who aspire to do higher studies can have access to these books if they have a knowledge of English.

There is another advantage in our learning English. Now that there is several unemployment problem in our country young men and women go abroad in large numbers seeking employment. Even among the employed some have already left the island and some are on the verge of leaving in order to earn much more than what they earn here. There are yet others who are unable to migrate for their fluency in English leaves much to be desired.

No same man will be against our learning English if he considers these facts carefully. English must be given an important place in our curriculum. The assurances given by the president and the proposals in the white paper on education for improving the standard of English will, one hopes, be a reality in the years to come.

★

# An Evening by the Seaside

*R. Ramanan, - 10 B*

One evening some of my friends came to see me. I was very happy and I entertained them to tea. When we were having tea, one of my friends suggested that we should go to the beach. We all agreed with him and left for the beach as soon as we had our tea.

It was a lovely evening. The sea was calm and a gentle breese was blowing from the sea. We saw many people on the beach. Some were reading and some were discussing the coming elections. Some were relexing on the sand enjoying the cool breeze. Small children were busy building castles in the sand. A few fishing boats were moving about in the sea.

We sat down and had a chat for some time. The conversation soon ceased to interest me, so I began to walk up and down the beach. Some beautiful shells caught my attention; I picked them up and put them in a bag. I was so busy collecting them that I did not notice what was happening around me. Suddenly I heard my friends calling me. Their excited voices urged me to look at the horizon. I raised my head only to see the setting sun in all its splendour. A big red ball appeared to be singing into the sea. I stood entranced at the magnificient sight.

We spent some more time at the beach and returned home happily. It was indeed an unforgettable evening.

மன அடக்கத்தை அதிகமாக உடையவர்களும், வேலையில் முழுக் கவனஞ்செலுத்தி நிற்போரும் மிகக் குறைவாகவே பேசுவர். பேச்சுக் கூடினால், செயல் குன்றும்; செயல் கூடினால், பேச்சுக் குன்றும். இயற்கையைப் பாருங்கள், இடைவிடாது தொழிலாற்றிக்கொண்டும் என்றாவது ஓய்வெடுக்காமலும், என்றும் மௌனமாகவுமல்லவா அது இயங்குகிறது.

— மகாத்மா காந்தி

*சிறு கதை*

# விதியா? வினையா?

கே. ஸ்ரீதரன் - 11-ம் வகுப்பு

அந்த அழகான ஊர்தான் ''பொன்னி''. அந்தி சாயும் வேளை அந்த ஆற்றினிலே வாளைமீன்கள் ''தாயிலே பால் பருகும் கன்றினைப்போல்'' துள்ளி விளையாடும். இதனால் தெறிப்படையும் நீர்த்துளிகளிலே, ஆதவனின் பொற்கதிர்கள் பட்டு நீர்த்துளிகள் யாவும் தங்கம்போல், மாணிக்கம் போல், வைரம்போல், கோமேதகம்போல், தோற்றமளிக்கும். இவ்வாற்றினைக் கொண்ட இவ்வூருக்குப் ''பொன்னி'' என்ற பெயர் மிகவும் பொருத்தமானதே. இவ்வூரிலே தான் வட்டிக்கடை வைத்திலிங்கத்தாரின் பங்களாவும் இருந்தது. இதைச்சுற்றிப் பசுமை வாய்ந்த பச்சை நிறச் செடிகள் வளர்ந்திருந்தன. இதனால், இதைப் பச்சை மாளிகை என்றும் சிலர் அழைப்பர். வைத்திலிங்கத்தின் ஒரே மகள் ''வசந்தி'' செல்வச் செந்தளிப்பிலே வளர்ந்தாலும், நற்குணங்கள் யாவும் நிறைந்திருந்தன. வசந்தியின் ஒரே மாமன்தான் ''கனகர்''.

கனகரின் குடும்பம் வறுமையானது தான். கனகரின் ஒரே புதல்வன் ''ரவி''. செல்வச் செந்தளிப்பில் வளராவிடினும், முகத்தில் ஓர் தனிப் பொலிவு காணப்பட்டது. ரவி ஓர் பட்டதாரி ஆசிரியர். அவ்வூரில் உள்ள பாடசாலையிலேதான் கல்விப் போதனை செய்து வருகிறான். இளம் பிராயத்திலே ரவியும், வசந்தியும் ஒன்றாகப் படித்து வந்தார்கள். அவர்கள் அன்பிற்கு இணையே கிடையாது. வயது வந்ததும் வெட்கம் தலைகாட்டத் தொடங்கியது. இதனால், இவர்கள் அதிகம் பேசுவது கிடையாது. சின்ன வயதிலிருந்தே இவர்களின் நெருங்கிய அன்பு பிரியமுடியாத நிலையை ஏற்படுத்திவிட்டது.

ரவி பாடசாலையில் இருந்து வீடு நோக்கி நடந்து கொண்டிருக்கிறான். எதிரே தரகர் ''சிவசம்பு'' வருகிறார். அவரே பேச்சை ஆரம்பிக்கின்றார்.

''ஒண்டுமில்லைத்தம்பி. உன்ர மாமன் ஒருக்கா வரச்சொன்னவர். ஏதோ அலுவலாம்''.

ரவிக்கு ஓர் கணம் தலை சுற்றியது. காரணம் வைத்திலிங்கத்திற்கு ஒரே மகள் வசந்திதான். அவர் இல்லத்திற்குத் தரகர் போவதென்றால்... சமாளித்தவாறே,

''சரி. போட்டுவாங்கோ'' என்றவன், பதிலுக்குக் காத்திராது வீடுநோக்கி நடக்கிறான். அவனது இதயம் பழைய நிகழ்ச்சிகளை இரைமீட்டது.

வசந்தி இளம்பிராயத்தில் ஒருநாள் ரவியின் புத்தகங்களை அசுத்தப்படுத்திவிடுகிறாள். ஆத்திரம் அடைந்த அவன் வசந்தியைத் தள்ளிவிடுகின்றான். வசந்தி நிலத்தில் வீழ்ந்தாள். காலில் ஓர் கல்லுப்பட்டு இரத்தம் பெருக ஆரம்பித்தது. ரவியின் மனம் பயத்தால் படபடத்தது. மாமி வந்தால் உதைப்பாள் என்றுதான். நா தளதளக்க வசந்தியிடம் கேட்கிறான்;

''நான்தான் தள்ளிவிட்டனான் என்று தானே சொல்லுவாய்?''

''இல்லை'' என்பதுபோல் தலையை அசைத்தாள் வசந்தி. இதற்கிடையில் மாமி ரவியைத் திட்டியபடியே வந்துவிடுகிறாள்.

''ஆரடி உன்னை விழுத்தினது?'' விசம்கக்கியது. ஆனால், அவள், ''நான் தானம்மா தடக்கி விழுந்திட்டன்''. ரவிக்கு இப்போதுதான் உயிர் வந்தது. அவளையும் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள் மாமி. வசந்தியின் அன்பை உணர்ந்த அவன் இனிமேல் வசந்தி எந்தப்பிழை செய்தாலும் அடிப்பதில்லை என உறுதிகொண்டான்.

ஓர்நாள் எங்கும் குதூகலம். காரணம், கிராமத்துப் பெரிய புள்ளியான வைத்திலிங்கம் வீட்டுக் கருமம். அங்கே வசந்தி அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் இருக்கையில்

பதுமைபோல் அமர்ந்திருந்தாள். இருவர் பேசிக்கொண்டது ரவியின் காதில் வீழ்ந் தது:

''பாக்கியம் அவன் ரவிதான், பெட் டைக்கு சீதனம் கொடுக்கவேணும்''.

ஒருவருடன் மோதியவனாய்த் தன் நினை வுக்கு வருகிறான் ரவி. ''சொறி'' என்று கூறியவன் தொடர்ந்து வீடு நோக்கி நடக் கிறான்.

வைத்திலிங்கம் வீட்டிற்கு வந்த தர கரை வரவேற்கிறார். ''வாங்கோ சிவசம்பு''. இருக்கையில் அமர்ந்த தரகர், ''வரச் சொன்னியளாம் என்னத்துக்கு'' என் றார். ''ஒண்டுமில்லை, என்ர மகளின்ர விச யம்தான்'' என்றார் வைத்திலிங்கம். ''ஏன்? உவன் ரவி இருக்கிறான்தானே, அவனுக் கென்ன?'' தரகர். ''சீ... நான் ஆராவது இஞ்ஜினியர், டொக்டராய்ப் பார்க்கிறன் - வைத்திலிங்கம்.

தரகருக்கு உள்ளூர மனவாட்டம்தான். தொழிலை விட முடியுமா? அவர் வேண்டு கோளுக்கு இணங்கினார். தேனீர் பருகிவிட்டு வீடு நோக்கிச் சென்றார் தரகர். இதை அறிந்த வசந்தி அன்றுபூரா உணவு உண்ண வில்லை. தாய் எவ்வளவோ வற்புறுத்தினாள். ஆனால், வசந்தியுடன் எதிர்த்து வாதாட முடியாது அவளும், பின் அதைப்பற்றிப் பேச்சே எடுக்கவில்லை. இங்கே வசந்தியின் எண்ணங்கள் படபடத்தன. அங்கே ''ரவி'' பொன்னியூர் ஆற்றங்கரையிலே இருந்தவண்ணம் துள்ளி விளையாடும் மீன் களையும், ஏவிவிட்ட செம்மறியாடுகளின் சண்டையையும், மூங்கில்கள் உராசுவதால் உண்டாகும் தீப்பொறியையும் வெறித்துப் பார்க்கின்றான். துக்கம் மேலிட்டது. அழுது சுமையைக் குறைக்க முயன்றான். காரணம் வசந்திக்கு வரன் தேடியாகிவிட்டது. வெளி நாட்டிலே இஞ்ஜினியராம். பெயர் ''சங்கர்'' அங்கு வீசிய குளிர்த்தென்ற லிலே வந்த பாடலின் ஒலி அலைகள் காதிற்கு இனிமையளிக்கின்றது. ''நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா....'' தன்னை அறியாமலே தூங்கிவிட்டான்.

வைத்திலிங்கத்தாரின் வீடு அன்று அரச மாளிகைபோலாயிற்று. எங்கும் பணியாட் கள் பலவகை மின்குமிழ்கள் கண்சிமிட்டி வந்தவரை வரவேற்றது. காதல் இளவரசன் ரவி அருகில் இளவரசி வசந்தி அமர்ந்திருக் கிறாள். தேவர்கள் முதல் முனிவர்கள் வரை வாழ்த்துவதற்காக நிற்கின்றனர். கொட்டு மேளம் கொட்டியது. தவில் முழக்கம் சிறு வர் மனதில் இன்பமுழக்கமாகியது. கையிலே பொற்கொடியுடன் வசந்தியை நோக்கு கின்றான் ரவி. புன்னகை தோன்றித் தானாக மாறுகிறது. வசந்தியின் கழுத்திலே மஞ்சற் கயிறுஏறியது. வாணவெடிகள் வெடித்தன. திடுக்கிட்ட ரவி கண்ணைக் கசக்கியவண்ணம் எழுந்தான். ''சீ'' தூங்கியே விட்டேனா என்று எண்ணியவன் வீடு நோக்கி நடந் தான். எண்ணங்கள் எங்கோ நடந்து சென் றன.

அன்று வேதனையுடன் இருந்த வசந்தி யின் கழுத்தில் சங்கரால் மாலை போடப் பட்டது. சில வாரங்கள் கழிந்தன. வசந்தி வெளிநாட்டுக்குச் சங்கருடன் சென்றுவிடு கிறாள். அங்கே ஓரிரண்டு நாட்கள் இன்ப மாய்க் கழிந்தன. பின் கணவரின் வாய் காரசாரமாய்ப் பேசத் தொடங்கியது. வாழ்வு சீர்கெட்டது. சங்கர் தனது களவை வெளிப்படுத்திவிட்டான்.

வெளிநாடுசென்ற சங்கர் இதயராணி யாக ஒருத்தியை ஏற்றான். அதைத் தாய் தந் தைக்குக் கூறப் பயந்தான். இதன் விளைவு இன்று வசந்தியையும் கரம்பிடித்து நடுத் தெருவில் இறக்கிவிட வேண்டிய நிலை. சங் கருக்கு ஏற்கெனவே மூன்று பிள்ளைகள். மது போதை சங்கரை ஆட்டிப் படைத்தது. சினம்கொண்ட வசந்தி ஊர்திரும்ப முடி வெடுத்தாள்.

வைத்திலிங்கம் வீட்டில் கணவனும், மனைவியும் உல்லாசமாக எமது கவலை தீர்ந் தது என்று இருந்தனர். வைத்திலிங்கம் ''இப்ப என்ர மகள் மாப்பிள்ளையோட ஊரெல்லாம் பவனி வருவாள்.'' அதைத் தொடர்ந்து பலவகை நயங்களுடனும் பேசி மகிழ்ந்த அவர்கள் கவனத்தைத் திசை திருப் பியது ஓர் கார். கார் வாசலில் நின்றதும், அதிலிருந்து வசந்தி இறங்கினாள். மகளின்

வருகை பெற்றோர்க்குச் சந்தோஷமாக இருந்தாலும், மாப்பிள்ளையைக் காணுது கவலை அடைந்தனர். வந்த பிள்ளையை வரவேற்றனர். ''வா மோனை'', ''மாப் பிள்ளை எங்கை''

துக்கம் தொண்டையை அடைக்க ''அவர் என்னைக் கைவிட்டுட்டார். அங்கை மனைவி பிள்ளையோடை இருக்கிருர்.'' மிகுதி சொல்லாமல் குமுறி அழுகிருள். சிறிது சிறிதாக விசயத்தை அறிந்த பெற்றோர், இடி விழுந்தவர்கள் போலானுர்கள். அக்கணமே, வைத்திலிங்கத்தின் மனதில் ஓர் எண்ணம் உருவாயிற்று. எப்படியும் நடந்ததை மறந்து ரவியை மாப்பிள்ளையாக்குவம் என்று.

ரவியைச் சந்திக்க இருந்த வைத்திலிங்கம் வீட்டிற்கு ரவி வந்து கொண்டிருந்தான். முகம் மலர்ந்த வைத்திலிங்கம் என்றுமில்லாதவாறு வரவேற்றுர்.

''வா தம்பி'', அங்கு வந்த பார்வதி, ''வசந்தி எல்லோடா வந்திருக்கிருள்'' என்ருள். பார்க்க ஆசைப்படுவான் என நினைத்தனர். ஆனுல், ரவி சாதாரணமாகவே இருந்தான். கலியாணம் பற்றிப் பேசுவோமா என நினைத்த வைத்திலிங்கத்தை ஈர்ந்தது ரவியின் பேச்சு. ''அப்ப நான் போட்டு வாறன் மாமா'' ''ஓம் தம்பி'' என்ருர். ரவி போகும்போது மாமனின் கையில் ஓர் கடித உறையைக் கொடுத்து விட்டுச் சென்ருன்; ரவியைக் கண்ட மகிழ்ச்சியில் இதைப் பொருட்படுத்தாத வைத்திலிங்கம், ரவி சென்று மறையுமட்டும் அவனையே தெய்வத்தைப் பார்ப்பது போன்ற பிரமையுடன் பார்த்தார். அவன் மறைந்ததும், சுய நினைவுக்கு வந்தவராய், கையில் இருந்த கடித உறையைப் பிரித்தார். அதற்குள்ளே, ஓர் அழைப்பிதழ் இருந்தது; அதைப் பார்த்தார். அதிலே ஏழைப் பெண் ஒருத்தியின் பெயரும் அருகே, ரவியின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது; வைத்திலிங்கம் சிலையானுர்.

ரவியின் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. திருமண வேலைகள் உரிமையுடனும், அன்பு பண்புடனும் செய்து முடித்தாள் வசந்தி. அவளுக்கு அன்றுதான் வாழ்வில் ஓர் நிம்மதி. திருமணம் முடிந்து ஒரு வாரகாலமாக அங்கே தங்கியிருந்தாள் வசந்தி. அன்புடன் விடைபெற்று வசந்தி புதுப் பொலிவுடன் வீட்டிற்குச் சென்று விட்டாள். சென்று இரண்டாம் நாள் ரவியின் செவிக்குக் கிட்டியது ஓர் அறிவிப்பு; வசந்தியின் வீடு நோக்கி விரைந்தான்; அங்கே நச்சு மருந்து அருகிலே சிந்தியிருக்க இடையிலே கொடிபோல் துவண்டு கிடந்தாள் வசந்தி. ரவி அப்படியே சிலையானுன். இளம்பிராயத்தே ''அத்தான்'' என ஆசையுடன் அழைத்த அந்தப் பைங்கிளி, ரவியின் மனதில் துக்கம் நிரம்பிக் கண்ணீராக வழிந்தது. வசந்தியின் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது. வீடு திரும்பிய ரவியின் கையில் ஓர் கடிதம் கிடைத்தது. அதில் குறிப்பிட்டிருந்தவை,

''அன்புள்ள அத்தானுக்கு,

பலாத்காரமாக ஒருவருக்கு மனைவியானேன். அவரால் ஏமாற்றப்பட்டேன் ஆனுல், தங்களை நினைத்துத்தான் நான் இருந்தேன்; தங்களை அடைய நான் கொடுத்து வைக்கவில்லை. தாங்கள் நல்வாழ்வு வாழ்ந்தால் எனது ஆத்மா சாந்தி அடையும். தங்கள் திருமணத்தைக் கண்டு ரசித்த மன நிறைவோடு மரணத்தை அணைக்கின்றேன்.

இப்படிக்கு
தங்கள் இதயத்தை விட்டகன்ற
''வசந்தாதேவி''

ரவியின் கண்களில் இருந்து அவளுக்காக இரண்டு துளி நீர் மீண்டும் கசிந்தது. ரவியின் கண்ணில் மட்டுமல்ல, ரவியின் மனைவியின் கண்ணில் இருந்தும் சிந்தியது நீர்த் துளிகள்.

★
★★

# மலரட்டும் புதிய யுகம்

கவிதையாக்கம் :
**என். எம். நிஜாம்** *தரம்: 9*

வஞ்சகம் அகற்றியே வாழ்ந்திடுவாய் – பிறர்
வாழ்க்கையில் உதவிகள் செய்திடுவாய்
நெஞ்சத்தில் துணிவுடன் செயலாற்றுவாய் – உன்
நினைவிலே நல்லெண்ணம் வளர்த்திடுவாய்
பஞ்சம் உன் நாட்டினில் போக்கிடுவாய் – பல
தொழில் செய்து வளம் பெருக்கிடுவாய்
மண்டியிட்டழுவோர் மகிழ்ந்திடவே – இங்கு
மலரட்டும் உன்னால் புதிய யுகம்.

வறுமையை நாட்டினில் ஒழித்திடுவாய்
வருந்துவோர்க்கிரங்கியே மகிழ்ந்திடுவாய்
பொறுமையாய் வாழ நீ பழகிடுவாய் – தற்
பெருமையை வாழ்வினில் மறந்திடுவாய்
கொடுமைகள் செய்வோரை விரட்டிடுவாய் – பல
கோடி உயிர் வாழ்ந்திட உழைத்திடுவாய்
மகிழ்ந்திருப்பாய் காலமெலாம் சோதரா – உன்னால்
மலரட்டுமே ஓர் புதிய யுகம்.

சீரான நல்வாழ்வு வாழ்ந்திடுவாய் – என்றும்
நேரான பாதைதனில் சென்றிடுவாய்
சோர்வாக என்றும் நீ இருந்திடாமல்
சுறுசுறுப்புடனே செயலாற்றுவாய்
கார்முகில் போலுள்ளம் படைத்தவரை
கருணையுள்ளம் கொண்டு திருத்திடுவாய்
மானிடர் உன் வழியைப் பின்பற்றினால்
மலர்ந்திடும் உன்னாலே புதிய யுகம்.

# விலைவாசி நாளும் விஷம் போல ஏறும்

த. சச்சிதானந்தன்
(ஆசிரியர் - இந்துக்கல்லூரி)

விலைவாசி விண்முட்ட
உயர்ந்தின்று போனதனால்
பசிவாட்டும் நிலையினிலே
பார்முழுதும் எம் மக்கள் — நெஞ்சக்
கசிவேதும் இல்லாது
கடைவிரிப்போர் கூவிடுவர் — பஞ்சப்
பசிவாட்டி நாள்முழுதும்
ஏழைகளாய் மாறிடுவர்.

இல்லங்கள்தோறும் — இதன்
இரைச்சலைக் கேட்டிருப்பீர்
உள்ளங்கள் தோறும் — இதன்
ஊடுருவல் கண்டிருப்பீர் — கடைச்
செல்வர்கள் வாழ்வதற்கு
கைகொடுத்து உதவிவரும் — விலை
வெள்ளம்போல் பாய்ந்தெமது
வேதனையை கூட்டிவிடும்.

ஐந்து சதம் கொண்டு சென்றால்
அரிசியுடன் பருப்பு முதல்
அடுப்படிக்குத் தேவையான
அத்தனையும் வாங்கிய பின்
மிட்டாயும் மிகுதியுமாய்
மீண்டெழுகுவன் என்றுரைத்த
எம் தந்தை வாழ்க்கையெல்லாம் — இன்று
கற்பனையாய் விடுகதையாய்
காலத்தால் மறைந்ததிங்கே.

ஈரானும் ஈராக்கும்
போர்க்களத்தில் சந்தித்தால்
இலங்கையிலே பொருளுக்கு
இனியற்ற விலையேற்றம்
இடியமினோ வழியின்றி
நாட்டைவிட்டு ஓடிவிட்டால்

விடியுமுன்னர் நம் நாட்டில்
இரட்டிப்பு விலைமாற்றம்
கடிதான வாழ்க்கையிலே
காலம் தான் போகிறது — ஒரு
பிடிசோறு பெற்றிடவே
போராட்டம் நடக்கிறது.

உலகத்தின் மூலையிலே
ஓரசைவு கண்டாலும் நம்
ஈழத்தின் மூலையிலும்
அவ்வசைவு தெரிகிறது
ஞாலத்தில் வாழ்வதினி
நடைமுறைக்கு ஒவ்வாது — என்ற
சோகத்தின் கதைகளிங்கே
சுவரெல்லாம் தெரிகிறது.

நாளுக்கொரு விலை ஏறும் நிலையது
எம்மை வாட்டுதம்மா
வாழும் வழியினில் இல்லை என்றொரு
ஓலம் கேட்குதம்மா
பாலுக்கழும் குரல் பாதை முழுவதும்
பரிவாய் கேட்குதம்மா
நாளும் இந்நிலை நாளும் இந்நிலை
வளர்ந்தே போகுதம்மா.

ஏழைக் குழந்தையின் ஏழ்மை நிலையது
என்று மாறிடுமோ
வாலைக் குமரியின் வாழ்க்கைப் பாதையில்
வசந்தம் வீசிடுமோ
காலைக் கதிரவன் கதிரை வீசியே
இருளை விரட்டுதல் போல்
ஏழை மக்களின் ஏழ்மை வாழ்வுகள்
என்று மாறிடுமோ.

நாளை முழுக்க உடல் முறித்து
நாமெடுக்கும் வேதனமோ
வாழ்வதற்கு போதாது — எம்
வாழ்வில் இன்பம் சேராது
பால் கொடுத்து எமை வளர்த்த
பாசமிக்க தாயினுக்கு — நல்
வாழ்வளிக்க முடியாது
நாமிருக்கும் நிலையினிலே.

நாளை வரும் நாளை வரும்
நல்வாழ்வு தானே வரும்
வேளை வரும் போதினிலே
வேதனைகள் தான் மறையும் — என
காலைவரும் நாளிதலோ
கட்டியங்கள் கூறிவரும்
வேளைவரும் என்றிருந்தோம்
வேதனையை வென்றிருந்தோம்
காலமதன் பாதையிலே
கவலையின்றி கழிந்ததம்மா.

ஏழைகளே மேலும் ஏழைகளாய் மாற
ஏமாற்றுப் பேர்வழிகள் மேலும் பொருள் சேர்க்க
வாழ்வினிலே கற்பனைகள் கோடுகளைக் கீற
நாம் நினைத்த வாழ்க்கை முறை மனதுக்குள் வாழ
மானிடமே இப்படியே நாள் முழுதும் சாக
மானிடமே இப்படியே நாள் முழுதும் சாக.

# நெஞ்சு பொறுக்குதில்லையே

**மா. பிரபாகரன்**
*11 – வர்த்தகம்*

''நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்''

பாரதியின் பாட்டு இது பைந்தமிழர்க் கெழுச்சி தந்த
சாரதியின் பாட்டு இது சமர்க்கவிதை பாடும் சண்ட
மாருதியின் பாட்டு இது மறத்தமிழில் கவிதை தன்னை
தேன் அருவி போன்று தெவிட்டாமல் நமக்கு ஈந்த
வல்ல புலவன் வாய்திறந்து பாடியது தொல்லுலகில்
எல்லோரும் அல்லல்பட்டவதியுற
நெஞ்சு பொறுக்காமல் நீண்ட கவிபாடுகிறேன்
அஞ்சாமல் பாடுவதற்கு அன்னை முனைப்பால் அருளும்
மனிதம் புனிதம் என்றும் மானுடந்தான் தலையத்நின்றும்
கணிதம் எழுதிவைத்த கற்றவர்கள் முன்னிலையில்
சின்னக்குருவியொன்று சீறிச் சினந்ததினல்
கன்னல் தமிழினில் கனல்கக்கப் பாடுகிறது
தமிழர் சமுதாயம் தரம் கெட்டுப் போகிறது
அமிழ்தான சமுதாயம் அடிபட்டு மாய்கிறது
திமிர்பிடித்த தீயவரால் தீந்து கருகுகிறது.
அமிர்தயோகம் தன்னை அண்ணார்ந்து பார்க்கிறது
சாதி வெறியென்ற சகுனி வியாதி வந்து
ஆதிக்குடியைப் பாதி பிரிக்கையிலே
நீதியா வெல்லும்? நிச்சயமாய் சொல்லுகிறேன்
சாதி ஒழிந்தால் சாம்ராஜ்யமே பிறக்குமன்றே
மனிதப்பிறவி ஒரு புனிதப் பிறவியென்றல்
மனிதனைத் தாழ்த்திடுதல் மனிதர்களின் மாமறையோ?
தத்துவத்தில் இல்லாத தவருன கொள்கைகளை
கத்துவதால் என்ன பயன்? காசினியில்
நன்றய் இணைந்து நல்ல ஒரு கொள்கையினை
ஒன்றக ஏற்று ஒரு கொடிக்கீழ் வழிநடந்து

நெஞ்சு பொறுக்காத நீசமெல்லாம் வீசிவிட்டு
அஞ்சாமல் நாங்கள் அவனியிலே வாழ்வதெப்போ
சாதிவெறி நெருக்கி சந்ததியை ஊக்குவிக்கும்
நீ சமுதாய நேர்மையினை காண்பதெப்போ
உழைக்கும் வறியவர்கள் உலகினிலே தலை நிமிர்ந்து
தழைக்கும் நிகழ்ச்சியினைத் தவறாமல் காண்பதெப்போ
ஆண்டான் அடிமையென்னும் வேண்டாவெறுப்புக்களை
தோண்டிப் புதைத்து தூயவற்றை காண்பதெப்போ
எளியாரை வலியவர்கள் ஏறி மிதிக்காத
கனிவான வாழ்க்கை காண்பதெப்போ, காண்பதெப்போ
நெஞ்சு பொறுக்காமல் அஞ்சாமல் எழுதுகிறேன்
அஞ்சி அஞ்சி வாடும் ஆன்மாவுக் கெழுதுகிறேன்
கஞ்சி பருகிக் காலமெல்லாம் பாடுபட்டு
அஞ்சி நடுங்கும் ஆன்மாக்காய் எழுதுகிறேன்
நெஞ்சு பொறுக்குதில்லை நீண்ட பெருமூச்சதனால்
நெஞ்சு பொறுக்குதில்லையே நெஞ்சு பொறுக்குதில்லையே.

பிரம்ம முகூர்த்தம்: அதிகாலை 4 மணி தொடக்கம் காலை 6 மணி வரையும் பிரம்ம முகூர்த்தம். காலையின் 4 மணிக்குத் துயிலெழுக. உங்கள் காலைக் கடனை விரைவில் முடிக்குக. 10 நிமிஷத்திற்குச் சில பிரார்த்தனைகள் செய்து, உங்கள் படிப்புக்கு அமர்க. மனம் புனிதமாக இருப்பதால் இதுவே படிப்புக்குச் சிறந்த நேரம்.

— சுவாமி சிவானந்தர்

# இலங்கையின் ஜனநாயகம்

— க. ஜெயக்குமார், *10 - A* —

பல்வேறு ஆட்சிமுறை காணப்படும் இவ்வுலகில் பல நாடுகளால் பின்பற்றப்படுகின்ற ஆட்சிமுறையாக ஜனநாயக ஆட்சிமுறை விளங்குகிறது. ஏதென்ஸ் நகரத்திலே பிறந்த இவ்வாட்சியானது இங்கிலாந்து நாட்டிலே பல நூற்றுண்டுகளாக வளர்க்கப்பட்டு, இன்று பல நாடுகளிலே நடைபயின்று வரும் ஒரு ஆட்சியாக இருக்கிறது. இவ்வாட்சி முறைபற்றி அமெரிக்காவின் புகழ் பெற்ற ஜனதிபதியாக விளங்கிய ஆபிரகாம் லிங்கன் என்பார் ''மக்களால் மக்களுக்காக அமைத்த மக்களின் ஆட்சியே ஜனநாயகம்'' என்று சுருக்கமாகச் சொல்லி விளக்கிவைத்தார். ஜனநாயகத்தை ஒரு ஆட்சிமுறை என்று பல அறிஞர் கூறியபோதும், இன்னும் சில அறிஞர் ஒருபடி மேலே சென்று ஜனநாயகத்தை ஒரு வாழ்க்கைத் தத்துவம் என்று கூறியிருக்கின்றனர்.

வரலாற்றுக் காலம் முதல் ஐரோப்பியர் வருகைக் காலம் வரை மன்னர் ஆட்சியும், ஐரோப்பியர் ஆட்சியில் தேசாதிகார ஆட்சியும் நிலவிய எமது நாடான இலங்கையில் *1948*ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்பே ஜனநாயக ஆட்சிமுறை மலர்ச்சியடைந்தது எனக்கூறலாம். ஜனநாயக ஆட்சி முறையை வளர்ச்சியடையச் செய்த ஆங்கிலேயரே எமக்கும் சுதந்திரம் தந்தபோது, தமது நாட்டில் நிலவும் ஆட்சிமுறையை எமது நாட்டிலிட்டுச் சென்றனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே ஜனநாயகம்பற்றிய பயிற்சியைப் பெற்றிருந்த எமது மக்களும், அரசியல்வாதிகளும் ஜனநாயக மரபில் எமது நாட்டை இட்டுச் செல்வதில் இன்று வெற்றி கண்டுள்ளனர் எனலாம்.

ஆசியாவில் ஜப்பானை அடுத்து, கல்வி அறிவில் அதிக முன்னேற்றம் கண்டுள்ள எமது நாட்டு மக்கள் ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதிலும் முன்மாதிரியாக இருக்கிறார்கள். இரண்டாம் உலகயுத்தத்தை அடுத்து, இன்றுவரையுள்ள காலப்பகுதியில் பெரும்பாலான ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இராணுவப் புரட்சிமூலம் ஆட்சிகள் மாற்றி அமைக்கப்பட்டு வருவதை அடிக்கடி கேள்விப்பட்டு வருகின்ற வேளையில் எமது நாட்டில் ஜனநாயக பாரம்பரியங்களுக்கு ஏற்ப பொதுத்தேர்தல் மூலமே ஆட்சியாளர்கள் மாற்றியமைக்கப்பட்டு வந்துள்ளனர். இது ஜனநாயக ஆட்சிமுறையில் நாம் பெற்றுள்ள நம்பிக்கையையும், பயிற்சியையும் எடுத்துக் காட்டுகிறது. ஜனநாயக நாடு என்றவகையில் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஒரு சிறப்பான இடம் வழங்கப்பட்டு வருவதற்கு இங்கு ஜனநாயக ஆட்சிமுறை கையாளப்படும் முறையே காரணமாகும்.

ஜனநாயக ஆட்சிமுறையானது இன்று பாராளுமன்ற ஜனநாயகம் எனக் கூறப்படுகிறது. மக்கள் தமது சார்பில் பிரதிநிதிகளைத் தெரிந்து எடுத்து, பாராளுமன்றம் என்னும் ஆட்சிப்பீடத்திற்கு அனுப்புகின்றார்கள். இவர்கள் தம்மைத் தெரிவு செய்த மக்களுக்கும் தாம் அங்கம்வகிக்கும் அரசியற்கட்சிக்கும் பொறுப்பாக இருந்து தமது ஆட்சி அலுவல்களைக் கவனிப்பார்கள். அமைச்சர் சபை, பிரதம மந்திரி, ஜனதிபதி, எதிர்க்கட்சி, அரசாங்கக் கட்சி போன்ற கூட்டு அமைப்புக்களைக் கொண்ட பாராளுமன்ற ஜனநாயகமானது இங்கிலாந்து நாட்டைப் போன்று இலங்கையிலும் சிறப்பாக நடந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அரசியல் யாப்புமூலம், அரசியல் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆட்சி அலுவல்கள் நெறிப்படுத்தப்படுகின்றன. அரசாங்கமோ, தனிப்பட்டவர்களோ இவ்வரசியல் அமைப்புக்கு மாறாக நடக்கும்போது நீதிமன்றத்தில் அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. நீதிமன்றங்கள் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நிலைநிறுத்துகின்றன. ஜனநாயக ஆட்சியில் எல்லாரும் நாட்டின் மதிப்

புமிக்க பிரசை என்று கணிக்கப்படுகின்றுர் கள். இத்தகைய நிலை இலங்கையில் இருப் பதால்தான் சர்வதேச அரங்கில் இலங்கை நல்ல செல்வாக்கைப் பெற்றுள்ளது. ஜன நாயக ஆட்சியின் சிறப்பம்சங்களில் ஒன்ருன எதிர்க்கட்சியும் நல்ல முறையில் இயங்கு கின்றது. இன்றைய எதிர்க்கட்சி நாளைய ஆளுங்கட்சி என்பதை மனதிற்கொண்டு, ஆளுங்கட்சி எதிர்க்கட்சிக்கு மதிப்பு அளிப் பதுடன், தனது செயல்களிலும் கவனமாக இருக்கின்றது. இலங்கையின் வரலாற்றில் முதல்முதல் சிறுபான்மை இனத்தலைவர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதி லிருந்து இலங்கையின் ஜனநாயக ஆட்சி முறையின் சிறப்பை மதிப்பிடலாம்.

ஜனநாயகத்தில் மக்களின் அடிப்படை உரிமைகள் முக்கியமானவை. சட்டத்தின் முன் ஒவ்வொருவரும் சமமாகக் கணிக்கப் பட்டு சுதந்திரமாக வாழ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. தான் விரும்பியதை எழுத வும், சங்கங்களை நிறுவவும், தான் விரும்பிய இடத்தில் வாழவும், கல்வி கற்கவும் உரிமை உள்ளது. இவ்வுரிமைகள் யாவும் இலங்கை யில் பேணப்படுகின்றன. தான் விரும்பிய ஒருவரைப் பிரிதிநிதியாகத் தெரிவுசெய்ய வும், தான் விரும்பிய ஓர் அரசியல் கட்சியை ஆதரிக்கவும், விரும்பினுல் தானே ஒரு பிரதி நிதியாக வரப் போட்டியிடவும் தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு. இதேபோல தான் விரும்பிய தொழிலில் ஈடுபடவும், ஒருவனுக்கு உரிமை உண்டு. குடிமகனுக்குத் தொழில்வாய்ப்பை அளிப் பதும், அரசாங்கத்தின் கடமையாகும். இத் தகைய ஜனநாயக உரிமைகளை மக்களுக்கு அளித்திருப்பதன் மூலம் இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயகம் சிறப்புப்பெற்று விளங்குகிறது.

இலங்கையில் ஜனநாயகமானது சிறப்புப் பெற்று விளங்குகின்றது என ஒரு சாரார் கூறியபோதும், அதை மறுத்து உரைப்போரும் உளர். இலங்கையில் வாழும் சிறுபான்மையரின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ள விதம் சிந்திக்கவேண் டிய நிலையில் இருக்கிறது. 1956-ல் தனிச் சிங்களச் சட்டம் இலங்கையில் நிறைவேற் றப்பட்டமை ஜனநாயகத்தில் சிறுபான்மை யோரை நம்பிக்கை இழக்கச்செய்தது. இதன் மூலம் தமிழ் மொழியும், தமிழ் இனமும் இரண்டாம்பட்சமானதொன்ருக்கப்பட்டது ஜனநாயகம் சிறப்பாகப் பின்பற்றப்படும் நாடு எனக் கூறப்படும் சுவிற்சலாந்தில் அங் குள்ள நான்கு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இங்கு சிங்களம் மட் டும் அரசகரும மொழியாக இருப்பது இந் நாட்டின் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதுபோல் இருக்கிறது. பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்கப் பட்டதனுல் ஏனைய மதத்தினரும் ஜனநாய கப் பண்புக்கேற்பச் சமனுக நோக்கப்பட வில்லை என்பது தெளிவு. இலங்கையில் எல்லா இனத்தவர்களிடத்தே தோன்றும் சாதிவேற்றுமைகளும், செல்வர், வறியவர் என்ற வேறுபாடுகளும் ஜனநாயக கோட்பாடுகளைக் கொள்கையிற் செயற்படுத் தத் தடையாக உள்ளன. சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்கும் பண்பு ஜனநாயகத் தின் முக்கிய அம்சமாகும். பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க எல்லாப் பத் திரிகைகளும் சுதந்திரமாக இயங்க வேண்டி யது அவசியம். அரசாங்கத்திற்கெதிராக இயங்குகின்றது என்று காரணங்காட்டி ஏரிக் கரைப் பத்திரிகைகளை அரசாங்கம் சுவீகரித் தமை இலங்கையின் ஜனநாயகத்துக்குப் பேரிடியாக அமைந்தது. இதனுல் ஏனைய பத்திரிகைத் தாபனங்களும் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடப் பயப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும், இலங்கையின் சிறுபான்மையினர் தாம் விரும்பிய பகுதி களில் போதிய பாதுகாப்புடன் வாழ முடி யாமல் இருப்பதும் ஜனநாயத்திற்கு ஒரு சோதனையாக அமைகிறது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடான எமது இலங்கையில் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகம் இருப்பதே மேற் கூறிய ஜனநாயக விரோத சக்திகள் இடம் பெறக் காரணமாகின்றன. எமது நாடு அபிவிருத்தி அடைந்து மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும்போது ஜனநாயக விரோதச் சக்திகள் மறைந்து சிறப்பான ஜனநாயகப் பாரம்பரியங்கள் வளர்ச்சி அடையும் என உறுதியாக எதிர்பார்க்கலாம். ★

# இ. கி. ச. இந்து மத்திய மகா வித்தியாலய

## சைவமன்ற ஐந்தாண்டறிக்கை

திருக்கோணமலைப் பெருங்குடி மக்களால் ஸ்தாபிக்கப்பட்டது இந்துக்கல்லூரி. இராமகிருஷ்ண சங்கம் இக்கல்லூரியினைப் பொறுப்பேற்று ஐம்பத்தொரு ஆண்டுகளாகி விட்டன.

அறிவுத்துறையில், உடல்நலற்றுறையில் மாணவருக்குப் பயிற்சியளிக்கும் இக்கல்லூரி ஆன்மீகத்துறையில் போதனையும் சாதனையுமளிக்கத் தவறியதேயில்லை.

கோணேஸ்வரத்தை நோக்கிக்கொண்டு ஆலடி விநாயகர் ஆலயம், பத்திரகாளி அம்பாள் ஆலயம் என்பவற்றின் அருகாமையில் அமைந்திருக்கும் நமது வித்தியாலயம் சமயப் பண்புகளையும் சமய அனுட்டானங்களையும் கடைப்பிடிக்க முன்நிற்பது விந்தையல்லவே.

சிவராத்திரி தினம் கோணேஸ்வரத்தின் ஆன்மீக எழுச்சி தினம் எனலாம். அத்தினத்தில் கோணேசர் ஆலயத்தில் நடைபெறும் நான்கு ஜாம அபிடேகப் பூசையில் நமது கல்லூரி இரண்டாவது ஜாம அபிடேகத்தைச் செய்து, கூட்டுப்பிரார்த்தனையிலும் பங்குபற்றி உய்வது ஆனந்தமே!

ஆலடி விநாயகர் ஆலயத் திருவிழாவில் ஆண்டுதோறும் எட்டாவது திருவிழாவினைச் சிறப்புற நடாத்தி விநாயகர் அடிதொழும் அன்புக்காட்சி அருமையானதாகும்.

திருக்கோணமலைச் சைவ அடியார்களால் இருபத்தொரு வருடங்களாகத் திருக்கேதீச்சர முதலாந் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றது. அப்பணியில் நமது கல்லூரியும் இயன்றவரை உடல், பொருளுதவி புரிந்தும் இடைக்கிடை யாத்திரையில் கலந்துகொண்டும் பெருமை அடைகின்றது.

சமயகுரவர் குருபூசைத் தினங்களை நினைவுகூர்ந்து சமய வாழ்வின் பெருமையினை உணர்ந்து மாணவர்களும் திருமுறைப் பயன்களை அனுபவிக்க வழிகோலிவிடுகின்றோம்.

உயர்திரு. க. சிவபாலன் அவர்கள் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டதும் சமயத்துறையில் ஒரு புதுத்திருப்பம் ஏற்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் காலை ஒரு பாடநேரம் ஆலயவழிபாட்டுக்கும் கூட்டுப்பிரார்த்தனைக்குமாய் ஒதுக்கப்பட்டது. அம்பாள் ஆலய வழிபாடும் கூட்டுப்பிரார்த்தனையும் வெள்ளிக்கிழமைகளில் இவ்வித்தியாலய மாணவர்கள் அப்பாள் ஆலயத்தில் நடத்துவது பக்திப் பரவசத்திற்குரியது.

இராமக்கிருஷ்ண பரமஹம்ஸ தேவர், அன்னை சாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய மூன்று ஞானிகள் தினத்தையும் மிகக் கோலாகலமாகக் கொண்டாடுவதுண்டு. கட்டுரை, பேச்சுப் போட்டிகளால் மாணவர் தம் வாழ்வினை இஞ்ஞானிகளின் வாழ்வைத்துணைக்கொண்டு வாழ வழிவகுப்பதாகும்.

திருக்கோணமலையில் ஒரு முதலாந்தரக் கல்லூரியாக நமது வித்தியாலயத்தை உருவாக்கிய உத்தமத்துறவி சுவாமி விபுலானந்த அடிகள் தினத்தை அனைவரும் நினைவுகூர்ந்து அவர் பணிக்கு நாம் ஆளாகவேண்டுமெனப் பிரார்த்திப்பதில் தவறியதேயில்லை.

அடிகளாரின் சீடரும் இ. கி. சங்கத் துறவியுமான சுவாமி நடராஜனந்தஜி அவர்களை தினமும் நினைவுகூறுகின்றோம்.

பரீட்சைக்காகப் பாடநேரசூசியில் சைவ சமயம் படிப்பது தான் மாத்திரமல்ல, சனி ஞாயிறு தினங்களிலும் சமயபாடப் போதனைகள் பெறுகின்றனர்.

கடந்த இருபத்தைந்தாண்டுகளுக்கு மேல் நமது வித்தியாலய மாணவர்கள்

விவேகானந்த சபை சமயப் பாட்டு பரீட்சைக்குத் தோற்றி மிகத் திறமையான சித்திகளெய்திப் பரிசுகளும் பெற்றுள்ளனர். 1977–ம் ஆண்டில் செல்வன் ந. கேசவன் அகில இலங்கைப் பரிசும் 1978—ம் ஆண்டில் செல்வன் க. இரமணிதரன் தங்கப் பதக்கமும் பெற்றமையை பெருமதிப்புடன் அறியத் தருகிறோம்.

முன்னாள் இந்துக்கல்லூரி ஆசிரியரும் இப்பொழுது சைவசமய பாட ஆலோசனைக் குழு இணைப்புச் செயலாளருமாகிய திரு. பெ. கணநாதபிள்ளை அவர்களின் தலைமையில் சுவாமி சச்சிதானந்தயோகி ராஜ் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட யோகாசனப் பயிற்சியில் நமது வித்தியாலய மாணவர்கள் பெரும் பயன்பெற்றனர். தவிர்க்கமுடியாத காரணத்தினால் யோகாசன வகுப்பு நடைபெறுதிருப்பினும் அதனைப் புதுப்பிக்கஒழுங்கு செய்கிறோம்.

நவராத்திரி விழா நமது வித்தியாலய கலைஞான விழாவாக அமைவதுகண்டு ஆனந்திக்காதவர் யாருமில்லை. அறிவு ஆற்றல், ஞானம் என்பனவற்றை அம்பாளிடம் அன்புடன் வேண்டிநிற்கும் நமது வித்தியாலய மாணவர்களின் பக்திநிலை பத்தாம் நாள் விஜயதசமி வெற்றி விழாவுடன் முடிவடையும்.

The edifice of truth can be built only by the bricks of non-violence. The philosophy of non-violence contends that the means we use must be as pure as the ends we seek.


— Dr. Martin Luther King

My goal is friendship with the whole world, and I can combine the greatest love with the greatest opposition to do wrong.


— Mahathma Gandhi

படிப்பறை: இயலுமாயின் உங்கள் பிரார்த்தனை அறையும் படிப்பறையும் வேறாய் இருக்க வேண்டும். அன்றேல், ஓர் அறையில் ஒரு மூலையை இக் கருமத்துக்கு ஒதுக்குக. இதனால் உங்கள் மனக் குவிவாற்றல் அதிகரிக்கும்.

— சுவாமி சிவானந்தர்





COLOURSMEN





COLLEGE ATHLETIC TEAM

# COLOURSMEN — 1979



K. Balakumar



T. Sivanandarajah


R. Kokulakumar



J. Thulasitharan


S; Jeevaprakash


R. Sathiyamoorthy



M. Sulaiman Thajeer



S. Thiyagarajah


S. Nimalan



J. T. Francis


K. Thillainathan



P. B. Kamaleshwaran




INDOOR GAMES TEAMS




COLLEGE CRICKET — XI.




UNDER 13 SOCCER TEAM




UNDER 15 SOCCER TEAM




UNDER 19 SOCCER TEAM

## NEW GENEARL SCIENCE LABORATORY OPENING CEREMONY




The C. E. O. Science, Mr. R. M. J. Thangarajah declares open the General Science Laboratory.

## INDOOR GAMES OPENING CEREMONY




Bank of Ceylon Regional Manager, Mr. Sri Renganathan declares open the Indoor Games Hall.

## OPENING CEREMONY - VIPULANANDA BLOCK



Head Prefect Master S. Mohanathas declares open the Vipulananda Block.

## INTER SCHOOLS MUSICAL TALENT CONTEST 1979



Master Thevaraj Thevasagayam Receives the first Prize.

# கிறீஸ்தவ மாணவர் மன்றம்,
# இந்துக் கல்லூரி.

எமது கல்லூரியில் கல்வி பயிலும் கிறீஸ்தவ மாணவர்களின் நலன்கருதி ஆரம்பிக்கப்பட்டதுதான் கிறீஸ்தவ மாணவர் மன்றமாகும். இது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை ஒற்றுமையாகக் கிறீஸ்தவ மாணவர்களின் சமய கலாச்சார வளர்ச்சிக்குப் பல அரிய சேவைகளை ஆற்றி வந்துள்ளது.

இக்கல்லூரி பெரும்பான்மையாக இந்து மாணவர்களைக் கொண்டிருந்தபோதிலும், சிறியதொகையினரான கிறீஸ்தவ மாணவர்களின் உரிமைகள் அனைத்தையும் வழங்கி, எங்கள் சமய கலாச்சார வளர்ச்சிக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் பார்த்துக் கொள்வதில் கல்லூரி நிர்வாகம் முழுக்கவனமும் எடுத்து வந்துள்ளது.

எமது மன்றம் வருடாவருடம் வருட இறுதியில் ஒளிவிழா நிகழ்ச்சியைச் சிறப்பாக நடாத்தி வந்துள்ளது. இவ்விழாவிற்கு ஏனைய சமய மாணவர்களும் எங்களோடு சேர்ந்து ஒத்துழைப்பது எமக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது.

பாடசாலை நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாமல் பாடசாலைக்குப் புறம்பாகவும், நிகழும் சமய கலாச்சார நிகழ்ச்சிகளிலும் சிரமதான நிகழ்ச்சிகளிலும் மரணச் சடங்குகளிலும் பங்குபற்றியதுடன், எமது உதவிகளையும் வழங்கியுள்ளது.

1981-ம் வருடம் கிறீஸ்தவ மாணவர் மன்றம் சிறப்பாக நிகழ்வதற்குக் காரணமாக உள்ள நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் எமக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிவரும் எங்கள் அதிபர் திரு. ஏ. சிவலோகநாதன் அவர்களுக்கும் எமது சங்கப், பொறுப்பாசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும், கல்லூரி மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, மென்மேலும் எமது மன்றம் வளர்ச்சியடைந்து ஒளி வீசுவதற்குத் தொடர்ந்தும் உதவுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

## 1981 நிர்வாகசபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| காப்பாளர்: | திரு. | ஏ. சிவலோகநாதன் |
| பொறுப்பாசிரியர்கள்: | ,, | ஏ. எஸ். கிருபைராஜா, திரு. ஜீ. எப். லூயிஸ் |
| தலைவர்: | செல்வன் | ரி. ஜெபராஜா |
| செயலாளர்: | ,, | ஏ. ஆர். சி. இம்மானுவல் |
| பொருளாளர்: | ,, | யோண்சன் |

# தி/இ. கி. மி. இந்துக் கல்லூரி
# இஸ்லாமிய மஜ்லிஸ்

போஷகர்: திரு. அ. சிவலோகநாதன் (அதிபர்)
காப்பாளர்கள்: ஜனுப். எம். ஆர். எம். மரைக்கார் (ஆசிரியர்)
,, ரி. எம். யூசுப் ஜான் (ஆசிரியர்)
,, எம். எல். கமால்தீன் (ஆசிரியர்)
தலைவர்: செல்வன் பி. எம். மஜீர்
செயலாளர்: ,, எம். ஐ. பாயீஸ்
உப தலைவர்: ,, என். ஜே. கான்

**பேரன்புடையீர்!**

அஸ்ஸலாமு அலைக்கும்

''அன்பின் நிகரின்மையும் அருளின் அளவின்மையும் தனதாகக்கொண்ட இறைவா உன் நாமம் எங்கள் ஆரம்பம் ஆகும்''

திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக்கல்லூரியின் முஸ்லிம் மஜ்லிஸ் தனது கடந்தகால அறிக்கையை உங்கள் கரங்களில் ஆவலுடன்கூடிய அன்புத்தழுவலைப் பெற்றுக் கொண்டிருக்கும் மலர் வெளியீட்டில் சமர்ப்பிப்பதன்மூலம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேம்.

இந்துக்கல்லூரியிலே கல்விபயிலும் சகல மாணவர்களும் பாரபட்சமின்றி உரிமைகளை அடைந்திருப்பதையும், அடைந்துவருவதையும் நாம் எவ்விதத்திலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எனினும் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு வகையான கலாச்சாரப் பண்பாடுகள் இருக்கவே செய்கின்றன, என்பதை மறுக்காமல் இஸ்லாமிய சகோதரர்கள் சில விஷேட உரிமைகளைப் பெறவும், சமய, சமூக, கலாச்சார பண்பாடு விடயங்களில் அவர்கள் ஊக்கத்துடன் பங்குபெறவும் வேண்டுமென்ற பரந்த நோக்கை அத்திவாரமாகக்கொண்டு பாடசாலையின் மிக ஆரம்பகாலத்தில் உருவான ''முஸ்லிம் மஜ்லிஸ்'' ஏனைய மதங்களைச் சார்ந்த சகோதரர்கள் மத்தியில் சகோதரத்துவம், சமாதானம், நல்லெண்ணம் ஆகிய நன்நோக்குகள் நிலைபெற்று வாழ்வதற்குத் தன்னாலான முழுமுயற்சியுடனும், இயங்கி வந்துள்ளதென்பதைக் கடந்தகால ஆண்டறிக்கையினூடாக அறியக்கூடியதாய் இருக்கின்றது. இதை ஆரம்பிக்க ஒத்துழைப்பு நல்கிய யாவரும் என்றும் நினைவுகூரப்படத் தக்கவர்களாவர்.

எமது மஜ்லிஸ் அங்கத்தவர்கள் மஸ்ஜித் நிகழ்ச்சிகளில் அதிக சிரத்தையுடன் ஈடுபடுவதும், மத அனுஷ்டானங்களிலும், இஸ்லாமிய கலாச்சார நடைமுறைகளிலும் மிகவும் பேணுதலுடையவர்களாகக் காணப்படுவதும் எமது சகோதரர்களின் மதப்பற்றை எடுத்தியம்புகிறது. மேலும், எமது மஜ்லிஸ் முன்னேற்றத்திற்காகப் பல பெரியார்கள் பாடுபடுவதையும் மறக்கமுடியாது. எமது இன்றைய மஜ்லிஸ் வெறும் சம்பிரதாயத்திற்காக சமயாசார நிகழ்ச்சிகளை மட்டும் நடத்துவதில் காலத்தைக் கழிக்காமல் ஏனையோருக்கும் பயனை விளைவிக்கக் கூடிய ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. அத்துடன் கடந்தகாலத்தை நோக்கும்போது இம் மஜ்லிஸில் அங்கம் வகித்த மாணவர்கள் பலர் ஏராளமான பரிசில்களைப் பெற்றுள்ளார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடனும், மன நிறைவுடனும் கூறிக்கொள்கிறேன்.

மேலும், மஜ்லிஸ் சுட்டிக்காட்டிய எமது தேவைகள் பலவற்றை உடனடியாக எமது அதிபர்கள் நிறைவேற்றித் தந்துள்ளார்கள் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களின் சேவையை என்றுமே நாம் மறக்கமாட்டோம். அத்தோடு மஜ்லிஸ் நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாளும் நடாத்துவதற்கு ஒரு மண்டபத்தை எமக்குத் தந்து உதவியுள்ளார்கள். எமது வேண்டுகோளின்பேரில் மாணவர் தலைவர்களாக, செல்வன் அபுபைதா, செல்வன் சிராஜ், செல்வன் றிஸ்வி ஆகிய மூவரையும் நியமித்துள்ளார்கள். வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ தொழுகையில் பங்குபற்றுவதற்காக இரண்டுமணி நேரத்தை ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

வேண்டுவன வேண்டும்போது எமது அதிபரும், போஷகருமான திரு. அ. சிவலோகநாதன் அவர்கள் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்ததோடு மட்டுமின்றி, ஊக்கமும், ஆக்கமும் அளித்து எமக்கு உதவிகள் பல புரிந்ததற்காக மஜ்லிஸின் சார்பில் எமது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மஜ்லிஸின் நற்சேவைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து எமக்கு உறுதுணையாக இருந்து அல்லும் பகலும் எமக்காக உழைத்த எமது முன்னாள் காப்பாளர்கள்: ஜனாப். எம். எச். மொஹமட், ஜனாப். ஜபார் மௌலவி, ஜனாப். ஜி. எச். எம். ஜப்பார், ஜனாப். எம். தீன், ஜனாப். எம். ஜுனுப், ஜனாப். ரி. எம். பாறூக் ஜான், ஜனாப். எம். அன்வர் தீன் மௌலவி, ஜனாப். சி. டபிள்யு. எஸ். அஹமட் மௌலவி, ஜனாப். எம். காசீம், ஜனாப். எம். இஸ்யாஸ் அவர்களுக்கும், அத்தோடு மஜ்லிஸின் நற்சேவைகளுக்கு ஆக்கமளித்து எமக்கு உறுதுணையாக இருந்து அல்லும் பகலும் எமக்காக உழைக்கும் எமது ஆசிரியர்கள் ஜனாப். எம். ஆர். மரைக்கார், ஜனாப். எம். எல். கமால்தீன், ஜனாப். ரி. எம். யூசுப்ஜான் ஆகியோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

என்றோ ஒருநாள் இக்கல்லூரியை விட்டுப்பிரிந்து செல்லும் நாம் எமது நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்து எமது சமூகத்திற்கும் வருங்கால சந்ததிக்கும் எமது கல்லூரிக்கும், எமது நாட்டிற்கும், இனங்களின் ஒற்றுமைக்கும் என்றென்றும் அருள் மழை பொழியவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும் ஆகிய இவைகள் ஏன் உலகிலிருக்கின்றன? கடவுள் இருக்கிறார்; ஆனால் அவர் காணப்படுகிறாரில்லை. நீதியும் நீதி கொடுப்பவரும் அவரே. ஆகையால், மனிதன் செயல்களைப் பொறுத்தே மதிக்கப்படுகிறான். நற்செயல்களால் உயர்ச்சியும், துர்ச்செயல்களால் வீழ்ச்சியும் அடைகிறான்.

— மகாத்மா காந்தி

# இந்துக்கல்லூரி உள்ளக விளையாட்டுக்கழகம்

எமது கல்லூரியின் உள்ளக விளையாட்டுக் கழகம் 1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 20-ம் திகதி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. ஸ்ரீ ரங்கநாதன் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பெற்றது. எமது கழகப் போட்டிகளுக்குப் பாவிப்பதற்காக காளியப்பு மண்டபத்தை பாடசாலை நிர்வாகம் ஒதுக்கியுள்ளது.

கழகம் மாணவர்களினது விளையாட்டுத் திறமையினையும், ஆர்வத்தையும் வளர்ப்பதையும் பிரதான நோக்காகக்கொண்டு இயங்கிவருகிறது. இக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட முதல் பல போட்டிகளை மாணவர்களுக்கிடையே நடாத்தி அவர்களுக்குப் பரிசுகளை வழங்கி ஊக்குவித்துள்ளது.

இக்கழகத்தின் தலைவராக திரு. குணரத்தினம் ஆசிரியர் அவர்களும், செயலாளராக திரு. சு. ஸீ. கிருபராஜ் அவர்களும், அங்கத்தவர்களாக திரு. யூசுப் யான், திரு. உ. மனோகரன், திரு. மரிக்கார், திரு. ஈஸ்வரதாஸ் இயங்கி வருகிறார்கள்.

அதிபர் அவர்களின் ஆலோசனையின் கீழ் எமது கழகம் சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

எமது கழகம் கடந்த வருடம் 1980ல் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் 21 மாணவர்கள் பங்குபற்றினர். மேசைப்பந்தாட்ட ஒற்றையர் ஆட்டத்தில் சிறந்த வீரர்களாக செல்வன் சிதம்பரநாதனும், செல்வன் வசந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேசைப் பந்தாட்ட இரட்டையர் ஆட்டத்தில் செல்வன் வசந்தன், செல்வன் கனக. தெய்வேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

எமது கழகம் கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட போட்டிகள் மாத்திரமன்றி, வெளியிலும் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்கேற்று மாணவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்துள்ளது. திருமலை விமானப்படை விளையாட்டுக் கழகம் நடாத்திய மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியிலும், திருமலை மேசைப் பந்தாட்டக் கழகம் நடாத்திய சுற்றுப் போட்டியிலும் எமது பாடசாலையின் சார்பில் எமது கழகம் பங்குபற்றி எமது திறமையை வெளிக்காட்டியது.

எதிர்வரும் காலங்களிலும் மாணவர்களின் திறமையை வளர்ப்பதிலும் கழகம் பல வேறுபட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

# சிவானந்த இல்லம்

## 1980 - 1981

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திரு. அ. அருணகுமார் |
| ஏனைய ஆசிரியர்கள்: | ,, கே. நல்லநாதன் |
| | ,, த. சச்சிதானந்தன் |
| | செல்வி கு. சதாசிவம் |
| இல்லத் தலைவர்: | செல்வன் கே. யோகரெட்ணம் |
| விளையாட்டுத்துறைத் தலைவர்: | செல்வன் ரி. சபேசன் |

கல்லூரிக்குள் இடம்பெற்ற சகல விளையாட்டுப் போட்டிகளிலும், ஏனைய பேச்சு, கட்டுரை, நாடகப் போட்டிகளிலும் எமது இல்ல மாணவர்கள் பங்கேற்று தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். கல்வியில் மாத்திரமன்றி ஏனைய துறைகளிலும் எமது இல்ல மாணவர்கள் முதன்மைபெறவேண்டும் என்ற நோக்கில் இல்லத் தலைவர்களும், இல்ல ஆசிரியர்களும் எடுத்துக்கொண்ட ஊக்கத்தை இங்கு ஈண்டு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இல்ல விளையாட்டுப் போட்டியைப் பொறுத்தமட்டில் எமது மாணவர்கள் தீரமுடன் விளையாடிப் பல வெற்றியை ஈட்டித் தந்துள்ளார்கள். சிரேஷ்ட பிரிவில் சிறந்த மைதான நிகழ்ச்சிப் பெறுபேற்றுக்கான சுற்று வெற்றிக் கிண்ணம் செல்வன் என். சுதர்சன் என்பவருக்கு முப்பாய்ச்சல் நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்டது. அநேக தரம் இம்மாணவன் 17 வயது பிரிவில் வீரமுதல்வனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு எமது இல்லத்துக்குப் பெருமை தேடித் தந்தார்.

இவ்வாண்டு இடம்பெற்ற இல்லங்கட்கு இடையில் நடைபெற்ற போட்டியிலும் இரண்டாம் இடத்தை எமது இல்லம் பெற்றுக்கொண்டது. ஒரு சில புள்ளி வித்தியாசத்திலேயே எமக்கு இரண்டாம் இடம் கிடைத்தது. இல்லையேல் முதலாமிடம் பெற்றிருப்போம். அடுத்த ஆண்டுகளில் நாம் முதலாம் இடத்தைப் பெறுவோம் என்பதற்கு கட்டியம் கூறுமாப்போல் இது அமைந்துள்ளது.

அஞ்சல் ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டெறிதல், ஈட்டி எறிதல் போன்ற பல நிகழ்ச்சிகளிலும் எம்மாணவர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு திறமையை நிருபித்தனர்.

இக்கல்லூரியில் கல்வி பயிலும்போதும் சிவானந்த இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களாயிருந்த அ. அருணகுமார், த. சச்சிதானந்தன் ஆகியோர் தற்போது இவ் இல்ல ஆசிரியர்களாக அமைந்து இருக்கின்றனர். திறமை எண்ணங்களுடன் இல்லத்தின் வெற்றிக்கு இவர்களும், ஏனைய ஆசிரியர்களும், மாணவத் தலைவர்களும், மாணவர்களும் உழைத்து வருவது சிறப்புக்குரியனவாகும்.

நன்றி

# இராமகிருஷ்ண இல்லம்

## 1980 - 1981

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திரு. ந. சிவகடாட்சம் |
| ஏனைய ஆசிரியர்கள்: | ,, ஏ. எஸ். கிருபைராசா |
| | ,, எஸ். சிறிஸ்கந்தராசா |
| | திருமதி எஸ். அருணகிரிராசா |
| | ,, ஐ. புஸ்பநாதன் |
| இல்லத் தலைவர்: | செல்வன் ஈ. ரி. தேவசகாயம் |
| விளையாட்டுத்துறைத் தலைவர்: | செல்வன் ஜே. எம். றிஸ்வி |

இல்ல ரீதியாக நடாத்தப்படும் மாணவர்களின் உள, உடல் ஆற்றல்களை வெளிக் கொணரும் இயல், இசை, நாடக, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் எமது மாணவர்கள் தங்கள் பங்களிப்பால் எமது இல்லத்துக்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார்கள். இவர்களை இனம்கண்டு அரங்கேற்றும் பணியில் எமது ஆசிரியர்களின் பணி போற்றற்குரியது.

இல்ல விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்தமட்டில் இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை முதலாம் இடத்தைப் பெற்று சுவாமி நடராஜா நந்தா வெற்றிக் கேடயத்தை தனதாக்கியுள்ளது. மற்றும், அஞ்சலோட்ட சுற்றுக்கிண்ணம், 15ம் வயது, 17ம் வயது 19ம் வயது பிரிவுகளில் அதிக புள்ளிகளைப் பெற்றமைக்காக வெற்றிக் கேடயங்களையும் 13 வயதுக்குக் கீழ்ப்பட்டோரின் முதன்மை வீரராக செல்வன் ஜி. ஞானேந்திரனும், 19 வயதுக்கு உட்பட்டோரில் முதன்மை வீரராகவும், சிறந்த சுவட்டு நிகழ்ச்சி பெறு பேற்றுக்கான சுற்று வெற்றிக் கேடயத்தையும் செல்வன் ஜே. எம். றிஸ்வியும் பெற்றார். எமது இல்லத்தை முதன்மை ஸ்தானத்துக்குக் கொணர்ந்த எம் மாணவ மணிகள் பாராட்டுக் குரியவர்கள்.

எமது இல்ல மாணவர்கள் பலர் வட்டார விளையாட்டுப் போட்டிகளிலும் சரி, அகில இலங்கைப் போட்டிகளிலும் சரி திறமையாக முன்னின்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

இனிமேல் வரும் காலங்களிலும் எமது இல்ல மாணவர்கள் இல்ல வெற்றிக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் தங்கள் பங்களிப்பைக் கடந்த காலங்களை விட ஊக்கமாகச் செயல்பட திடசங்கல்பம் எடுக்கின்றார்கள்.

நன்றி.

# விவேகானந்தா இல்லம்
## 1981-ம் ஆண்டிற்கான அறிக்கை

| | |
|---|---|
| இல்லப் பொறுப்பாசிரியர்: | ஜனப். எம். எல். கமால்தீன் |
| ஏனைய இல்ல ஆசிரியர்கள்: | ஜனப். ரி. எம். யூசுப் ஜான் |
| | திரு. வி. மதிபாலசிங்கம் |
| | திருமதி எம். பாலசுப்ரமணியம் |
| | ,, ஆர். கந்தையா |
| இல்லத் தலைவர்: | செல்வன் ஆர். ரமேஷ் |
| விளையாட்டுத்துறைத் தலைவர்: | ,, ரி. ஸ்ரீராகுலன் |

எமது கல்லூரியானது மாணவர்களுக் கிடையே வயதுவாரியாக வருடாந்தம் நடாத்தப்பெறும் கலை, கலாசார, மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் விவேகானந்தா இல்லத்தைச் சார்ந்த மாணவர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றித் தத்தமது தனித் திறமைகளைக் காலாகாலம் வெளிக்கொணர்வதன் மூலம் சாதனைகளைப் புரிந்து வந்துள்ளனர்.

கடந்தவாண்டு நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றதன்மூலம் முதலாமிடத்தைப் பெற்று சுவாமி நடராஜநந்தா சுற்று வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்ட எமது இல்லம், துரதிர்ஷ்டவசமாக இவ்வாண்டு மூன்றாமிடத்தைப் பெற்றாலும்கூட, மொத்தமாக 1051/2 புள்ளிகளைப் பெற்றதானது, உண்மையில் பாராட்டப்பட வேண்டியதொன்றேயாகும்.

இல்ல அலங்காரப் போட்டியில் எமது இல்லம் இவ்வருடம் முதலாம் ஸ்தானத்தைத் தட்டிக்கொண்டது. இல்லத்தின் முகப்பை வடிவமைத்துக்கொடுத்த ஆசிரியர் குழுவினரின் எண்ணப்பாங்கிற்கேற்ப, மாணுக்கரும் கடுமையாக உழைத்ததன் மூலம், நடுவர்களும், பார்வையாளர்களும் மெச்சத்தக்க வகையில் எமது இல்லத்தின் அலங்காரமானது அமைந்திருந்தது.

வயதுவாரியாக அதிக புள்ளிகளைப் பெற்ற இல்லங்களின் வரிசையில் எமது இல்லமானது, ஒரு பிரிவிலேனும் இறுதி இடத்திற்குத் தள்ளப்படாதது குறிப்பிடத் தக்கதாகும். அதற்காக உழைத்த விளையாட்டு வீரர்களின் திறமையும் போற்றத் தக்கதாகும். 13 வயதிற்குட்பட்டோர் பிரிவில் மூன்றாமிடத்தையும், 15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் இரண்டாமிடத்தையும், 17 வயதிற்குட்பட்டோர், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் இரண்டாமிடத்தையும் எமது இல்லம் சுவீகரித்துக் கொண்டது.

அஞ்சலோட்டத்திற்கான சுற்று கிண்ணத்தை ஆக இரண்டு புள்ளிகளே வித்தியாசத்தால் எமது இல்லம் பெறத்தவறினாலும்கூட, மொத்தம் 40 புள்ளிகளை உடைமையாக்கி, முதலாமிடத்தைச் சுவீகரித்த இராமகிருஷ்ண இல்லத்தினரின் சவாலை ஏற்று ஒவ்வொரு போட்டியிலும் எமது இல்ல வீரர்கள் சளைக்காமலும், களைக்காமலும் துணிவுடன் ஈடுகொடுத்துப் போட்டியிட்டமையினுல் பார்வையாளர்களிடமிருந்தும், கிடைக்கப்பெற்ற பலத்த கரகோஷத்தையும், கை தட்டல்களையும், மெச்சுதலையும் ஈண்டு கட்டாயம் குறிப்பிடேயாதல் வேண்டும்.

வயதுவாரியான வீர முதல்வர்களின் தெரிவைப் பொறுத்தவரையில், 15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் 13 புள்ளிகளை

மொத்தமாகப் பெற்றதன்மூலம் வெள்ளிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்ட செல்வன் ஜி. முருகையா, தட்டெறிதல் நிகழ்ச்சியில் புதிய சாதனை (66·3'' தூரம்) யொன்றினை நிலைநாட்டியதன் மூலம் அப்பிரிவில் சிறந்த மைதான நிகழ்ச்சிப் பெறுபேற்றுக்கான சுற்று வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டார்.

உதைப்பந்தாட்டத்தைப் பொறுத்த வரையில்: 15 வயதிற்கு மேற்பட்டோருக்காக நடாத்தப்பெற்ற போட்டியில் எமது இல்ல அணியைச் சேர்ந்த விளையாட்டு விரர்கள் இறுதிப் போட்டியில் பலரும் பாராட்டத்தக்க வகையில் சாதுர்யமாகவும், விவேகமாகவும் ஆடியபோதிலும், வெகு அருமையாகக் கிடைத்த ஓரிரு சந்தர்ப்பங்களையும் நன்முறையில் பிரயோகிக்கத் தவறியவையால் துரதிஷ்டவசமாக இரண்டாமிடத்திற்குத் தள்ளப்பட்டனர்.

உள்ளக விளையாட்டுக்களில் குறிப்பாக மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் எமது இல்ல வீரர்கள் போட்டியிட்டுத் தத்தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். குறிப்பாக செல்வன் ஜி. முருகையா பாராட்டப்படத்தக்கவராவர். இவர் மேற்குறிப்பிட்ட இரு விளையாட்டுக்களிலும் 15 வயதிற்குட்பட்டோருக்கான இரட்டையர் ஆட்டத்தில் நன்கு சோபித்து, தானொரு ''சிறந்தசகா'' என்பதை நிரூபித்தார். பூப்பந்தாட்டத்தில் முதலாமிடமும், மேசைப்பந்தாட்டத்தில் இரண்டாமிடமும் இவர் பங்குபற்றிய சோடிக்குக் கிடைக்கப்பெற்றது.

மற்றும் இல்லரீதியிலும், கல்லூரிகளுக்கிடையிலான மட்டத்திலும் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, சங்கீதப் போட்டி ஆகியவற்றிலும் எமது இல்ல மாணுக்கர் தத்தமது பங்களிப்புக்களை நன்முறையில் நல்கி, அவர்களது தனியாள் திறமைகளைப் பகிரங்கப்படுத்தும் நல்வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர். இத்தகைய போட்டிகளில் அவர்கள் பங்கேற்றதன்மூலம் தமது ''இலைமறை காய்'' போலும் தனித்துவமிக்க திறமைகளைக் ''குன்றின் மேலிட்ட தீபம்'' போன்று பிரகாசிக்கச் செய்துள்ளனர்.

அத்தோடு கல்லூரி வாத்தியக்கோஷ்டி, சாரணர் இயக்கம், 'கடெற்' பயிற்சி, துணிவினைச் சங்கம், இலக்கிய மன்றம், இந்து மாணவர் சங்கம், கிறீஸ்தவ மாணவர் சங்கம், முஸ்லிம் மஜ்லிஸ் ஆகியவற்றில் அங்கத்துவம் வகிக்கும் எமது இல்ல மாணவர்களனைவரும் அவ்வவற்றின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு சிரத்தையுடன் உழைத்துவருகின்றனர் என்பதையும் இங்கு நிச்சயமாகக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

எத்தகைய சிரமதான இயக்கமாயினும், அவற்றில் பங்குகொள்வதில் எமது இல்ல மாணவர்கள் என்றும் பின்நிற்பதில்லை. பின்நின்றதுமில்லை. குறிப்பாக இவ்வருட மத்தியில் புனித கோணேஸ்வரர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ''சுற்றுடல் சுத்திகரிப்புப் பணி''யில் எமது இல்ல மாணவர்களும் மும்முரமாகப் பங்குகொண்டு உழைத்து பொதுமக்களின் ஏகோபித்த பாராட்டையும், மதிப்பையும், கல்லூரியின் அதற்கான சான்றிதழையும் பெற்றுள்ளனர்.

1960-ல் முறையே விளையாட்டுத் துறையிலும், கல்வித் துறையிலும் சாதனைகளை நிலைநாட்டிய இவ்வில்லத்தைச் சேர்ந்த இரு பழைய மாணவர்களை நாம் இவ்வாண்டில் எமது ஆசிரியர் குழாத்தின் புதிய அங்கத்தவர்களாகப் பெற்றுள்ளமையும் உண்மையிலேயே எமக்குப் பெருமையளிப்பதாகும். அவர்களுள் ஒருவரான திரு. எஸ். ஈஸ்வரதாசன் அவர்கள் எமது கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகப் பணிபுரிகின்ருர். மற்றையவரான ஜனப். ரி. எம். யூசுப் ஜான் அவர்கள் பட்டதாரி உதவி ஆசிரியராகக் கடமையாற்றுகின்ருர். இவர்களின் வருகையால் எமது இல்ல மாணவர்கள் மேலும் சிறப்பான முறையில் வடிவமைக்கப்படுவர் எனவும் நாம் எதிர்பார்க்கின்றேம்.

வருங்காலங்களிலும்கூட எமது இல்லத்தைச் சார்ந்த சகல மாணவர்களும் எவ்வாறு சுவாமி விவேகானந்தா இந்து மதத்தின் தனிப்பெருமையையும், கீர்த்தியையும் உலகமெலாம் பரவ சிரமப்பட்டு வழிவகுத்தாரோ, அதேபோன்று இந்துக்கல்லூரியின்

சகல துறைகளிலுமான தனித்துவமிக்க புகழினைத் தரணியெங்கும் பரப்பும் பணியில் ஒருங்கிணைந்து. கடமை - கண்ணியம்-கட்டுப் பாடுமிக்க இந்நாட்டின் நற்பிரசைகளாகத் தம் உடல் - பொருள் - ஆவியையும் தியாகம் செய்யத் திடசங்கற்பம் பூண்டுழைப்பர் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை எமக்கு என்றென்றைக்குமுண்டு.

இறுதியாக எமது இல்லத்தை முன்னேற்றப் பாதையில் வழி நடாத்திச் செல்லுவதற்குப் பெரிதும் உறுதுணையாக விளங்கும் அதிபர், ஆசிரியர், மாணாக்கர், மற்றும் நலம்விரும்பிகள் ஆகியோர் அனைவருக்கும் இதயம் விழுமிய பலகோடி நன்றிகளைக் காணிக்கையாக்கி இவ்வறிக்கையையும் முற்றுவிக்கின்றேன்.

A good book is the precious life - blood of a master - spirit, embalmed and treasured up on purpose to a life beyond life.

— Milton

God is not a cosmic bell-boy for whom we can press a button to get things.

— Harry Emerson Fosdick

சரியான முயற்சியென்று எதைக் கூறலாம்? சரியான முயற்சியால் கருதியது பெரும்பாலுங் கைகூடுகிறது. கருதிய பயன் பெறுவதால் சரியென்ற தீர்ப்பும் உண்டாகிறது. ஆனால், அனுபவத்தில் எப்பொழுதும் இவ்வாறு அமைவதில்லை. சரியான முயற்சி எதுவாயின், இலட்சியத்தை அடைவதற்கான வழிவகைகளில் ஆழமான அறிவுடன் முயற்சிக்கும் முயற்சியே. எதிரிடையான பயனையே பெறுவதாயிருந்தாலும், வழிவகைகளும் மாறாதனவாயும், முயற்சியும் குன்றாது நிகழ்வதாயுமிருக்கவேண்டும்.

— மகாத்மா காந்தி

# விபுலானந்த இல்லம்

## 1980 - 1981

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திரு. எல். பி. ஞானப்பிரகாசம் |
| ஏனைய ஆசிரியர்கள்: | ,, சு. செல்வரத்தினம் |
| | ,, எஸ். குணரட்ணம் |
| | திருமதி என். திருநாவுக்கரசு |
| | திரு. கே. நடராஜா (நூலகர்) |
| இல்லத் தலைவர்: | செல்வன் இ. கீர்த்திசிங்கம் |
| விளையாட்டுத்துறைத் தலைவர்: | ,, ரி. ஞானசம்பந்தன் |

எமது இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாக் களுக்காக நடாத்தப்படும் அறிவுத்திறன் போட்டிகளில் பெரும்பான்மையான முதலாவது ஸ்தானங்களைப் பெற்று வருபவர்களென்பது எமது கழகத்தின் ஒரு சிறப்பம்சமாகும். அது மட்டுமன்றி, 1979ம் ஆண்டு விளையாட்டுத்துறையில் நான்காம் இடத்தைப் பெற்று இருந்த இல்லம் 1980ம் ஆண்டு மூன்றும் இடத்தையும், 1981ம் ஆண்டு இரண்டாம் இடத்தை யும் பெற்று வந்ததிலிருந்து விளையாட்டுத்துறையிலும் முன்னேறி வருகிறதென்பது கண்கூடு.

1981ம் ஆண்டு கனிஷ்ட பிரிவில் சுவட்டு நிகழ்ச்சியில் சிறந்த பெறுபேற்றுக்கான சுற்று வெற்றிக் கிண்ணத்தை எமது இல்லத்திற்கு ஈட்டித்தந்த செல்வன் பி. சுரேஸ் 75 மீற் றர் ஓட்டத்திற்கான போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றது மட்டுமன்றி, 11 செக்கனில் ஓடி முடித்து ஒரு புதிய சாதனையையும் ஏற்படுத்தினர்.

1981ம் ஆண்டில் அதுமட்டுமன்றி 19 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையே யான குண்டெறிதல் போட்டியில் எமது இல்லத்தைச் சேர்ந்த போட்டியாளர்களான ரி. ஞானசம்பந்தன், ஏ. சவுந்தரராஜன், ஆர். கீர்த்திசிங்கம் ஆகியோரே முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்று மூன்று பரிசில்களையும் தட்டிக்கொண்டதும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

இவையெல்லாவற்றையும்விட அணிநடையில் எமது இல்லமே கடந்த இருவருடங் களாக முதலாமிடத்தைப் பெற்றுவந்தது மட்டுமன்றி, பிரதம விருந்தினரையும் பார்வை யாளர்களையும் கவர்ந்த நிகழ்ச்சியாகவும் அமைந்து எமது கல்லூரியின் அணிநடைக் குழுவிற்கு பெருமை தேடித்தந்த நிகழ்ச்சியாகவும் அமைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

குழு நிகழ்ச்சியான கயிறு இழுத்தல் போட்டியிற்கூட எமது இல்லமே 1981ம் ஆண் டில் முதலிடம் பெற்றது.

திறமையும், உற்சாகமும், வலிமையும் உடைய எமது இல்லத்தின் மாணவர்கள் இல்லத்தில் மிகப் பற்றுக்கொண்டவர்களாகவும், தோல்விகளைக்கூட வெற்றியின் படிக்கற் களாக நினைப்பவர்களாகவும் காணப்படுவதால் எமது இல்லம் மேலும் மேலும் பல வெற்றி களை எதிர்காலத்தில் பெற்றுக்கொண்டேயிருக்கும் என்பது யாவருமறிந்ததே.

நன்றி.

# Report of the School Band

The arts of students usually reflect their school. This is especially true of the R. K. M. Hindu College Band. The beat of the drums, the clash of the cymbals and the symphony of its soul stirring music have gone a long way in adding colour to our already famed Alma Master.

The College Band was born in the latter part of 1978 with 20 enthusiastic boys under the guidance of Arthur Samson. While 'Baby Band' was yet tender Mr. Gunawardene and Mr. Gunasekara both of the Sri Lanka Navy took charge and helped it to grow. Mrs. A. Thevasagayam came to us at a time when the others were not available; she continues to be the guiding star of our destiny.

The music of our school band is a blend of three influences - English, Tamil, Sinhalese and Hindustani. The rapidity with which our players pick up the pieces is indeed astounding. We have thus been able to beat up the music and beat down the earlier bands of the town to second and third places.

**We Thank You**

**The Member of Parliament,** for the nourishing food you gave the Baby Band and the way you care for the 'toddler' now.

**Mr. Samson, Mr. Gunawardene and Mr. Gunasekera** for nursing the Band in its infancy.

**Mr. Marrikar, Mr. Manoharan and Mr. Sriskandarajah,** for your encouragement and driving force.

**Master Risvi Mohamed** for your excellent leadership which is second to none in Screndib.

**Mr. Thevasagayam** (our loving mother and sister), your calm and quiet manner has made our school band sky rocket in this beautiful town of ours.

**Instruments Ready:**

**Band - One - Two**

**Burr Rum: Bu - rr Rum:**

79 Maiden. Performance - Prize Day Celebrations

12-03-79 Talent Contest by Rotary Club (Second place)

80 School Inter-house Sports Meet.

80 District Sports Meet.

80 Talent Contest by Rotary Club (First place)

26-02-81 At the request of the Government Agent;

At Prima Jetty

To entertain the Japanese youth (Goodwill cruise - NIPPON MARU)

08-03-81 To receive the Prime Minister R. Premadasa
At the ceremonial opening of the model village, Vipulananda Gramam.

81 To receive the Hon. Minister Mr. S. Thondaman
At the opening of 'Laksala'.

06-08-81 To honour and entertain the Admiral of the Indian Navy at the Naval Base.

19-09-81 Talent contest by Rotary Club (First Place)

30-09-81 A treat - Excursion to Sigiriya and Dambulla to celebrate our victory at the talent contest.

BANG BANG BANG BANG
BANG BANG BANG

note:

*Our Band Boys:*

Dheenathayalan Gunaratnam
Devaraj Thevasagayam
Jebaraj Thevasagayam
Potkaran Gunaratnam
Geetharanan Gunaratnam
Prithiviraj Thisainayagam

won the 1st and 2nd places in Accordian, Melodica, Flute, Speech and Singing at the talent contest.

*Hip Hip Hurrah.*

# TUTORIAL STAFF as on 1st March, 1982.

1. Mr. A. Sivaloganathan — B. Sc., Dip. - in - Ed. Teacher Counseller's Certificate in Education - Principal
2. ,, R. Rajamany — B. Sc., Grade II, Special Post - Deputy Principal
3. ,, S. Vykundasamy — Grade IV Principal; Tamil Trained First Class
4. ,, S. Gunaratnam — B. Sc. (Hons.) Dip - in - Ed. Grade I Special Post
5. ,, L. Thiruchelvam — Science Trained Grade II Special Post
6. Miss G. Sathasivam — B. Sc. Dip. in Education
7. Mr. K. Nallanathan — B. Sc. (Cey.)
8. ,, N. Sivakadadcham — B. Sc. (Cey.)
9. ,, T. M. Yoosuf Jan — B. A. (Cey.), Dip. in Education (Cey.)
10. ,, L. B. Gnanapragasam — B. Sc. (Hons.), P. F. T. Cey.
11. ,, V. Rasiah — B. Ed. (Hons.), (Cey.)
12. Mrs. M. Balasubramaniam — B. A. (Cey.)
13. ,, I. Pushpanathan — B. Sc. (Hons.) Cey.
14. Mr. T. Sachchithanandarajah — B. A. (Cey.)
15. ,, A. Arunakumar — B. A. (Cey.)
16. ,, W. Jayaseelan — B. Sc. (Hons.) Cey.
17. ,, S. Thandayuthapani — B. A. (Cey.)
18. ,, M. R. Marikkar — English Trained. First Class
19. ,, K. Siththiravelayutham — English Trained. First Class
20. ,, G. F. Louis — Science Trained. First Class
21. ,, R. Thurainayagam — Handicraft Trained. First Class
22. ,, N. Rajanathan — Maths. Trained
23. ,, S. Easwarathasan — Physical Trained Instructor
24. ,, R. Manoharan — G. C. E. A/L.
25. ,, S. Sriskandarajah — English Trained
26. Mrs. S. U. Rasheed Khan — Maths. Trained
27. Miss N. Natkunam — Music Trained

*Librarian:*

Mr. K. Nadarajah — Librarian. Qualified in Catalogueing & Classification

We congratulate the following for having been selected to pursue their professional studies :-

1. Mrs. N. Thirunavukkarasu B. Sc. (Cey.)
2. Mrs. Y. Thevasuntharam B. A. (Cey.)
3. Mr. S. Kirupairajah

**Non - Teaching Staff :**

1. Mr. K. Chithiravelu
2. Mr. K. Thirugnanasampanthan
3. Mr. T. Thiruparan

# விளையாட்டுத் துறை

எமது கல்லூரி கல்வி வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறதோ அதே அளவிற்கு விளையாட்டுத் துறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஒவ்வொரு மாணவனும், கல்வி அறிவுடன் விளையாட்டுத் துறையிலும் பங்கேற்று சிறந்த மாணவனாக வருவதற்கான எம்மாலான சகல நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. விளையாட்டுத்துறையை விருத்தி செய்வதற்காகப் பல ஆசிரியர்களைக்கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவுக்கும் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களைப் பொறுப்பாக நியமித்து, அதன்மூலம் ஒவ்வோர் துறையும் வளர்ச்சி அடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், உதைபந்தாட்டம், மென்பந்து கிரிக்கட், உள்ளக விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை பூரண வளர்ச்சி கண்டுள்ளது.

## மெய்வல்லுனர் நிகழ்ச்சி:

இல்லங்களுக்கான மெய்வல்லுனர் போட்டி 1981 மாசி மாதம் 20-ம் திகதி மைக்கெய்சர் விளையாட்டரங்கில் செல்வி சரஸ்வதி சுவாமிநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்ற மெய்வல்லுனர்களின் திறமை அதிகம் மேம்பட்டிருந்தது.

இப்போட்டியில் முதன்மை இல்லமாக இராமகிருஷ்ண இல்லம் 160 1/2 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானது.

வீர முதல்வர்களாக:

| | | |
|---|---|---|
| 13 வயது பிரிவில்: | ஜீ. ஞானேந்திரன் — | இராமகிருஷ்ண இல்லம் |
| 15 வயது பிரிவில்: | ஜீ. முருகையா — | விவேகானந்தா இல்லம் |
| 17 வயது பிரிவில்: | என். சுதர்சன் — | சிவானந்தா இல்லம் |
| 19 வயது பிரிவில்: | ஜே. எம். ரிஸ்வி — | இராமகிருஷ்ண இல்லம் |

தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இவ் விளையாட்டுப் போட்டியில் ஆறு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டது.

| | | | | | |
